# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 219 ஆனி 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 03 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ரெஜினாவுக்கு நீதி கோரி மன்னார் இன்று முடங்கும்

மன்னார், ஜூலை 3
யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் கொல்லப்பட்ட சிறுமி றெஜினாவுக்கு நீதி கோரி மன்னாரில் இன்று அமைதி வழிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. கடையடைப்பு » 25

## துப்பாக்கிச் சூடு பிணையில் சென்றவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 3
மல்லாகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து கைது செய்யப் » 23

# கூட்டரசால் ஏமாற்றம்

## வடக்கு வந்த அமைச்சர்களிடம் சுட்டிக்காட்டிய மாவை எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 3
நாம் ஒன்றுபட்டு பணிகள் செய்யவே கூட்டரசை ஆட்சிக்குக் கொண்டு வந்தோம். ஆனால் இப்போது ஏமாற்றமே அடைந்துள்ளோம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அபிவிருத்திகளில் அரசியல் செய்யாதீர்கள். உங்கள் அரசியலைத் தென்னிலங்கையில் செய்யுங்கள்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா » 06



"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. (21)

## காணிகளின் தரவுகளை ஆராய வந்த மாரப்பன!

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் விடுவிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பில் ஆராயவே யாழ்ப்பாணம் வந்தேன் என்று தெரிவித்தார் அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன. » 25

## சில நிமிடங்கள் மட்டுமே காணிகள் பற்றிப் பேச்சு

கிளிநொச்சி, ஜூலை 3
கிளிநொச்சிக்கு நேற்றுச் சென்றிருந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் மக்களின் காணிகள் தொடர்பில் சில » 25

## போலி உறுதிகளில் காணி விற்றால் சட்டநடவடிக்கை

### அமைச்சர் வஜிர எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போலி உறுதிகள் மூலம் காணிகளை விற்பனை செய்பவர்கள், காணிகளை அபகரிப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். » 25

## புலிகள் மீண்டும் வரவேண்டும் கொழும்பு அமைச்சர் தெரிவிப்பு

### தமது அரசின் இயலாமையை அவரே ஒப்புக் கொண்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 3
தமிழ்ப் பெண்கள், சிறுமிகள் பாதுகாப்பாக, உயிருடன் வீடு திருப்ப வேண்டுமானால், நாங்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்க வேண்டும். அது எமது நோக்கம். » 25

## கொலையா, தற்கொலையா? குழம்பிப்போன விஜயகலா

யாழ்ப்பாணம், ஜூலை 3
சுழிபுரம், காட்டுப்புலத்தைச் சேர்ந்த சிறுமி றெஜினா தற்கொலை செய்துகொண்டார் என்று நேற்று மேடையில் அமைச்சர்கள் முன் தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா.
சுழிபுரம், காட்டுப்புலத்தில் 6 வயதுச் சிறுமி றெஜினா பாலியல் வன்கொடுமையின் பின் கொலை » 06

## வடக்கு வன்முறைக்கு கூட்டரசே பொறுப்பு

### மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக நடக்கும் சமூக விரோதச் செயல்களுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா.
"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். » 25

## கட்சி தீர்மானிப்பவரை ஏற்று ஏனையோர் ஒதுங்கவேண்டும்

### வடக்கு முதலமைச்சர் விடயத்தில் சுமந்திரன் எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 3
கட்சி யாரை முதலமைச்சர் வேட்பாளர் என்று தீர்மானிக்கின்றதோ அந்தத் தீர்மானத்துக்கு » 06

## அதிகாரத்தைத் தாருங்கள் அடக்கிக் காட்டுகின்றோம்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடக்கில் இராணுவம் வெளியேற்றப்பட்டு, பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் இன்றைய வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரிய காரியமல்ல.
இவ்வாறு வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் » 06

## இளைஞர்கள் இணைந்தால் வன்முறையை நிறுத்தலாம்

### விழிப்புக் குழுக்களை அமைத்து செயற்பட வேண்டுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 3
எங்களிலிருந்தே எங்களைப் பாதுகாக்கவேண்டிய துன்பகரமான நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப் » 25

## வடக்கு மக்களின் தேவைகளை இருவாரங்களில் அறிய ஏற்பாடு

### உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

» 23

## பயங்கரவாதத் தடைச் சட்ட வரைபு அமைச்சரவைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 3
திருத்தியமைக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டச் சட்டவரைவு அமைச்சரவையில் இன்று சமர்பிக்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது. » 23

## இறுதிப் போரில் தவறவிட்ட நகைகள் பற்றித் தெரியாது

### தமிழ்க் கூட்டமைப்பு கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
போரின் இறுதியில் மீட்கப்பட்ட தமிழ் மக்களின் தங்க நகைகள் தற்போதைய அரசின் காலத்தில் வழங்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் எதுவும் தெரியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
தற்போதைய கூட்டு அரசை உருவாக்குவதில் முதன்மையாகச் செயற்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எதிர்கட்சியாக இருந்தபோதும் அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. இவ்வாறு செயற்படுகின்றபோதும் » 25

## வேலை அற்ற விரக்தியில் பட்டதாரி இளைஞர் சாவு

### தவறான முடிவால் சோகம்

தென்மராட்சி, ஜூலை 3
தவறான முடிவு எடுத்து பட்டதாரி இளைஞன் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டார். படித்தும் வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தி » 23

## ஓட்டாவில் இருந்தவர் திடீரென வீழ்ந்து சாவு

» 23

# சு.கவின் 16 உறுப்பினரும் கொள்கை அற்றவர்களே

## இலாபத்தின் பக்கம் சாய்பவர்களை எப்படி நம்புவது என்கிறார் பிரசன்ன

கொழும்பு, ஜூலை 3
சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர்கொண்ட அணியினர் அரசியல் கொள்கையற்றவர்கள். எந்தப் பக்கம் எல்லாம் இருக்கின்றதோ அந்தப் பக்கம் செல்பவர்கள்.
இவ்வாறு கடுமையாக விமர்சித்துள்ளார் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரசன்ன ரணதுங்க.
இலத்திரனியல் ஊடகமொன்றில் நடைபெற்ற அரசியல் நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்
பிரசன்னவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் வழங்கிய பதில்களும் வருமாறு:
**கேள்வி:** 16 பேர்கொண்ட அணிமீது எதற்காக இவ்வளவு வைராக்கியம் வைத்துள்ளீர்கள்?
**பதில்:** மகிந்தவை கைவிட்டுச் சென்றவர்கள்தான் 16 பேர்கொண்ட அணியில் இருக்கின்றனர். அவர்களிடம் அரசியல் கொள்கையில்லை. எந்தப் பக்கம் எல்லாம் இருக்கின்றதோ அந்தப் பக்கம் சாய்பவர்கள். மக்களுக்கும் அவர்கள் மீது நம்பிக்கையில்லை. மீண்டும் எம்மைக் காட்டிக்கொடுத்துவிடுவார்களோ என மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
**கே:** இவ்வாறு மக்கள் சந்தேகப்படும் நபர்களுடன் சிறிலங்கா பொதுஜன பெரமுன எந்த அடிப்படையில் பேச்சு நடத்தியது?
**ப:** அரசியல் கட்சிகளின் கதவு என்பது சலூன் கதவைப் போன்றதல்லவா?. வருபவர்களுக்கும் வெட்கமில்லை. அவர்களை உள்வாங்குபவர்களுக்கும் வெட்கமில்லை.
**கே:** 16 பேர்கொண்ட அணிக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் நீங்கள் ஏன் பங்கேற்கவில்லை?
**ப:** இது சம்பந்தமாக பசில் ராஜபக்ச எனக்கு அழைப்பை ஏற்படுத்தினார். கூட்டத்தில் பங்கேற்க விரும்பவில்லை. மக்களின் நிலைப்பாடும் இதுவாகத்தான் இருக்கின்றது எனக் கூறிவிட்டேன்.
**கே:** பொது எதிரணியில் இணைவதற்கு 16 பேர் கொண்ட அணியில் சிலர் விருப்பம் தெரிவித்துள்ளனரே?
**ப:** தேர்தல் காலத்தில் தாமரை மொட்டையும், அதன் வேட்பாளர்களையும் கடுமையாக விமர்சித்தார்கள். வெற்றிபெற்று காட்டுமாறும் சவால் விடுத்தனர். தற்போது எந்த முகத்துடன் இணைகின்றனர்?
**கே:** அரச தலைவர் தேர்தலின்போது ஒரு வாக்குக்கூட முக்கியத்தும் பெறுகின்றது. அப்படியிருந்தும் இவர்கள் பொது எதிரணிக்கு வருவதை ஏன் எதிர்க்கின்றீர்கள்?
**ப:** அவர்களை இணைத்தால் வாக்கு வங்கி அதிகரிக்குமா அல்லது இல்லையா என்பது பற்றி ஆராயவேண்டும். சிலவேளை, எமது அணி இரண்டாக உடைந்தால்?
**கே:** நீங்கள் பசிலின் தாளத்துக்கேற்ப ஆடுபவர் எனக் கூறப்படுகின்றதே?
**ப:** நான் மனச்சாட்சியின் பிரகாரம் செயற்படும் அரசியல்வாதி. (ந)

# மன்னாரில் மீண்டும் அகழ்வுகள் ஆரம்பம்

மன்னார், ஜூலை 3
மன்னார் சதொச வளாகத்தில் இரு நாள்களின் பின்னர் நேற்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மன்னார் நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் சிறப்பு சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தலைமையில் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. களனி பல்கலைக் கழகப் பேராசிரியர் ராஜ்சோமதேவாவும், அவரது குழுவினரும் அகழ்வுப் பணிகளில் இணைந்துள்ளனர்.

அகழ்வு செய்யப்பட்ட பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளே நேற்று முன்னெடுக்கப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து காணப்படுவதால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட எலும்பு எச்சங்களை அகற்ற வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்டுகின்றது. நீதிமன்ற அனுமதியுடன் அவை அகற்றப்பட்டு, நீதிமன்றத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டு, அகழ்ப்புப் பணிகள் முழ்நத்தும் பகுப்பாய்வுக்கான அனுப்பப்படும் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, அகழ்வு செய்யப்படும் பிரதேசத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. வளாகத்தின் முகப்பு பகுதியில் அகழப்பட்டபோது அங்கும் எலும்பு எச்சங்கள் தென்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-56,60)





# வாகன விபத்தில் குழந்தை சாவு இருவர் படுகாயம்

மட்டக்களப்பு,ஜூலை 3
மட்டக்களப்பு வெல்லாவெளியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர்.
இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
முச்சக்கரவண்டியும் கன்ரர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.
படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
கன்ரர் வாகனத்தை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)



# மருந்தகம் திறக்கும் நிகழ்வு

மன்னார்,ஜூலை 3
மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மடு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 'மடு சித்த மத்திய மருந்தகம்' நேற்றுத் திறக்கப்பட்டது.
இதனை வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் திறந்தார்.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின்கீழ் சுமார் 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த மருந்தகம் அமைக்கப்பட்டது.
இதில் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ் பிள்ளை, மடு பிரதேசச் செயலாளர், மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உதவி ஆணையாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந,ரி4,56)

# உயர்தரம் சித்தியடைந்த மாணவருக்குப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 3
2017ஆம் ஆண்டு கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மடிக் கணினி மற்றும் 50 ஆயிரம் ரூபா புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றது. ஹாட்லி கல்லூரி மாணவன் ஸ்ரீதரன் துவாரன், யாழ்ப்பாண புனித பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ரேமன் டேசியஸ், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி மாணவி கமலேஸ்வரி செந்தில்நாதன் ஆகியோருக்கே இவை வழங்கப்பட்டன.
மாகொல சிங்க கழகத்தில் பணிப்பாளர் வீரமாதா சிங்க சாந்தனி சமரவீர, மாகொல சிங்க கழகத்தில செயளாலர் உட்பட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ந)



# மக்கள் சேவைத் திட்டம் பயனுள்ளதாக அமையும்

## யாழ். மாவட்ட செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச தலைவரின் மக்கள் சேவை செயற்றிட்டம் பயனுள்ளதாக அமையும். இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"அரச தலைவரின் மக்கள் சேவை" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது. அதைத் தொடர்ந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் அரச அதிகாரிகளுக்கும் இடையே யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர்,தலைமை அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் உள்நாடு அலுவல்கள் அமைச்சு இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பதே. உத்தியோகத்தர்கள் மக்களிடம் நேரில் சென்று அறிந்து தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த திட்டம் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப் படவுள்ளது. அதற்கு அனைத்து அதிகாரிகளின் ஒத்துழைப்பு வேண்டும். என்றார். (ற-7)



பிரபல சினிமா நடிகரும் திரைப்பட இயக்குநருமான காலஞ்சென்ற ரோய் டி. சில்வாவின் பூதவுடலுக்கு அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார். (ற,ரி2)

## தேன் எடுக்கச் சென்றவர் யானை தாக்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜூலை3

தேன் எடுக்க காட்டுக்குச் சென்றவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தேற்றுக் காலை வாகரை கட்டுமுறிவு வனாந்தரப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் கட்டுமுறிவுப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை வேலன் நவரெட்ணம் (வயது 29) என்பவரே கொல்லப்பட்டுள்ளார். என்று வாகரைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.என்.ஐ. திஸாநாயக்க தெரிவித்தார்.

தற்போது காட்டுத் தேன் சேகரிக்கும் காலமானதால் இவர் காலை வேளையில் தேன் எடுக்கும் நோக்கத்துடன் அங்கு சென்றுள்ளார். இதன்போதே, காட்டுயானை இவரை எதிர்கொண்டு தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற,ரி2,46)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 15 பேர் மருத்துவமனையில்

நுவரெலியா,ஜூலை.3

தோட்டத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இதில் 15 பேர் மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சேர்க்கப்பட்டனர்.

மஸ்கெலியா பிரவுண்ஸ்வீக் தோட்டத்தின் குயின்ஸ்லேண்ட் பிரிவில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே. இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகினர் எனக் கூறப்பட்டது. (ற,ரி4)

## வயிற்றில் உயிரிழந்த சிசு: இரு நாளில் தாயும் சாவு

திருகோணமலை,ஜூலை3

குழந்தை சாவடைந்து. இரண்டு தினங்களில் தாயும் உயிரிழந்த சம்பவமொன்று திருகோணமலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா. மதீனா நகரைச் சேர்ந்த 35 வயதான ராபிக் மாயிலா என்ற பெண்ணொருவரே உயரிழந்தவராவார். தனது குழந்தையின் பிரசவத்துக்கு சில தினங்களே இருந்த நிலையில் திடீரென காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இப் பெண் கிண்ணியா தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து. மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை குழந்தை வயிற்றுக்குள் இருக்கும்போதே இறந்ததால். அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை வெளியே எடுக்கப்பட்டது. எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிறகு. தீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையில். சிகிச்சை பயனின்றி தாயும் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இவர் இரண்டு ஆண் பிள்ளைகளின் தாயாராவார்.

இவரது கணவர் ஒரு மீனவராவார். இது குறித்து மேலதிக பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற,ரி2)

## கைக்குண்டு தாக்குதலில் நால்வர் படுகாயம்

கொழும்பு,ஜூலை3

வீடொன்றின் மேல் வீசப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில், நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு குளியாப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த நால்வரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களுள் பெண்ணொருவரும் அடங்குவதாகவும், தனிப்பட்ட தகராறே இந்த கைக்குண்டுத் தாக்குதலுக்கு காரணமென்றும், தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில், அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைத் தாம் முன்னெடுத்து வருவதாகவும் குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். (ற,ரி2)

## பாடசாலையில் குளவிக்கூடுகள் அச்சத்தில் ஆசிரியர் மாணவர்கள்

மன்னார், ஜீலை3

பாடசாலைக் கட்டடங்களில் ஆபத்தை விளைவிக்கும் குளவிக்கூடுகள் காணப்படுவதால், பெற்றோர்கள் பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விடத்தல்தீவு புனித யோசப்வாஸ் மகா வித்தியாலயத்துக்குச் சென்ற மாணவர்களே வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

நேற்றுப் பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் பாடசாலைக் கட்டடங்களில் உள்ள குளவிக்கூடுகள் கலைந்ததால் அச்சமடைந்துள்ளனர்.

இதனைக் கேள்வியுற்ற பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்று விட்டனர்.

இதனையடுத்து. பாடசாலைக்குச் சென்ற மடு வலயக்கல்வி அலுவலர் மற்றும் இடர் முகாமைத்துவக் குழுவினர் நேற்று மாலை ஏழு மணிக்கு முன்பதாக குளவிக் கூடுகளை அப்புறப்படுத்தித் தருவதாக தம்மிடம் வாக்குறுதி அளித்துள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

இப் பாடசாலையில், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக ஆபத்தை விளைவிக்கும், பெரிய அளவிலான குளவிக் கூடுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சென்ற வாரம் ஏழாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி2,213,56)

## போசணை மட்டத்தை அதிகரிக்க பிஸ்கட்கள் வழங்கி வைப்பு



கொழும்பு,ஜூலை3

களுத்துறை மாவட்டத்தில் அரபொலகந்த தோட்டசிறார்களுக்கு பிஸ்கட்கள் வழங்கப்பட்டன.

பெருந்தோட்டச் சிறார்களின் போசணை மட்டத்தை அதிகரிப்பதற்கான 'டிகிரி சக்தி' பிஸ்கட் வழங்கும் திட்டத்தின் கீழ், சிறார்களுக்கு பிஸ்கட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இதனை சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச. மருத்துவத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வழங்கி வைத்தார். 2 தொடக்கம் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு, பிஸ்கட்கள் விநியோகிக்கப்பட்டன.

நிகழ்வில், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பின்னகொட வித்தான, மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலர் ரஞ்சினி நடராஜ பிள்ளை மற்றும் மனிதவள நிதியத்தின் தலைவர் புத்திரசிகாமணி உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற,ரி2)

## மழலைகளின் விளையாட்டுநிகழ்வு



யாழ்ப்பாணம்.ஜூலை 3
யாழ்ப்பாணம், அரியாலை பூம்புகார் சண்முகாமுன்பள்ளிமழலைகளின்விளையாட்டு நிகழ்வு அண்மையில் பூம்புகார் பாடசாலை மைதானத்தில் பூம்புகார் சனசமூகநிலையத் தலைவர் சி. அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணமும், சிறப்புவிருந்தினர்களாக சட்டத்தரணிஜொனிமதுரநாயகம், தாங்கும் கரங்களின் காப்பாளர் அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

கல்லூரி முதல்வர் சிவந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ. இளங்கோ கலந்துகொள்ள உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (21,250)

## பிறந்த தின நிகழ்வும் பரிசளிப்புவிழாவும்

யாழ்ப்பாணம்.ஜூன்.3
யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்களின் 134 ஆவது பிறந்ததினநிகழ்வும்பரிசளிப்பும் சங்கஆராதனை மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு தலைவர் வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற்துறை பேராசிரியர் சுபதினி ரமேஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

# மாடுகள் கடத்தும் மாபியா வடமராட்சியில் அராஜகம்

பருத்தித்துறை, ஜூலை 3
**வடமராட்சியின் சில இடங்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் இனந்தெரியாதோரால் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று பிரதேசமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் கடத்தப்பட்டு அயலில் உள்ள பற்றைக் காடுகளில் வெட்ட்டப்படுகின்றன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.**

இந்தவிடயம்தொடர்பாகபொலிஸார்மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரிடம் முறையிட்டும்பயன்கிடைக்கவில்லை. கடத்தப்படும் மாடுகள் வெட்டப்பட்டு வடமராட்சிப் பகுதியில் உள்ள உணவகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

“ஏனைய சுகாதாரமருத்துவஅதிகாரிப்பிரிவுகள்மற்றும்உள்ளூராட்சிசபைகளால்கடைப்பிடிக்கப்படும் மாடுகள் தொடர்பான எந்தவொரு நடைமுறைகளும் இங்கு பின்பற்றப்படுவதில்லை. இந்தப் பகுதிகளில் இயங்கும் இறைச்சிக் கடைகள் தாம் நினைத்த இடத்திலும் இறைச்சிக் கடைக்குள்ளும் மாடுகளை வெட்டி இறைச்சியை விற்பனை செய்கின்றனர். உள்ளூராட்சி சபைகளால் கொல்களவசதிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளபோதிலும் இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்போர் அதனைப் பயன்படுத்துவதில்லை.

ஏனையசுகாதாரமருத்துவஅதிகாரிபிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் வெட்டப்படும் மாடுகள் தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் மாடு பொதுவான இடத்தில்கட்டப்பட்டுகால்நடைமருத்துவரால் சிபார்சுசெய்யப்பட்டபின்னர்இறைச்சிக்காக வெட்டப்படல் வேண்டுமென்ற நடைமுறையைக்கடைப்பிடிக்கின்றன. ஆனால்அவ்வாறானநடைமுறைகள்வடமராட்சிப்பிரதேசத்தில் இல்லை.

கடந்தஏப்ரலில்உடுப்பிட்டிப்பகுதியில்உள்ள மாட்டிறைச்சிக் கடையில் பழுதடைந்த இறைச்சி விற்பனை செய்தமைக்காக கடை சீல் வைக்கப்பட்டது.

இருவாரங்களுக்குமுன்னர்சந்தைஒன்றில் இயங்கிய மாட்டிறைச்சிக் கடைக்குள் வைத்து பசு மாடு வெட்டியதற்காக அது சீல்வைக்கப்பட்டது.

இதன்பின்னர்மாட்டிறைச்சிஇங்குள்ளஉணவகங்களுக்கு வழங்கப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றபோதிலும் அவை எங்கிருந்து கொண்டு வரப்படுகிறன என்று தெரியாது. இதற்குப்பொலிஸார்நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பிரதேச பொது சுகாதாரப்பரிசோதகர் தெரிவித்தார். (49)

## “உண்மை இருப்பு” ஒவியக் காட்சி

யாழ்ப்பாணம்.ஜீலை. 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் “ உண்மை இருப்பு “ என்னும் தலைப்பிலான 3 ஓவியர்களின் ஓவியக் காட்சி புதிய கலைப்பீடகட்டடத்தொகுதியில் நாளைபுதன்கிழமைதொடக்கம்எதிர்வரும் 11ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது இளம் ஓவியர்களான அ. கத்தரினா, பி. யோ. கேம, சிரோனி, வி. விமல் போன்றவர்களின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இறுவட்டு வெளியீடு

இணுவில்,ஜூலை 3
இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவ்சுப்பிரமணியர்சுவாமிகோயில்‘மஞ்சத்தடி முருகன் அருட்பாமாலை இறுவட்டு வெளியீடு ஆலய மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ஆலயபரிபாலன சபைச்செயலாளர் தியாகராசா சந்திரகாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் சுகுணறதி தெய்வேந்திரம், செஞ்சொற்செல்வர்கலாநிதிஆறுதிருமுகன்ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகஆலயப்பரிபாலசபையினர் அறிவித்துள்ளனர்.

## முருகமூர்த்தி கோவில் கொடியேற்றம் இன்று

காரைநகர்,ஜூலை3
காரைநகர் களபூமி திக்கரைமுருகமூர்த்தி கோவில் வருடாந்தத் திருவிழா இன்று செவ்வாய்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இந்த உற்சவத்தில் மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமையும் தேர்த்திருவிழா 11ஆம்திகதிபுதன்கிழமையும்தீர்த்தத் திருவிழா 12ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம்பெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21,250)

## சுகாதார நிலை சீர்கேடு உணவகம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 3
சுகாதாரசீர்கேடுகாரணமாகயாழ்ப்பாணப் பொது நூலக சிற்றுண்டிச்சாலை தற்காலிகமாகமூடப்பட்டது. பொதுச்சுகாதாரப்பரிசோதகரின்பரிந்துரைக்கமைய அதைத்திருத்தியமைக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்று உத்தரவிட்டது. இந்தவழக்கு மேலதிகநடவடிக்கைகளுக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதுதவிர, ஆரியகுளம் சந்தியில் சைவ உணவகத்துக்குஎதிரானவழக்கில், குறித்த உணவகத்தினர்திருத்தவேலைகள்பூர்த்தி அடைந்திருப்பதாகவும் 14 தொழிலாளர்களில் 08 பேர்மருத்துவசான்றிதழ்பெற்றிருப்பதாகவும், மருத்துவசான்றிதழ்பெறாதோர் வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்துமருத்துவச்சான்றிதழ்பெற 10 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு ஒவ்வொருநாளும்குறித்தஉணவகத்தைப் பொது சுகாதார பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுச் சுகாதாரப்பரிசோதகருக்குநீதிமன்று அறிவுறுத்தல் வழங்கியது.

இந்த வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. யாழ்ப்பாண நகரிலுள்ள மருந்தகம் ஒன்றில் திகதி காலாவதியான மருந்துகளை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்துக்காக ஆயிரம்ரூபாதண்டம் விதித்தது நீதிமன்று. (4,115)

## முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாணமுகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமையாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. எனவே எதிர்வரும் 11ஆம்திகதிக்குப்பின்னரும் அனுமதி அட்டைகள்கிடைகாங்கப் பெறாத விண்ணப்பதாரிகள் “செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம், இல: 393/48 கோவில் வீதி, நல்லூர், யாழப்பாணம் "என்னும்முகவரியுடனோ 0212219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறுகோட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாண வலையத்துக்குட்பட்ட புனித றோக்ஸ் வித்தியாலயம் வகை - II, நீர்வேலி தெற்குஇ.த.க.பாடசாலைவகை-IIIபாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ்ப்பாண வலயத்தில் கடைமையாற்றும் அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணபங்கள் கோரப்படுகின்றன.

வகை - II பாடசாலைகளுக்கு வகுப்பு 2 ஐச் சேர்ந்தஅதிபர்களும்வகுப்பு2அதிபர்கள்விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும்விண்ணப்பிக்கலாம்.

வகை - III பாடசரலைக்குக்கு தற்போது அதிபர் சேவை வகுப்பு 3ஐச் சேர்ந்த அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவர்களாக இருப்பதுடன் தற்போது அதிபராகக்கடைமையாற்றுபவர்கள் அதே பாடசாலையில் மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பங்களை யாழ்ப்பாணக் கல்வி வலைய பொது நிர்வாகக் கிளையில் பெற்று பூர்த்திசெய்துஎதிர்வரும்17ஆம்திகதிக்குமுன்னர் வலையக் கல்வி அலுவலகததில் சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கேட்டுக் கொண்டுள்ளார். (21)

# மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 3
தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையினால் கடந்த வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமைபிற்பகல் 3மணிக்குநடை பெறவுள்ளது.
2017 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற வங்கியில் ஹப்பன் கணக்கு வைத்துள்ள 60 மாண வர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்படவுள்ள னர்.
கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ந.பகீரதனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயஆரம்பப்பிரிவுஉதவிக்கல்விப்பணிப் பாளர்சோ.திருக்குமரனும்மதிப்புறுவிருந்தி னராக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட சாலைஅதிபர்பொ.நடேசலிங்கமும்கலந்து கொள்ளவுள்ளனர். (9)



யாழ்ப்பாணம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் மாணவத் தலைவர் களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல் லூரி மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. கல்லூரி அதிபர் எஸ். கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் கலந்துகொண்டார். (422)

# டெங்குவின் தாக்கம் குறைவடைந்துள்ளது

தென்மராட்சி, ஜூலை 3
பிரதேசமக்களின்ஒத்துழைப்பு மற்றும்டெங்குக்கட்டுப்பாடு தொடர்பான சிறப்புப்பயிற்சிபெற்றதொண்டர்களின் அர்ப்பணிப்பானசேவையினா லும்தென்மராட்சிப்பிரதேசத்தில்டெங்குவின்தாக்கம்குறைவடைந்துள்ளது எனசாவகச்சேரிசுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவினர்குறிப்பிட்டுள்ளனர்.

பிரதேசத்தில் டெங்குவின் தாக்கம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு வீழ்ச்சியடைந்துள் ளது. இதற்குப்பிரதேசமக்கள் வழங்கியமுழுமையானஒத் துழைப்பேகாரணம்என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
கடந்த வருடம் முழுவதும் டெங்கினால்னால் 685 பேர் பாதிக்கப்பட்டனர்இதில்முதல் ஆறு மாதங்களில் 424 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டி ருந்தனர்.
இந்த வருடத்தில் முதல் ஆறு மாதத்தில் (ஜனவரி தொடக் கம் ஜூன் வரை) 114 பேரே பாதிப்புக்குஉள்ளாகிச்சிகிச்சை பெற்றுள்ளனர்.
இவர்களில் மே மாதத்தில் தென்பகுதியில் பெய்த பெரு மழை வெள்ளப் பெருக்குக் காரணமாக அங்கு தங்கியி ருந்த மாணவர்கள்; தொழி லுக்காகச் சென்றோர்; சுற்றுலா சென்றோர் என டெங்கினால்பீடிக்கப்பட்டு45 பேர்சிகிச்சைபெற்றுள்ளனர்.
கடந்தவருடம்தென்மராட்சிப் பிரதேசம் அதியுயர் டெங்கு வின் தாக்கம் உள்ள பிரதேச மாக நடுவண் சுகாதாரத் திணைக்களடெங்குக் கட்டுப் பாட்டுப்பிரிவினரால்அறிவிக் கப்பட்டிருந்தது.
அதன் பின்னர் நடுவண் மற் றும் மாகாண சுகாதார அமைச்சின்உத்தியோகத்தர் கள் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் சாவ கச்சேரி நகரசபையினர் போன்றோர் மேற்கொண்ட சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பயனாக டெங்குவின்தாக்கம்குறைவ டைந்திருந்தது. பொதுமக்கள் இவ்வாறானஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவார்களா யின் நிச்சயம் டெங்குவின் தாக்கத்தைபிரதேசத்திலி ருந்து முற்றாக இல்லாதொ ழிக்கமுடியும் - என்றார்.
டெங்குவின் தாக்கம் பிரதே சத்தில் குறைந்துள்ள போதி லும்பொதுச்சுகாதாரப்பரிசோ தகர்களும்சுகாதாரத்தொண் டர்களும் தொடர்ச்சியாக கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்குப் பரிசோதனையில் ஈடுபட்டுவருகின்றனர். (9)





## வேள்விப்பொங்கல்

புலோலி, ஜூலை 3
யாழ்பாணம், புலோலி குரும்பைசிட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த வேள்விப் பொங்கல் நிகழ்வு கடந்த சனிக்கிழமைசிறப்பாகநடைபெற்றது.
முதல் நாள் வெள்ளிக்கிழமை இரவு வளந்து பூசையுடன் ஆரம்பமாகி மறு நாள் சனிக்கிழமை மாலை 3 மணிய ளவில் வேள்விப் பூசையுடன் நிறைவு பெற்றது.
பக்தர்கள் நேர்த்திக்காகக் காவடி, பாற் செம்பு எடுத்தும். பொங்கல், வடை மாலை பரவி ஆட்டுக்கடாய்கள், சேவல்களை நேந்து விட்டு வைரவப் பெருமானை வழிபட்டனர்.
இறுதியில் ஆட்டுக்கடாய்கள், சேவல் கள் ஏலத்தில் விற்கப்பட்டன. (124)



யாழ்ப்பாணம்புலோலிபுற்றளைசித்திவிநா யகர்ஆலயபெருந்திருவிழாவின்தேர்த்திரு விழாகடந்த26ஆம்திகதிசெவ்வாக்கிழமை இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக் கானஅடியார்கள்கலந்துகொண்டனர். (124)

## பரிசில் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3
வட்டுக்கோட்டையாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி முதல்வர் வண. கலாநிதி டி.எஸ். சொலமன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தி னராகமானிப்பாய்ஏஞ்சல்பாடசாலை யின் அதிபர் என்.ஏ. விமலேந்திரன் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தி னார்.
முதன்மை விருந்தினரின் பாரியார் அனோஜா விமலேந்திரன் பரிசில்க ளையும், விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார். (50)



## குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பணம் இந்துக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில்வருடாந்த குருதிக்கொடை நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிவிடுதி மண்டபத்தில்அண்மையில்இடம்பெற் றது. இந்த நிகழ்வில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என 75 க்கும் மேற்பட்டோர் குருதிக் கொடை வழங்கினர். (114)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்புநிகழ்வும்

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந் துக்கல்லூரியின் நிறுவுநர் தின மும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூ ரியின்முதன்மைமண்டபத்தில் நாளை புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு முதல்வர் சி. இந்திர குமார்தலைமையில்இடம்பெற வுள்ளது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பழையமாண வர்ஏ. திருமூலர். சிறப்புவிருந்தி னராக சண்டிலிப்பாய்க் கோட் டக்கல்விப்பணிப்பாளர்ச.சிவா னந்தராஜா, மதிப்புறு விருந்தின ராக பழைய மாணவர் எஸ். கோடீஸ்வரன்ஆகியோர்கலந்து கொள்ளவுள்னர்.

## இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வு

ஊர்காவற்றுறை, ஜூலை 3
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தின் வருடாந்த இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுநிகழ்வின்இறுதிப்போட்டிகள் நாரந்தனை அண்ணா விளையாட்டுகழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.
இளைஞர் கழகச் சம்மேளத்தின் தலைவர் கோகுலன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவா னந்தா கலந்துகொண்டார்.
இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறைப்பிரதேச செயலக பிரதேச செயலர் மஞ்சுளாதேவி சதீஸன், ஊர்காவற்றுறைப் பிரதேச சபை யின் தவிசாளர் ம. ஜெயகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (138)

## முன்பள்ளிச்சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் நிலையத்தலைவர் செ.கு.சண்முகநாதன்தலைமையில்இடம் பெற்றது. இந்தநிகழ்வுக்குமுதன்மைவிருந் தினராகவடக்குமாகாணசபைஉறுப்பினர் பா.கஜதீபனும், சிறப்பு விருந்தினர்க ளாக வலி.கிழக்குப் (கோப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன், ச.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் சிறார்களின் விளையாட்டு மற் றும்கலைநிகழ்வுகள்இடம்பெற்றன. வெற் றிபெற்றவர்களுக்கான பரிசில்க ளும் விருந்தினர்களால் வழங்கி வைக் கப்பட்டன.
அத்துடன் வலி.கிழக்கு(கோப்பாய்)பிரதே சசபை உறுப்பினர் சி.அகீபனின் கோரிக் கையின்பேரில், வடமாகாணசபைஉறுப் பினர்பா.கஜதீபனின் 2018ஆம்ஆண்டுக் கான நிதியொதுக்கீட்டிலிருந்து ஒரு இலட் சம் ரூபா பெறுமதியான வீதி விளக்குகள் சனசமூகநிலையத்தினரிடம்கையளிக்கப் பட்டன.



## கட்சி...

அனைவரும் கட்டுப்பட்டு, மக்களுடைய ஒற்றுமையை மனதில் வைத்து, தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கிவிடவேண்டும். அதற்கு மிகப் பெரும் முன்னுதாரணமாக மாவை.சேனாதிராசா செயற்பட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இலக்குவைத்தே இந்தக் கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளியிட்டுள்ளார் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் களமிறக்கப்படாவிட்டால், அவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கடந்தமுறை ஒதுங்கியதைப் போன்று அமைதியாக ஒதுங்கிவிடவேண்டும் என்பதை அவர் மறைமுகமாக இப்படிச் சுட்டிக்காட்டியுள்ளார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒற்றுமையாக இருப்பது என்பது வேறு விடயம். அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் என்பது வேறு விடயம். யாரை முதலமைச்சர் வேட்பாளராகத் தீர்மானித்தாலும் அந்த முடிவுக்கு எல்லோரும் கட்டுப்படவேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடு.

2013ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்சிகளும் இணைந்து மாவை.சோ.சேனாதிராசாதான் முதலமைச்சர் வேட்பாளர் என்று தீர்மானம் எடுத்தார்கள். அன்றைய சூழ்நிலையைக் கருதி. அந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று கட்சித் தலைவர் சம்பந்தன் விரும்பினார். விக்னேஸ்வரனை முன்வைத்த போது, மாவை.சேனாதிராசா, தன்னுடைய வாழ்க்கை முழுவதும் என்ன விதமாகப் பலபல தியாகங்கள் செய்தாரோ அன்றைக்கும் அதே மாதிரியாக தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும் நன்மைக்காகவும் தியாகம் செய்து விட்டுக் கொடுத்தார்.

அதே போன்றுதான் எல்லோரும் செயற்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். இன்றைய சூழ்நிலையில் இந்தப் பதவிக்கு கிழக்கு மாகாணத்துக்கு இவர் முதலமைச்சர் வேட்பாளர், வடக்கு மாகாணத்துக்கு இவர் முதலமைச்சர் வேட்பாளர் என்று கட்சி தீர்மானிக்கின்ற போது அந்தத் தீர்மானத்துக்கு அனைவரும் கட்டுப்பட்டு மக்களுடைய ஒற்றுமைதான் முக்கியமானது என்பதை மனதில் வைத்து, தங்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை ஒரு பக்கத்தில் வைத்து முன்வரவேண்டும். அதற்கு மிகப்பெரிய முன்னுதாரணமாக ஏற்கனவே மாவை.சேனாதிராசா செயற்பட்டுள்ளார். அதைப்போன்று மற்றவர்களுக்கு உகந்த நேரங்களிலேயே செயற்படவேண்டும் என்பது எங்களது விருப்பம் என்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் கூட்டமைப்பில் அடுத்த முறை களமிறக்கப்படமாட்டார் என்று முன்னர் தெரிவித்த நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் உண்டா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

கட்சி முடிவாக அதை நான் அறிவிக்கவில்லை. கட்சியின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் என்ற வகையில், கட்சியின் நிலைப்பாட்டை ஓரளவு விளங்கிக் கொண்டவன் என்ற அடிப்படையில் நான் அதைச் சொல்லியிருந்தேன். இனிமேல், கட்சி தீர்மானம் எடுக்கின்றபோது அதனை அறிவிப்பதுதான் உகந்ததாக இருக்கும். என்னுடையதனிப்பட்ட நிலைப்பாடு, விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்பதுதான்- என்றார்.

ஏன் அவரை நிறுத்தக் கூடாது என்று நீங்கள் கருதுகின்றீர்கள் என்று மீண்டும் கேள்வி எழுப்பியபோது, வடக்கு மாகாண சபையில் இதுவரையில் செய்யக் கூடியவற்றைக் கூட அவர் செய்யவில்லை. தான் சார்ந்த கட்சியுடன் ஒத்துழையாமல் தனிப் பாதை பின்பற்றியதும், கட்சி அரசியலில் தேர்தல் காலங்களில் தன்னுடைய கட்சிக்கு எதிராகச் செயற்படுகின்ற எவரும், அந்தக் கட்சியில் தொடர்ந்து இருப்பது எங்கேயும் காணமுடியாதுவிசித்திரம். அந்தவிசித்திரமும்வெகு விரைவில் முடிவுக்கு வரவேண்டும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கைக்கு மாறாகக் கட்சி செயற்படுவதாக வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மறுத்தார்.

'நாம் கொள்கையில் பிறழவில்லை. முதலமைச்சர் முன்வைக்கும் குற்றச்சாட்டு வெற்றுக் குற்றச்சாட்டு' என்றார் சுமந்திரன்.

### அதிகாரம் உண்டு

டெனீஸ்வரனுக்கு எதிரான வழக்குத் தொடர்பில் தவறான கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. அமைச்சர்களை நியமிக்கும், நீக்கும் அதிகாரங்கள் முதலமைச்சருக்கே உரியது. நீதிமன்றம் இந்த வழக்கில் ஆளுநருக்கு அந்த அதிகாரங்கள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் நீக்கும் அதிகாரங்களை எப்படிப் பிரயோகிப்பது என்பதிலேயே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். (ந-5)

## கூட்டரசால்...

ளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா.

"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தச் சேவையை நாம் வரவேற்கின்றோம். தென்னிலங்கையை விட எமது பிரதேசம் போரால் மிகப் பாதிப்படைந்த பிரதேசமாகும். கடந்த தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை உயர்ந்த மனதுடன் தமிழ் மக்கள் அரச தலைவராகத் தெரிவு செய்தனர். தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க வும் தெரிவுசெய்யப்பட்டார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், கூட்டரசும் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் வழி தவறியுள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒருபுறமும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒரு புறமும் என்று கடமையாற்றுகின்றனர். இது எமது மக்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்றது.

இரு முதன்மைக் கட்சிகளும் இணைந்து செயலாற்றவே கடந்த தேர்தல் அறிக்கையின்படித் தமிழ் மக்கள் வாக்களித்தனர். நாங்கள் உங்கள் அமைச்சரவைப் பங்காளிகள் அல்ல. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்றவே ஆதரவு தந்தோம். மக்களின் தேவைகளை நிறைவேற்ற வரும் உங்களை வரவேற்றாலும் நாம் மனவருத்தத்திலேயே உள்ளோம்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேர்தலில் வெற்றி பெற்ற மகிழ்வில் 2016 ஆம் ஆண்டு முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் 14 ஆயிரம் மில்லியன் ரூபா வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 9 ஆயிரம் மில்லியன் ரூபா, அதன்பின்னர் வரவு செலவுத் திட்டத்தில் 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. கடந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்னர் ஒதுக்கப்பட்ட மூன்றில் ஒரு பங்கு நிதி கூடக் கிடைக்காத நிலையில் நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். உள்நாட்டு அமைச்சு, தலைமை அமைச்சரிடம் பல தடவை பேசினோம். எமது மக்களுக்கு என்ன தேவை என்பதை விவரித்தோம். ரணிலுக்கு எதிரான நம்பிகையிலாத் தீர்மானத்தின் போது அவர் 12 முக்கிய விடயங்களைக் கருத்தில்எடுப்பேன் என்று எமக்கு அறிக்கை ஒன்றைத் தந்தார். நாம் அவருடன் எந்த ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. மக்கள் நலன் சார்ந்தே அரசுடன் இணைந்து பயணிக்கின்றோம்.

இந்த நிகழ்வுக்கு நாம் விருந்தினராகக் கலந்து கொண்டு கொழும்பில் இருந்து வந்துள்ள உங்களை வரவேற்றாலும் நாம் மனதளவில் மகிழ்ச்சி அடையவில்லை. எமக்குக் கூறப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. காணிகள் விடுவிப்பு திருப்தியாக அமையவில்லை.

இங்குள்ள உள்நாட்டு விவகார அமைச்சரை நேரடியாகவே கேட்கின்றேன். எமது பிரதேசங்களில் உள்ள திணைக்களங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஊழியர்களை நியமிக்க வேண்டாம். எமது இளைய சமுதாயத்தை நியமியுங்கள் என உங்களிடம் நேரடியாகவும் சந்தித்து வலியுறுத்தி இருந்தோம். அதற்கு உடன்பட்டீர்கள். ஆனால் நடப்பது என்ன?. வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு என அரச தலைவர் செயலணி ஒன்றை உருவாக்கியுள்ளார். தமிழ்க் கூடமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கவில்லை. இதற்கு நாம் கண்டனம் தெரிவித்துள்ளோம். அதில் உள்ளீக்கக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். மைத்திரி வடக்குக்கு வந்து அதிகாரிகளுடன் வந்து ஒரு கூட்டம் வைக்கிறார். சில நாளில் ரணில் வந்து கூட்டம் வைக்கின்றார். உங்கள் அரசியலை தென்னிலங்கையில் செய்யுங்கள். போரால் பாதிக்கப்பட மக்களுக்கு கிடைக்க வேண்டிய அபிவிருத்திகளில் அரசியல் செய்யாதீர்கள். என்றார்.

நிகழ்வில் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன,உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன,சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா, வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-8)

## கொலையா...

செய்யப்பட்டார். சிறுமிக்கு நீதிகோரிப் பல இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சம்பவ இடத்துக்கு வரவில்லை என்றும், ஆறுதல் தெரிவிக்கக் கூட அந்தப் பக்கம் வரவில்லை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் "உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.

"உண்மையிலேயே ஒரு பெண் எவ்வளவு துன்பத்துக்கு உள்ளாகின்றாள் என்பது பெண்ணுக்கே விளக்கும். ஆணுக்கு விளங்கமாட்டாது. 6 வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு தற்கொலை செய்யப்பட்டுள்ள இந்த நிலையில் எதற்காக உத்தியோகபூர்வப் பணி இந்த மாவட்டத்துக்கு?" என்று அமைச்சர்களிடம் கேள்வி எழுப்பினார்.

சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயின்ற சிவனேஸ்வரன் றெஜினா (வயது 6) கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் சிறுமியின் சடலம் உடற்கூற்றுக்கு உட்படுத்தப்பட்டு, சட்ட மருத்துவ அதிகாரியால் அறிக்கையிடப்பட்டது.

"சிறுமி கயிற்றால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது உடலில் வன்கொடுமைக்கான தடயங்கள் உள்ளன. எனினும் வன்புணர்வுக்குட்படுத்தப்படமைக்கான தடயம் இல்லை" என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

சிறுமி தற்கொலை செய்தாள் என்று மாறுபட்ட தகவலை மகளிர் விவகாரங்களுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-21,8)

## அதிகாரத்தை...

8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

வடபகுதியில் வாழ்கின்ற மக்கள் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் தேவைகளை விட அதிக அளவு தேவைகளையுடையவர்கள். போரால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பல தேவைகளை அவர்கள் கொண்டுள்ளனர்.

இந்த மக்களின் அத்தியாவசிய சேவைகள், அடிப்படைத் தேவைகள் பற்றி அறிந்திருந்தால்த்தான் அவர்களுக்கு உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஒரு புறம், நிர்வாக ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மறுபுறம், முதலீட்டு டன் சேர்ந்த பொருளாதார மேம்பாடு சம்பந்தமான பிரச்சினைகள் இன்னொரு புறம், மனிதாபிமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய வேறு சில பிரச்சினைகள் பிறிதொருபுறம் என்று எமது பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். வெறுமனே அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கைகளில் இறங்கினால் எமது மக்களின் பிரச்சினைகள் உண்மையாகத் தீர்க்கப்படா.

எமது மக்களில் பலர் போரின் விளைவாக உயிர் இழப்புக்களையுச் சந்தித்தது ஒருபுறமிருக்க,பொருள் பண்டங்கள், வீடு வளவுகள் என அத்தனையையும் தொலைத்துவிட்டு நடைபிணங்களாகப் போர் வடுக்களை உடல்களிலும் உள்ளங்களிலும் சுமந்தவர்களாகச் சுற்றித் திரிவது எமக்கு மிகுந்த மனவருத்தத்தைத் தருகின்றது. மக்களுக்கான இருப்பிட வசதிகள் அவர்களுக்கு ஏற்றவாறு செய்து தரப்பட வேண்டும். அவர்கள் வாழ்ந்த நிலங்கள் அவர்கள் தொழில் செய்கின்ற பூமிகள்,கடல் வளங்கள், விவசாய நிலங்கள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவம் அவசியமானது. ஆனால் எமது பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், உணவகங்களை நடத்துவதற்கும், காணிகளைத் தம் வசப்படுத்தி வைத்திருப்பதற்கும், குளங்களைச் சீரமைப்புச் செய்வதற்கும் இராணுவத்தினரின் சேவைகள் தேவைப்படமாட்டாது.

போர் முடிந்து அடுத்த மே மாதம் 10 வருடங்கள் ஆகப் போகின்றது. இன்னமும் எம்மைப் போர்க்கால மக்களாகப் பார்த்து இராணுவ கண்காணிப்பை முடுக்கி வைத்து வருவது எம் மேல் நம்பிக்கை இன்மையைக் காட்டுகின்றது. படிப்படியாக இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படும் என்று அரசு உத்தரவாதம் தந்திருப்பினும் அது நடைபெறாமலே இருக்கின்றது.

குற்றச் செயல்கள் இங்கு கூடியுள்ளன. அவற்றைத் தடுக்க எமக்கு அதிகாரங்கள் தரப்படவில்லை. பொலிஸார் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இராணுவம் வெளியேறி பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரிய காரியமன்று. உள்ளூர்வாசிகளை ஆட்கொண்டுவெளியூர்வாசிகள் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள எமது மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள்.

வேலைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை இராணுவத்துக்கு வழங்கி அதன் மூலம் வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதென்பது நாட்டின் அடிப்படைக்கொள்கைகளுக்கு முரணான ஒரு செயற்பாடாகவே அமையும். இந்தப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தின் செறிவைக் குறைக்குமாறு நான் பல இடங்களிலும் எடுத்துரைத்து வருகின்றேன். நீதிபதிகள் போல் இராணுவத்தினரும் ஒதுக்குப்புறமாக இருந்து தமது கடமைகளை ஆற்ற வேண்டும். மக்கள் மனதைத் தம் வசப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் மக்களுடன் இராணுவத்தினரைச் சேர்ந்து வாழவிடுவது எதிர் காலத்தில் பல சங்கடங்களை ஏற்படுத்தும்.

இராணுவத்தினர் மீது எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும்எனக்கு இல்லை. இராணுவ உயர் அதிகாரிகளுடன் நான் சிறந்த உறவை வெளிப்படையாகக் கொண்டிருக்கின்றேன். ஆனால் கொள்கை அடிப்படையில் படையினர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் கபட நோக்கங்கள் கொண்டிருக்கக் கூடாது. எம்மை வாழ வைப்பதாகக் கூறிக் கொண்டு எம்மை எப்போதும் கட்டுப்பாடுகளுக்குள் வைக்கப்பட வேண்டிய மக்களாகக் கணித்து வாழக் கூடாது.

இங்கு இருக்கும் இயற்கை வளங்கள் யாவும் இங்குள்ள மக்களுக்கே சொந்தம். அவற்றைச் சூறையாடிச் செல்வதையோ தொடர்ந்து ஆக்கிரமிப்பில் வைத்து வருவதையோ எமது மக்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணக் கூடாது. ஏதாவது எச்சில் துண்டுகளை எறிந்தால் அவர்கள் எம்வசம் இருப்பார்கள் என்றும் எண்ணக் கூடாது.

எமது காணிகள் எமக்கு எந்தளவுக்கு முக்கியமோ எமது சுதந்திரமும் எமக்கு மிக முக்கியம். எம்முடன் கலந்தாலோசித்தே எமக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எம்மைப் பங்குதாரர்களாக ஏற்றே எமக்கான நன்மைகள் செய்து தரப்பட வேண்டும். எமக்கான அபிவிருத்திகளை எமக்கூடாகச் செய்ய முன் வாருங்கள். எமக்கூடாக எனும் போது நான் மாகாண நிர்வாகத்தையே சுட்டுகின்றேன். எம்மை உங்களுக்குச் சரிசமமானவர்கள் என்று நீங்கள் ஏற்றுக் கொண்டால்த்தான் பங்குதார வாழ்க்கைபயன் அளிக்கும். திட்டங்களையும் நிதியையும் உங்கள் கைவசம் வைத்துக் கொண்டு மாகாண அலுவலர்களைக் கொண்டு உங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதை நாங்கள் கண்டிக்கின்றோம்- என்றார்.

(ந-8)

## வடக்கில் பயிர்கள் நாசமாகும் நிலையில்:

# யானை வேலிகள் அமைக்க ஒன்றரை வருடம் வேண்டும்

### என்கிறார் அமைச்சர் பொன்சேகா



கொழும்பு, ஜூலை 3

நாட்டில் உள்ள அனைத்து யானை வேலிகளையும் ஒன்றரை ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க எதிர்பார்ப்பதாக வன ஜீவராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வடக்கில் யானைகளால் பொதுமக்களும், அவர்களது பயிர்ச் செய்கை நிலங்களும் வாராந்தம் நாசமாக்கப்பட்டு வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துமாறு பிரதேசங்களில் வாழும் மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றும் கோரிக்கை விடுத்தவாறு உள்ளனர். யானை வேலி அமைக்கவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், யானை வேலிகள் அமைக்க சரத்பொன்சேகா ஒன்றரை வருடங்கள் செல்லும் என்று கூறியுள்ளார்.

சேவை செய்ய இன்னும் ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே உள்ளன. அதில் ஒரு வருடத்துக்குள் யானை வேலிகளைச் செய்து முடிக்கத் திட்டமிட்டுள்ளேன்.

அவற்றை நிறைவேற்றும் வரை பொதுமக்கள் பொறுமையாக இருக்குமாறு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் 4 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் நீளமான யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 2 ஆயிரத்து 500 கிலோமீற்றர் நீளமான யானை வேலிகள் வேண்டும் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# மத்தளவுக்கு மீண்டும் வானூர்திகள் வரும்

### தலைமை அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, ஜூலை 3

மத்தள வானூர்திநிலையத்துக்கு ஆண்டு இறுதியில் இருந்து மீண்டும்பன்னாட்டுவானூர்திச் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்குச் சேவையை நடத்தி வந்த, ஒரே ஒரு வானூர்திச் சேவையான பிளை டுபாய் நிறுவனமும், அண்மையில் தனது சேவையை நிறுத்தியது.

இதையடுத்து, மத்தள வானூர்தி நிலையத்துக்குத் தற்போது பயணிகள் வானூர்தி சேவைகள் எதுவும் இடம்பெறுவதில்லை.

இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க,"முன்னர் மத்தள வானூர்தி நிலையத்தில் பறவைகள் மாத்திரம் தரையிறங்கின. இப்போது, மத்தள வானூர்தி நிலையத்தில் இருந்து வணிக வானூர்திகளை இயக்குவது தொடர்பாக, அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதியில் இருந்து, பன்னாட்டு வானூர்திகள் மத்தளவிலிருந்து மீண்டும் சேவைகளை ஆரம்பிக்கும், என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5)

# கருணா அம்மான் மீது போர்க் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 3

முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (கருணா) எதிராக ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் போர்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

திருக்கோவிலில் 600 பொலிஸாரைக் கொலை செய்தமை தொடர்பிலேயே அவருக்கு எதிராகப் போர்க் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருணாவுக்கு எதிராகத் தான் முறைப்பாடு செய்துள்ளேன் என்று புலம்பெயர் அமைப்பு ஒன்றின் பொறுப்பாளரான பேராசிரியர் பொல் நிவுமன் தெரிவித்துள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# நல்லாட்சிக்கு எதிராக செயற்படுகிறது ரஷ்யா

### மங்கள குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 3

நல்லாட்சி அரசுக்கு எதிராகத் தவறான செய்திகளைப் பரப்பும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவின் முயற்சிக்கு ரஷ்யா உதவி செய்து வருவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ் சுமத்தியுள்ளார்.

அரசுக்கு எதிராகப் போலிச் செய்திகளைப் பரப்புவதற்கு நாமல் சிறப்புப் பிரிவொன்றை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்த நிதியமைச்சர், அதற்கு ரஷ்யா ஆதரவளித்து வருவதாகவும், இந்தச் சிறப்புப் பிரிவு உக்ரேன் மற்றும் ரஷ்யாவிலிருந்து செயற்படுவதாகவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள நாமல் ராஜபக்ச, ரஷ்யாவின் உதவியை நாடுவதற்கான அவசியம் தனக்கு இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தன்னை இலக்கு வைப்பதாக ரஷ்யாவையே நிதியமைச்சர் தாக்கியுள்ளதாகவும் நாமல் குறிப்பிட்டுள்ளார். (5)

# காதல் விவகாரத்தால் பாட்டி கொலை திரைப்படங்களை விஞ்சும் சம்பவம்

கொழும்பு, ஜூலை 3

தனது காதலை அறிந்து கொண்ட பாட்டியைக் காதலன் ஊடாகக் கொலை செய்த உயர்தர வகுப்பு மாணவியையும் அவரது காதலனையும் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் இருவரையும் கண்டி மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டைக் கஹால்ல பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடையமூன்று பிள்ளைகளின் தாயான குமாரி செனவிரட்ண என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

உயர்தர வகுப்பு மாணவியின் பெற்றோர் பொலன்னறுவையில் வசிக்கின்றனர். கட்டுகஸ்தோட்டையில் பாட்டி தனிமையில் வசித்து வந்துள்ளார். பாட்டியுடன் சேர்ந்து வசிப்பதற்கு மாணவி கட்டுகஸ்தோட்டைக்கு வந்துள்ளார். அவர் தங்கியிருந்தபோது உயர்தர வகுப்பு மாணவனைக் காதலித்துள்ளார். கடந்த 24ஆம் திகதி இரவு தனது காதலனை இரகசியமாக வீட்டுக்கு அழைத்துள்ளார். தனது அறையில் தங்க வைத்த மாணவி, அதிகாலை காதலனை வீட்டிலிருந்து அனுப்பும்போது பாட்டி அவதானித்துள்ளார்.

தனது பேர்த்தியையும், அவரது காதலனையும் பாட்டி கடுமையான தொனியில் பலத்த சத்தமாகப் பேசியுள்ளார். இருவரும் திகைத்துள்ளனர். பாட்டியைக் கட்டுப்படுவதற்கு அவர்களால் முடியாமல் போனது. காதலன், வீட்டுக் கதவுக்குப் பாதுகாப்பாகப் போடப்பட்டிருந்த பொல்லை எடுத்துப்பாட்டியின் தலையில் பலமாகத் தாக்கியுள்ளார். அவர் அங்கேயே துடிதுடித்து உயிரிழந்துள்ளார். அதன் பின்னர் சடலத்தைப் பொதியில் சுற்றிக் கட்டிலுக்கு அடியில் போட்டுவிட்டு இருவருமாக இணைந்து வீட்டைக் கழுவியுள்ளனர்.

மறுநாள் 25ஆம் திகதி இருவருமாகக் கண்டி நகருக்குச் சென்றுள்ளனர். அங்கு மாலை வரை சுற்றித் திரிந்து, சடலத்தை வீசி எறிவதற்கான இடத்தைத் தேடியுள்ளனர். அன்று மாலை, காரை வாடகைக்குப் பெற்றுச் சந்தேகநபரான காதலன் அதனைச் செலுத்தியுள்ளார். இடையில் அதன் இலக்கத் தகடுகளைக் கழற்றி எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

கறுப்பு நிற பொலித்தீன் பைகளில் சடலத்தைப் போட்டு பிளாஸ்ரினால் நன்றாக ஒட்டிப் பொதிசெய்துள்ளனர். இரவு ஒரு மணியளவில் காரில் சடலத்தை எடுத்துச் சென்றுள்ளனர். கலஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிதுள்முல்ல தோட்டப்பகுதிப் பற்றைக்காட்டுக்குள் சடலத்தை வீசி எறிந்துள்ளனர். திரும்பி வரும் வழியில் கொலையுண்ட பெண்ணின் உடைகளைக் கண்டி நகரில் உள்ள சாக்கடைக்குள் போட்டுள்ளனர்.

காதலனை வழியனுப்பிவிட்டு மறுநாள் 26ஆம் திகதி காலை பாட்டியைக் காணவில்லை என்று உறவினர்களுக்குத் தொலைபேசி மூலம் மாணவி அறிவித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் மகளால் தனது தாய் காணாமல் போயுள்ளதாகக் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய,பல்வேறுகோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. மாணவியிடம் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின்போதே மேற்கூறிய விடயங்களை அவர் வாக்குமூலமாக வழங்கியுள்ளார். சடலம்வீசப்பட்ட இடத்தையும்அடையாளம் காட்டியுள்ளார். இதனையடுத்து மாணவியையும் அவரின் காதலனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5)

# அரசியலிலிருந்து ஓய்வுபெறும் காலம் மகிந்தவுக்கு விரைவில்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 3

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச, அரசியலில் இருந்து ஓய்வுபெறும் காலம் தொலைவில் இல்லை. இதனால் அவர் ஓய்வு பெறும்போது கூட்டு எதிரணி அடையாளம் இல்லாமல் காணாமற் போகும்.

இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டு எதிரணிக்குப் பலமே மகிந்ததான். அவர் அந்தக் கட்சியில் இல்லையென்றால், கூட்டு எதிரணி அரசியலில் தொடர்ந்து நிலைத்து நிற்பது கடினம்.

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் கூட்டு எதிரணியில் பெரும் மோதல் ஏற்படும் என்றும் அவர் எதிர்வுகூறியுள்ளார். (4)

# இணைத் தலைவராக மகிந்த ராஜபக்சவை நியமிக்க முடியாது

மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணைத் தலைவராக நியமிக்க முடியாது என்று, அந்தக் கட்சியின் பொதுச்செயலர் பேராசிரியர் றோகண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவைச் சுதந்திரக் கட்சியின் இணைத் தலைவராக நியமிக்க வேண்டும் என்கின்றனர் சிலர். ஆனால் கட்சியின் யாப்பின்படி அதனைச் செய்யமுடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின் படி, கட்சியின் உறுப்பினராக உள்ள ஒருவர், நாட்டின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால், அவர் தானாகவே கட்சியின் தலைவராகவும் ஆகி விடுவார்.

முன்னாள் அரச தலைவர் காப்பாளர்களாகவே இருக்க முடியும். கட்சி யாப்பின்படி, சந்திரிகா குமாரதுங்கவும், மகிந்த ராஜபக்சவும் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்த அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மிகப் பொருத்தமான ஒரு வேட்பாளரை நிறுத்தும்.

அந்த வேட்பாளர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் தெரிவு செய்யப்படுவார். அவர் பொதுவேட்பாளராக இருக்கமாட்டார். மிகச் சிறந்த வேட்பாளரை அடுத்த அரச தலைவர் தேர்தலில் நிறுத்துவது கடினமானது. அது சவாலை ஏற்படுத்தும் - என்றார். (5)

# அரசதலைவர் வேட்பாளரை விரைந்து அறிவியுங்கள்

## மகிந்தவிடம் விமலின் கட்சி கோரிக்கை



கொழும்பு, ஜூலை 3

இறுதிநேரம் வரை காத்திருக்காது கூட்டு எதிரணியின் அரச தலைவர் வேட்பாளரை முன்கூட்டியே பெயரிடுமாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள் ளது.

மகிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்து இதற்கான காரணங்களை முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச தெளிவுபடுத்துவாரென அவரது கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

மகிந்த ராஜபக்சவால் பெயரிடப்படும் வேட்பாளருக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்குக் கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் வெளியிட்டுள்ளன.

வேட்பாளர் யாரென்பதை முன்கூட்டியே அறிவித்தால் அவரை முடக்குவதற்கு அவருக்கு எதிராகத் தவறான விம்பமொன்றை உருவாக்குவதற்கு ஆளுந்தரப்பு முயற்சிக்கலாம். தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகே வேட்பாளரை அறிவிக்க வேண்டுமென்பதே கூட்டு எதிரணியின் சில உறுப்பினர்களின் கருத்தாக இருக்கின்றது. இந்தக் கூற்றை ஏற்க விமலின் கட்சி மறுத்துவருகின்றது.

அரச தலைவர் வேட்பாளர் யாரென்பதை அறிவிக்காவிட்டால், அது கூட்டு எதிரணிக்குள் பிளவை உருவாக்குவதற்கு வழிவகுத்துவிடும். ஒருநபரை அறிவித்துவிட்டால் அனைவரும் அவருடன் அணிதிரளும் வாய்ப்பு உதயமாகும். அரசு நடவடிக்கை எடுத்தால்கூட, அது வேட்பாளருக்குச் சாதகமாகவே அமையும். என்பதே விமலின் கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது. இவை உள்பட மேலும் பல காரணங்களையே மகிந்தவை நேரில் சந்தித்து விமலின் கட்சி தெரிவிக்கவுள்ளது. (5)

## 2020இல் களமிறங்குவது யார்?

# கோத்தாவும் பசிலும் நீண்டநேரம் ஆலோசனை

## இறுதி முடிவு மகிந்த கையில்

கொழும்பு, ஜூலை 3

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அண்மைக்காலமாக நிலவிவந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.



2020ஆம் ஆண்டு அரச தலைவர் வேட்பாளராக யார் களமிறங்குவது என்பது தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரிடையே பனிப்போர் நிலவிவந்தது.

இவர்கள் இருவருக்குமிடையில் நீண்ட நேரக் கலந்துரையாடலொன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் இருவரும் இணங்கும் வகையில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த விடயத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் அறிவித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

எதிரணியின் அரசதலைவர் வேட்பாளராகப் பசில் ராஜபக்ச களமிறக்கப்பட வேண்டுமென ஒரு தரப்பும், கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்படவேண்டுமென இன்னொரு தரப்பும் முன்னாள் அரச தலைவருக்கு அழுத்தம் கொடுத்துவந்தன. சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இருவருக்குமிடையில் சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளபோதிலும் எதிரணியினுள் நிலவிவரும் கருத்து முரண்பாடுகளுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடமே காணப்படுவதால் விரைவில் வேட்பாளராகக் களமிறங்கப் போவது யாரென அவர் அறிவிக்கக்கூடுமெனவும் அறியமுடிகிறது. (5)

## பெரும்போக நெல் அறுவடை

# கொள்வனவுக்கு அனுமதிகோரி அமைச்சரவைப் பத்திரம் தாக்கல்

கொழும்பு, ஜூலை 3

பெரும் போக நெல் அறுவடையின்போது நாடு ஒரு கிலோ 38 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோ 42 ரூபாவுக்கும் கொள்வனவு செய்வதற்கு அனுமதிகோரும் அமைச்சரவைப் பத்திரம் இன்றையதினம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தப் போகத்தின்போது ஒரு லட்சத்து 20ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் கொள்முதல் செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபை திட்டமிட்டுள்ளது.

அதற்காக 4 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதற்கான அனுமதிகோரி அமைச்சரவைப் பத்திரம் இன்றையதினம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (5)



# பெரஹரவில் யானைகள் குழப்பம்

*31 பேர் காயம்!*

கொழும்பு, ஜூலை 3

இரத்தினபுரி கஹவத்தைநகரில்நேற்று முன்தினம் இரவு நடந்த பெரஹரவில் யானைகள் குழப்பமடைந்ததால், 31 பேர் காயமடைந்தனர். பெரஹரவில் பயணித்த யானை ஒன்று முதலில் குழம்பியது. அதையடுத்து, ஏனைய யானைகளும் குழம்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் பெரஹர பார்க்க வந்த மக்கள் பதற்றமடைந்தனர். காயமடைந்த மக்கள் இரத்தினபுரி மற்றும் கஹவத்தை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குள் 19 பேர் பெண்கள் என்று தெரிவிக்கபடுகின்றது. பெரஹர கடமைகளில் ஈடுப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரியும்காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்



# சீனாவிடம் கடன்பெற்றது இராஜதந்திரமாம்!

கொழும்பு, ஜூலை 3

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, சீனாவிடமிருந்து கடன்பெற்றது ஒரு இராஜதந்திரமே என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

மாத்தளையில் நடந்த, கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர்மேற்கண்டவாறுகூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும், மகிந்த ஆட்சிக்கு வந்தால், தற்போதுள்ள மக்களாட்சி அழிக்கப்படும் என்று சிலர் கூறி வருகின்றனர். ஆனால், 1948 ஆம் ஆண்டு தொடக்கம், எந்தத் தலைவர்களும் நாட்டில் உறுதியான மக்களாட்சி யைத் தோற்றுவிக்கவில்லை.

30 ஆண்டுகளாக நிலவிய [illegible] வாதத்தை முற்றாக அழித்து நாட்டை ஒன்றுபடுத்தியவர், மீண்டும் அந்தக் கொடிய யுகத்தை ஏற்படுத்த மாட்டார்.

மகிந்த ராஜபக்ச பன்னாட்டுக் கடன் நிறுவனங்களிட மிருந்து கடன் பெறாமல் சீனாவிடமிருந்து கடன் பெற்றது ஒரு இராஜதந்திரமே.

ஏனென்றால், ஒரு குறித்த நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றால் அதன் அழுத்தங்களின் மத்தியிலே அரசை முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கும்

இதன் காரணமாகவே, தற்போதைய அரசு இன்று பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுப் பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுவருகின்றது, என்றும் [illegible]

## கேலிச்சித்திரம்



**உதயன் பத்திரிகையின் கிராமிய சங்கமத்தின் முதலாவது நிகழ்வு முல்லைத்தீவு இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இரணைப்பாலை மற்றும் ஆனந்தபுரம் கிராமங்களுக்கு இடையிலான கிராமிய மற்றும் பெரு விளையாட்டுக்கள் நடைபெற்றது.**



யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.



10 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பெண்களுக்கான பலூன் ஊதி உடைத்தல் போட்டி



மட்டையில் நடத்தல் போட்டி – ஆண்கள்



பெண்களுக்கான சங்கீதக் கதிரைப் போட்டி



உதயன் பத்திரிகை மற்றும் இரணைப்பாலை, ஆனந்தபுரம் கிராமங்கள் தொடர்பான பொது அறிவு வினாவிடைப் போட்டி.



பெண்களுக்கான கிடுகு பின்னுதல் போட்டி



பொது அறிவுப் போட்டி



நிகழ்வுக்கு வருகை தந்தோர் தமது அதிஷ்டத்தைத் தெரிவு செய்வதற்கு பதிவுகளை மேற்கொண்டனர்.



சங்கீதக் கதிரைப் போட்டி



மெதுவாக உந்துருளி செலுத்துதல் போட்டி



காலால் பலூன் உடைத்தல் போட்டி



கயிறு இழுத்தல் போட்டி



கரப்பந்தாட்டப் போட்டி – ஆண்கள்



விக்கெட்டுக்களைச் சுற்றுதல்

**போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல்**











## கமத்தொழில் அமைச்சு கேள்வி அறிவித்தல் 2018 July

**வடமாகாண விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்ட அலுவலகத்துக்கு அலுவலக உபயோகத்துக்காக நாளாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவை மற்றும் மாதாந்த வாடகை அடிப்படையில் அலுவலக கட்டடம் பெற்றுக்கொள்ளல்**

வடக்கு மாகாண சபையின் விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்ட அலுவலகத்துக்குப் பின்வரும் இரு நோக்கங்களுக்காக.

1. **நாளாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவையினைப் பெறல்**
2. **மாதாந்த வாடகை அடிப்படையில் அலுவலக கட்டடத்தினைப் பெறல்**

கேள்வி அறிவித்தல் மாகாண பிரதி திட்டப் பணிப்பாளர் அவர்களினால் கோரப்படுகின்றது.

இவ்விரு சேவைகளுக்காகவும் தனித்தனியாக வழங்கவுள்ள வழங்குநர்கள் இவற்றிற்கான விண்ணப்ப படிவத்தினை இல.127, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்ட அலுவலகத்தில் 03.07.2018 ஆம் திகதியிலிருந்து 26.07.2018 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். முழுமையாகப் பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்கள் 31.07.2018 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்துக்குப் பதிவுத் தபாலிலோ / நேரடியாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**மாகாண பிரதி திட்ட பணிப்பாளர்,**
**விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டம்,**
**வடக்கு மாகாணம்.** (IN/7185)(11,17)

## நீங்கா நினைவுகளுடன் முதலாமாண்டு நினைவலைகள்

மண்ணில் 31 . 07 . 1959



விண்ணில் 13 . 07 . 2017

### அமரர் பூமா தேவராசா

ஓடி உருண்டதம்மா ஓராண்டு காலம் வாடி வதங்குகின்றோம்
உமையிழந்து நாமிங்கு
கூடி வாழ்ந்த காலத்தில் கண்ணிமைபோல் காத்தவளே – உமை
தேடி அலைகின்றோம் உளம் உருகி நாமிருவர்

எம்மோடு வாழ்ந்த காலங்கள் நெஞ்சைவிட்டு அகலுதில்லை அம்மா!
உங்கள் பிரிவுதான் மறக்க முடியா ரணங்களாயிற்றே
ஆலமரம்போல் நிழல் தந்து சுகந்தந்த தாயே!
பாலப் பருவமதில் எனைவிட்டு எங்கு சென்றீரம்மா?

நீங்கள் உயிரோடு வாழும் காலத்தில் நீக்கமறா உம் உறவுகள்
.எமை நாடினார்களே
இப்போ யாருமற்று வெறும் ஜடங்களாய் ஏங்குகின்றோம்.
இக்கணமே எம் இருவருக்கும் உறவு தர வாராயோ?

**நெல்லியடி மத்திய கல்லூரி வீதி,**
**நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.** (ANE/00516)(11,17)

**என்றும் உங்கள் நீங்கா நினைவுடன்**
**கணவர், மகன்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கனகராஜா

***(ஓய்வுநிலை அலுவலர் - கட்டடங்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம்)***



தோற்றம் 07.03.1952 மறைவு 01.07.2018

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகராஜா 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், நிரோஜன், சரண்யா, லக்சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமலர், செல்வராஜா, பத்மாவதி, யோகராஜா, யோகேஸ்வரி, நடராஜா, புனிதவதி, காலஞ்சென்ற பத்மராஜா மற்றும் புனிதமலர், காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், இராசமணி, காலஞ்சென்ற முருகேசபிள்ளை மற்றும் மகேந்திரன், வசீகரன், மங்கையற்கரசி, கயல்விழி, அகிலகுமார், தனபாலசிங்கம், நகுலேஸ்வரி, இந்திரநாதன், இராதாகிருஷ்ணன், இராசகுமார், ஆதிமூலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமார், நந்தகுமார், அன்னலட்சுமி, சிவறஞ்சினி, நீலம் ஆகியோரின் அன்பு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கார்த்திகேசு வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.** (IN/7188) (11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0765341418, 0770462754**

## மகா கும்பாபிஷேகமும் எண்ணெய்க்காப்பும்

அருள்மிகு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05.07.2018 வியாழக்கிழமை காலை 08.57 மணி தொடக்கம் 11 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று (03.07.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் புதன்கிழமை 04.07.2018 மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு இடம்பெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**அல்வாய் வேவிலந்தை**
**ஸ்ரீ முத்துமாரி அம்பாள்**
**தேவஸ்தானம்.** (IS/7190)(11,17)

## அறிவித்தல்
## யா/ ஹாட்லிக் கல்லூரி — யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

கல்லூரியின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் நாகேந்திராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதனை அனைத்துப் பழைய மணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

**குறிப்பு - 01**
பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 16.07.2018 ஆம் திகதிக்கு முன் அதிபர், யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**குறிப்பு - 02**
சங்கத்தில் புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் அங்கத்துவப் படிவத்தினைக் கல்லூரி அலுவலகத்தில் அல்லது பழைய மாணவ சங்க செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**செ.பேறின்பநாதன்**
**தலைவர்/ அதிபர்.** (IN/7189)(11,17)

**ச.மனோகரன்**
**செயலாளர்.**

## 2ஆம் ஆண்டு நினைவு

**அமரர்**
**துரைரெத்தினம் திருக்கேதீஸ்வரன்**
(KTS லொறி உரிமையாளர்)



ஊமை....
நெஞ்சம்...
விழிகள்....
கண்ணீர்
வார்த்தைகளால்
வெளியிட முடியாத துயரம்
வேதனைகளின்
விளிம்பில்

தோற்றம் 26.06.1958
மறைவு 25.06.2016

திதி:- 03.07.2018 (CS/17943)(11,17)

**மனைவி,**
**பிள்ளைகள்.**
**நாவற்கட்டை,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

## விண்ணக வாழ்வில் இறைவனுடன் 5ஆம் வருட நினைவஞ்சலி

**அமரர்**
**சின்னையா தவரெட்ணம் (J.P)**

(முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)



மண் மகிழ 28.06.1940
கண் நெகிழ 03.07.2013

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும் அப்பா
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் ஆறுதில்லையே எம் துயரம்
ஏங்கித் தவிக்கின்றோம் தினமும் உங்களின் பாசத்துக்காய்
நெஞ்சை விட்டகலா உங்கள் நினைவுகளுடன்
அனுதினமும் உங்களுக்காய் வேண்டுகின்றோம்.

**பீச் றோட், குருநகர்,**
**யாழ்ப்பாணம்.** (CS/17939)(11,17)

**உங்கள் பாசத்தில் வாடும்**
**பிள்ளைகள்.**

## கணினி வடிவமைப்பாளர்கள் தேவை

கணினி வடிவமைப்பாளர்கள் தேவை.
(அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

**ஈஸ்வா டிஜிற்றல் அச்சகம்**
**461, கே.கே.எஸ்.வீதி.**
**077 165 9845** (CS/17948)(11,17)

## வீடு வாடகைக்கு

செட்டித்தெருவில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. (அலுவலக உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.)

**தொடர்பு - 070 2915201, 076 825 8628**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் உள்ள அலுமினிய ஹாட்வெயார் கடைக்கு உடனடியாக பெண் காசாளர் தேவை. மேலும் அனுபவமுள்ள ஆண் வேலையாள்களும் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 021 433 4464**

## தவறவிடப்பட்டது

30.06.2018 சனிக்கிழமை கஸ்தூரியார் வீதிக்கும், தட்டாதெருச் சந்திக்கும் இடையில் பிரான்சிஸ் அன்ரனிஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ATM Cards போன்றவை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/17947)(11,17)

**077 078 8700**

## பெயர் மாற்றம்

புத்தூர் வடக்கு, புத்தூரில் வசிக்கும் **மகாலிங்கம் ரவி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **மகாலிங்கம் ரவிச்சந்திரன்** என மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் **மகாலிங்கம் ரவிச்சந்திரன்** என ஒப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(CS/17942)(11,17) **- மகாலிங்கம் ரவிச்சந்திரன் -**

உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com, 021 493 1111

தகுதியற்றோர் கல்வித்துறைக்குள் நுழைவதைக் கண்டித்து

# வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதிலும் கல்வித் துறையினர் நாளை வேலைநிறுத்தம்

## மையக் கல்வி அமைச்சு முன் போராட்டமும் இடம்பெறும்

**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**அரசியல் பழிவாங்கலைக் காரணங்காட்டி தகுதியற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்குக் கல்வித் துறைக்குள் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இதனைக்கண்டித்துவடக்குமாகாணம்உட்படநாடுமுழுவதும்ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். மையக் கல்வி அமைச்சுமுன்பாகநாளைஆர்ப்பாட்டமும்இடம்பெறவுள்ளதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கைகல்விநிர்வாகசேவை, ஆசிரியர் சேவை, அதிபர் சேவை சங்கங்கள் உட்பட 16 தொழிற்சங்கங்கள் இந்தப்பணிப்புறக்கணிப்பில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன என்று அறிவித்துள்ளன.

கல்விநிர்வாகசங்கங்கள், ஆசிரியசங்கங்கள் இதுபற்றிவிடுத்துள்ளஅறிவித்தல்களில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைகல்வித்துறையில்அரசியல் பழிவாங்கல் நியமனம் எனும் போர்வையில் தகுதியற்ற 1000க்கும் அதிகமானோருக்குநியமனங்கள்வழங்கப்படவுள்ளன. பிரமாணக்குறிப்புகளை மீறி வழங்கப்படும் இந்த அரசியல் ரீதியான நியமனங்கள் கல்வித்துறையைச் சீரழிக்கும் செயற்பாடே. இத்தகைய நியமனங்களை எதிர்த்து இலங்கை கல்வி நிர்வாக சேவை சங்கம், அதிபர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் என்று 16 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

வடக்கு உட்பட நாடு முழுவதும் இந்தத் துறையினர்பணிப்புறக்கணிப்பில்ஈடுபடவுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்ராலின்தெரிவித்தார்.

நாளை புதன்கிழமை அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் அனைவரும் சுகவீன விடுமுறை மூலமாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுக் கல்வித்துறையில் ஏற்படவுள்ள ஆபத்தைத் தவிர்க்க சமூகப்பொறுப்புடன் செயற்படுங்கள் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இத்தகைய முறையற்றநியமனங்கள் எதிர்காலசமூகத்துக்குஆபத்தானவை. இதனை எச்சரித்தே நாளை போராட்டம் இடம்பெறுகிறது. எனவே பெற்றோர்ஒவ்வொருவரும்இந்தஆபத்தை உணர்ந்துநாளையஎமதுபோராட்டத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.

அதற்காக நாளை பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்பாதீர்கள். மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பெற்றோர்கள் மேற்கொண்டு ஒத்துழைக்குமாறுபெற்றோரைக்கேட்டுக்கொள்கிறோம்-என்றுள்ளது. (எ-4)

## தனியார் சேவை முச்சக்கரவண்டிகளுக்குப் புதிய நடைமுறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

முச்சக்கரவண்டிகளில்பயணிக்கும் வாடிக்கை யாளர்களின் அச்சத்தைப்போக்கவும், பயணத்தில்திடீர் இடர், அசம்பாவிதம்ஏற்படின்முச்சக்கரவண்டியை இலகுவாகஅடையாளம் காண்பதற்கும் என்று சில ஒழுங்குமுறைகள் வவுனியா வடக்கு பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதுபற்றியமுச்சக்கரவண்டிகளுக்கான ஒழுங்கமைத்தல் நிகழ்வு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. பிரதேச செயலாளர், பொலிஸார், முச்சக்கர வண்டிச் சாரதிகள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர். வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர்பிரிவானது, பெரும்நிலப்பரப்பைக் கொண்டுள்ளபோதும் மக்கள் குடியிருப்புக்கள் சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றன.

இதனால் பல இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளுக்கான பேருந்து வசதிகள் அறவே அற்ற நிலையும் உள்ளன. இதனால் முச்சக்கர வண்டிகளையே நாடவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. தற்போது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் 70க்கும் குறைவான முச்சக்கர வண்டிகள் பதிவில் உள்ளன.

இந்தநிலையில்முச்சக்கரவண்டிப்பயணத்தை அச்சமற்ற, பாதுகாப்பான பயணமாக மேற்கொள்ள தயார்ப்படுத்துவதோடு ஏதேனும் அசம்பாவிதம் இடம்பெற்றால் உடனடியாகக் குறித்த முச்சக்கர வண்டியை அடையாளம் காணும் முயற்சியாகவும் குறித்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தனியார் சேவையில் ஈடுபடும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் எந்தப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது என்பது முச்சக்கர வண்டியில் ஒட்டப்படுதல் வேண்டும். முச்சக்கர வண்டிச் சாரதிகள்அனைவரும்சீருடைஅணியவேண்டும், அரைக்காற் சட்டை அணியமுடியாது என்று தீர்மானிக்கப்பட்டது. வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகளின் நன்மதிப்பை உறுதிசெய்யும் வகையிலும்இந்தநடைமுறைஏற்படுத்தப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில்சிகைஅலங்கரிப்பாளர்சங்கப்பிரதிநிதிகள்மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போதுபாடசாலைஅதிபர்களின்கோரிக்கையும்சிகை அலங்கரிப்பாளர்களிடம் முன்வைக்கப்பட்டது. மாணவர்கள்தமதுசிகைஅலங்கரிப்புக்காககடைகளைநாடும்போது அவர்களின் நன் மதிப்புக் கருதி மாணவர்கள் கோருகின்ற வகையில்அன்றி சாதாரணமான நாகரிகமுறைகளில் மட்டும் அவர்களுக்கான சிகை அலங்கரிப்பை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (எ-4,105)

## கயமுகன் கழுத்தறுத்தே கொலை சந்தேக நபர்கள் வாக்குமூலம்

### வவுனியா பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 3

கயமுகன் மதுவின் உச்சத்துக்குச் செல்ல, ஒருவர் அவரின்தலையைப்பிடிக்கமற்றொருவர்கழுத்தை அறுத்து அவரைக் கொலை செய்தோம். இறந்த கயமுகனை அருகில் இருந்த காட்டுப் பகுதியில் தீயிட்டுக்கொழுத்திவிட்டுத்தப்பித்துச்சென்றோம்என்றுகயமுகன்கொலை வழக்கின்சந்தேகநபர்கள்வாக்குமூலமளித்தனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களே கயமுகனை எரித்த இடத்தையும் அடையாளம்காட்டியுள்ளனர். குறித்தஇருசந்தேகநபர்களும் 26, 27 வயதுடையவர்கள். வவுனியா நெடுங்கேணி சேனைப்பிலவு பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற் போன கயமுகன் ஒதியமலை காட்டுப் பகுதியில் எரிந்த நிலையில் நேற்றுமுன்தினம் எச்சங்களாக மீட்கப்பட்டார். குறித்த சந்தேக நபர்களின் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்தே கயமுகனின் எலும்பு எச்சம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது:

கடந்தஏப்ரல்மாதம்17ஆம்திகதிநெடுங்கேணிசேனைப்பிளவு பகுதியைச் சேர்ந்த தேவதீசன் கயமுகன் என்ற (21 வயது) இளைஞன் அருகிலிருக்கும் கடைக்குச் சென்றுவருவதாகக் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றார். பின்னர் அவர் வீடுதிரும்பவில்லை.

வீட்டிலிருந்துசென்றபின்னர்6நாள்கள்கழித்துஅவரது அலைபேசியில் இருந்து குறுந்தகவல் ஒன்று வந்திருந்தது. அதிலே நான் திருமணம் முடித்து வேறு ஒரு இடத்தில் உள்ளேன் என்னைத் தேடவேண்டாம். மோட்டார் சைக்கிள் வீட்டிலிருந்து சற்று தொலைவில் உள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்குத் தாயாரால் தெரியப்படுத்தப்பட்டது. குறித்த பகுதியில் வீதி ஓரத்தில் இருந்து இளைஞனின் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டு நெடுங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு வவுனியா நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் இரண்டுமாதங்களாகியும்வேறு எந்தத்தகவலும் குறித்த இளைஞனிடம் இருந்து வராததுடன் அவரது தொலைபேசியும் இயங்கவில்லை என அண்மையில் அவரின் தாயார் தெரிவித்தார்.

இந்த நிலையில் நெடுங்கேணிப் பொலிஸார், கடந்த சனிக்கிழமை காணாமல் போன இளைஞனின் வீட்டுக்குஅருகில்வசிக்கும்அவரதுநண்பரைக்கைதுசெய்து அவரிடம் பெற்ற வாக்குமூலத்தின் பிரகாரம் வவுனியாவில் வைத்து மற்றுமொருவரையும் கைது செய்தனர்.

வவுனியா மன்றில் முற்படுத்தப்பட்ட வேளையில் இருவரும் குற்றத்தை மறுத்தபோதும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இருவரையும்தனித்தனியாகபிரித்த பொலிஸார்பலகோணத்தில்மேற்கொண்டவிசாரணையில் தெரிவித்த சில கூற்றுக்களின் அடிப்படையில் இருவரும் சிக்கியுள்ளனர். இதன்போது, மது அருந்தலின் ஆரம்பத்திலேயேகயமுகனைக்கொலைசெய்வதாகத் திட்டம் இருந்தமையால் தாம் சற்றுக் குறைவான மது அருந்திய நிலையில் கயமுகனின் கழுத்தை அறுத்தோம் என்று வாக்குமூலம் அளித்தனர். இறந்தவரின் எச்சம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீட்கப்பட்ட நிலையில் குறித்த வழக்குத் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (எ-105,110)

## வடமாகாண விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் பங்களிப்புத் தேவை

### உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடக்கு மாகாண விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் பங்களிப்பே இன்றைய தேவை என வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியசங்கத்தலைவர்ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணபொதுசனநூலகவாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி அண்மையில் யாழ்ப்பாண பொது நூலக குவிமாடக் கேட்போர்கூடத்தில்அ.யோகராசா தலைமையில்நடைபெற்றபோது, உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன், 'வடக்குமாகாண விளையாட்டுத் துறைவளர்ச்சி அன்றும்இன்றும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழன் தனித்து வாழ்வதைவிட தனித்துவமாக வாழ்வதே சிறந்தது. இதனைப் பாதுகாக்க வேண்டுமானால் எமது கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டுஎன்பவற்றைப்பாதுகாப்பதுடன்அதன்வளர்ச்சியைஇன்றைய சமூகத்தில் விதைத்து உயர்ச்சி காணச்செய்யவேண்டும்.

வடக்குமாகாணத்தில்விளையாட்டுத்துறைஎன்பதுஎழுச்சிகொண்டு காணப்படுகின்றபோதும் அன்றைய காலத்தைப் போல இன்று பரவலாக்கப்படவில்லை.

அன்றைய காலகட்டத்தில் விள்ளயாட்டு எல்லோரிடத்திலும் பரவலாக்கப்பட்டிருந்தது. சமூகஅமைப்பினர் ஆரோக்கியமாகவும் ஆளுமைமிக்கவர்களாகவும் தொற்றாநோய்களில் இருந்து விடுபட்ட வர்களாகவும் காணப்படும் தனித்துவம்மிக்கவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் இன்று தேசிய மட்ட சாதனைகள் ஒருபுறம் நிகழ்த்தப்படுகின்றபோதும் மறுபுறம் தொற்றாநோய்களுக்கு உட்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது இன்றைய காலகட்டத்தில் விளையாட்டு பரவலாக்கப்படவில்லை என்பதே கண்கூடு.

இதற்கான காரணம் அன்றைய காலபெற்றோர்கள்விளையாட்டுக்குத் தடையாக இருக்கவில்லை. இன்றைய கால பெற்றோர்கள் விளையாட்டில் ஆர்வம் அற்றவர்களாகவும் இதன் மூலம் நன்மை ஏதும்ஏற்படாதுஎன்றஅறியாமையிலும் உள்ளமையே. ஆனால் பெற்றோர்கள் ஒன்றை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். பிள்ளைகளை விளையாட்டுச் செயற்பாட்டுக்கு அனுப்ப மறுப்பதனால்தொற்றாநோய்களுக்கு உட்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருவதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மாணவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே கல்வியைச் சிறந்த முறையில் கற்க முடியும். அதுமட்டுமன்றி தனிநபர் சுகாதாரம், விளையாட்டிலும் தங்கியுள்ளது என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து விளையாட்டில் ஈடுபட தமது பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும்-என்றார். (எ-50)

# வீண் பணவிரயங்களில் இளையோர்கள் சுய உழைப்பின்றி பந்தா காட்டுகின்றனர்

வைர விழாவில் முதலமைச்சர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**வீண் பணவிரயங்களில் எமது இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். சுயமாக உழைத்துப் பணம் ஈட்டாமல் யாரோ அனுப்புவதை வைத்து பந்தா காட்டுகின்றார்கள். நவீன அலைபேசிகளினூடாக வலைத்தளங்களுக்குள் உள்ளீர்க்கப்பட்டுத் தமது நேரத்தையும் மனதையும் பறிகொடுத்து நிற்கின்றார்கள்.**

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி திக்கம் மைய சனசமூக நிலையத்தின் வைர விழா நிகழ்வுகளில், முத்தமிழ் விழாவும் பரிசளிப்பும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

அதில் உரையாற்றுகையில் முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றையசூழ்நிலையில்இளையோர் பற்றிய முறையான வழிகாட்டல்களும் நல்வழிப்படுத்தலும் மிக அவசியமாக உணரப்பட்டுள்ளன.

இளவயதுப் பிள்ளைகள் முக்கியமாக இளைஞர்கள்சுயமாகச்சிந்திப்பதைத் தடுக்கும்நோக்கில்வேண்டுமென்றே நன்கு திட்டமிடப்பட்டு அவர்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகளில் குறிப்பிட்டபகுதியினர்செயற்பட்டுவருகின்றார்கள்.

இளைஞர்களின் சிந்தனைகளைத் தீயவழிகளிலும்நவீனகலாசாரம்என பலராலும்வர்ணிக்கப்படுகின்றசட்டத்துக்குப்புறம்பானநடவடிக்கைகளிலும் இட்டுச்செல்வதை நாங்கள் நிறுத்த வேண்டும்.

**உயிர்க் கொல்லியாக மோட்டார் சைக்கிள்கள்**

இளைஞர்களின்உயிர்க்கொல்லியாக நவீனரகமோட்டார்சைக்கிள்கள்மாறியுள்ளன.சமூக,கலாசாரப்பிறழ்வுகளில் ஈடுபடத் தூண்டுகின்ற வகையில் சூழல் எமது இளைய சமுதாயத்தைப் பாதித்துவருகின்றது.

சமூகத்தின் எதிர்கால வழிகாட்டிகளாகவும் தலைவர்களாகவும் விளங்கக் கூடிய இளைஞர்கள் கல்வி அறிவில் மேம்பட்டவர்களாகவும், சிறந்த ஆளுமை மிக்கவர்களாகவும், பொது நலம் பற்றிய சிந்தனைகள் உடையவர்களாகவும் தமது கொள்கையின் பால்உறுதிப்பற்றுடன்செயற்படக்கூடியவர்களாகவும் மாறினால்த்தான் எமது எதிர்காலம் பிரகாசமடையும். சுயநல சிந்தனைகளுடன் பிறர் முன் எந்த நேரமும் கையேந்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

**இருக்கின்ற துறையில் தேர்ச்சி பெறுங்கள்**

இளையோரே! நீங்கள் அனைவரும் உங்களது கல்வி நடவடிக்கைகளில் மிக அவதானமாகவும், முனைப்புடனும் செயற்படுவதற்கான காலம் தற்போது கனிந்துள்ளது.

உயர்தரவகுப்புகளில்கல்விகற்கின்ற அனைத்து மாணவர்களும் பொறியியலாளர்களாக அல்லது மருத்துவர்களாக மாற வேண்டும் என்ற அவசியம் கிடையாது. மாறாக உங்கள் இயல்பானகற்றல்நடவடிக்கைகளில்எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்க விரும்புகின்றீர்களோ அந்தத் துறையில் சிறப்பாகக் கல்வி கற்று உச்ச நிலையை நீங்கள் அடையவேண்டும் என்பதே எமது அவா.

**வாசிப்பு பாழ்**

இலத்திரனியல் சாதனங்களின் அபரிமித வளர்ச்சியும் பொழுதுபோக்குச் சாதனங்களின் அறிமுகமும் இன்றைய இளையோரை வாசிப்புப் பழக்கத்தில்இருந்துநெடுந்தூரம்கொண்டு போய்ச் சேர்த்துவிட்டது. அதனால் நவீன இலத்திரனியல் கருவிகளுக்கூடாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தேவை இன்று அவசியமாகியுள்ளது.

**இலத்திரனியலுக்கு அடிமையாகாதீர்கள்**

இலத்திரனியல்சாதனங்களின் பயன்பாடுகள் இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. அவற்றை இயக்கி நன்மை பெறுபவர்களாக நாம் மாறவேண்டும்.

அனைத்து இலத்திரனியல் சாதனங்களும்மனிதனின்தேவைக்கும்மனிதர்களின் வேலைகளை இலகுபடுத்துவதற்கும் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள் என்பதை நாம் முதலில்மனதிற்கொள்ளவேண்டும். எந்தவொரு இலத்திரனியல் சாதனமும் எம்மை வழிநடத்துகின்ற கருவியாக மாறுவதற்குஇடமளிக்கக்கூடாது-என்றார். (எ-4)

## முகாமைத்துவ உதவியாளர் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகா மைத்துவ உதவியாளர்சேவையின்தரம் 3 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும்14ஆம்திகதிநடைபெறும்என்றுமாகாணபொதுச்சேவையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கானஅனுமதிஅட்டைகள்அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவேஎதிர்வரும்11ஆம்திகதிக்குப்பின்பும்அனுமதிஅட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்குத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

விளையாட்டு பயிற்றுநர்களாக

## வடமாகாணத்தைச் சேர்ந்த பலர் பிற மாகாணங்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

விளையாட்டுப் பயிற்றுநர்களாக, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பலர் பிற மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கைமுழுவதும்உள்ளபாடசாலைகளில்நிலவும்விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்கள்வெற்றிடங்களைநிரப்பும்நோக்கில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில் விரைவில்நியமனமும்வழங்கப்படவுள்ளது. இந்தநிலையில்தேர்வு செய்யப்பட்டவர்களின்பெயர் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு மட்டும் 186 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 20 பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். இதேபோன்று வடக்கு மாகாணத்தின் 22 பேர் கிழக்கு மாகாணத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஐவர் ஏனைய மாகாணங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறு மாகாணம் மாறி தெரிவு செய்யப்பட்டுள்ள பயிற்றுவிப்பாளர்கள் அனைவரையும் அவர்களது சொந்த மாகாணங்களில் பணியாற்றும் வகையில் கல்வி அமைச்சு ஏற்றஒழுங்குகளைச்செய்துவழங்கமுன்வரவேண்டும்என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-105)

## தொற்றா நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்குச் சிறப்புச் செயற்றிட்டம்

உள்ளூராட்சி அமைச்சு நடைமுறைப்படுத்துகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 3

தொற்றாநோய்தொடர்பான தேசியசெயற்பாட்டுத்திட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளது.

தொற்றாநோயிலிருந்தவிடுபடுவதற்கான இந்தச்செயற்றிட்டத்தை மாகாண சபை உள்ளூராட்சிஅமைச்சு, சுகாதாரஅமைச்சுடன்இணைந்த வகையில் மேற்கொள்கின்றது. இதற்காகஉள்ளூராட்சி அமைச்சு 3 பிரேரணைகளை முன்வைத் துள்ளது.

குறித்த பிரேரணைகளில் கழகத்தின் உடற்பயிற்சிக்கானவசதிகளைமுன்னேற்றுதல், உடற்பயிற்சியை மேம்படுத்துவதற்கான பாதைகளின் வசதிகளை வழங்குதல்போன்றசெயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. இதன் பிரகாரம் நீச்சல் தடாகம், மைதான விளையாட்டுத் தொகுதி, வதிவிட விளையாட்டு மைதானம் உள்ளிட்ட உடற்பயிற்சி மேற்கொள்ளும் இடங்களை முன்னேற்றுதல். ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆகக் குறைந்ததுஒருவிளையாட்டு இடத்தை உறுதி செய்வதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தி செயலுருப்பெறச் செய்தல்.

இதனைவிட 50 ஆயிரம் சனத்தொகை கொண்ட நகரப் பிரதே சங்களை இனம் கண்டுபெரும் விளையாட்டு இடத்தைத் தெரிவு செய்து நடைமுறைப்படுத்தல் என்பன அவதானம்செலுத்தப்படுகின்றன.

இந்தச்செயற்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், செயற்படுத்துதல் போன்ற விடயங்களை ஒவ்வொரு மாகாண சபையின் கீழ்வரும் உள்ளூராட்சிஅமைச்சுக்குப்பாரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்களில் கூடுதல் கவனம்செலுத்திதொற்றாநோய்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான தேசிய செயற்றிட்டத்துக்கு வலுச் சேர்க்குமாறுமாகாணசபைகளைஉள்ளூராட்சிஅமைச்சு கேட்டுள்ளது. (எ-50)

# 29 வருடங்களின் பின் பரம்பரைத் தொழிலில் மயிலிட்டி மக்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 3

29 வருடங்களின் பின்னர் மயிலிட்டித் துறைமுகமக்கள்தமதுபரம்பரைத்தொழிலில்இறங்கியுள்ளனர். யாழ்ப்பாணமாவட்டத்துக்குட்பட்ட வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் முடக்கப்பட்டிருந்த மயிலிட்டித்துறைமுகம் 29 வருடங்களின்பின்னர்கடந்தஆண்டுஇராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது.



இந்தநிலையில் மக்கள் தமது பிரதேசத்தில் குடியமரத் தொடங்கியுள்ளதுடன் தமது வாழ்வாதாரத் தொழிலும் ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத் தொழில் மீன்பிடியாகும்.

விடுவிக்கப்பட்டுசிலகாலங்களேகடந்துள்ளநிலையில்மீன்களைபிடித்துவெளியிடத்துசந்தைகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதுடன் பிடிக்கப்படுகின்ற இடங்களிலே வைத்தும் உள்ளூர் மக்களுக்கு விற்பனை செய்வதனையும் காணமுடிகின்றது. (எ-114,26)

# அபிவிருத்தி துரிதகதியில்

## கூறுகின்றார் ரணில் விக்ரமசிங்க



கண்டி,ஜூலை 3

நாட்டில் துரித கதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளைமுன்னெடுக்கதிட்டமிடப்பட்டுள்ளது.இதன் அடிப்படையில்அடுத்தவருடஇறுதிக்குள் 160தொடக்கம் 200 பில்லியன் ரூபா வரை பெறுமதி கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கண்டி கெலேபொக்க அரச பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குப் பிரதேசத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

அடுத்து வரும் மூன்று, நான்கு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் கணிசமான வளர்ச்சி அடையும் அதன் பின்னர் நாட்டு மக்களுக்கு சிறப்புச் சலுகைகளும் பெற்றுக்கொடுக்கப்படும்.

2015 ஆம் ஆண்டு மோசமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரத்தைகிரமமானமுறையில்விருத்தி அடையச் செய்வது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றார். இந்த நிகழ்வில் தலா ஏழு பேர்ச் நிலப்பரப்பை கொண்ட காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களும் தோட்டத்தொழிலாளர்களுக்குவழங்கப்பட்டன. (ற.ரி4)

## கொள்ளைக்கு பயன்படுத்திய சிற்றூர்தி மீட்பு

கொழும்பு.ஜீலை 3

மாத்தறையில்தங்கஆபரணநிலையத்தில்கொள்ளைக்காகப்பயன்படுத்தப்பட்டதுஎன்றுகூறப்படும்சிற்றூர்தியொன்று மீட்கப்பட்டதுடன்சந்தேகநபரொவரும் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் மொரகஹேனயில் நேற்று இடம் பெற்றது.

மாத்தறை கொள்ளை சம்பவத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கொஸ்கொட தாரக என்பருடன் சந்தேகநபருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகப் பொலிஸாரின்விசாரணைகளிலிருந்துதெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ற.ரி4)

## யானைத் தந்தங்கள் வைத்திருந்த சந்தேகநபர் கைது

கொழும்பு.ஜீலை 3

பிலிமதலாவபமுனுவயில்அனுமதிப்பத்திரமின்றி 4 யானைத் தந்தங்களை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

35 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ற.ரி4)

## கத்திக் குத்தில் பெண் சாவு

கொழும்பு.ஜீலை 3

ஊருபொக்கவில் நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட கத்தித் குத்து தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்தநபர்மூன்றுபெண்களைகத்தியால் குத்தி தாக்குதல்நடத்தியுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த பெண்கள் ஹீகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின்னர்சிகிச்சைபயனின்றிஒருவர் உயிரிழந்தார்.

மில்லமுல்லஹேனவைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கொலை நடைபெற்ற வீட்டுக்கு அருகில் உள்ள மற்றுமொரு வீட்டில் மயக்கமுற்ற நிலையில்காணப்பட்டுள்ளார். இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ற.ரி4)

## எலும்புக் கூடு கண்டெடுப்பு

கொழும்பு.ஜீலை 3

இரத்தினபுரி கல்லென விகாரையின் குகையொன்றிலுள்ள வீடொன்றிலிருந்து எலும்புக்கூடொன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த எலும்புக்கூடு நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது எனப் பொலிஸார்தெரிவித்தனர்.

எலும்புக்கூட்டின்மேல்பிக்குவின்ஆடையொன்று காணப்பட்டது எனக் கூறப்பட்டது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ற.ரி4)

## ஸ்கானருடன் ஐந்து பேர் கிளிநொச்சியில் கைது!



கிளிநொச்சி, ஜீலை 3

கிளிநொச்சி, பரந்தனில் வீடொன்றில் இருந்து ஸ்கானர் கருவி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த இருவரும், கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரும், பரந்தனைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட ஸ்கானர் கருவி புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. இதுவரை கிளிநொச்சியில் 3 புதையல் தேடும் ஸ்கானர் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி பல கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-214,6)

## தவறான முடிவால் பெண் உயிரிழப்பு

சாவகச்சேரி,ஜூலை 3

மீசாலை வடக்கில் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். கிளிநொச்சி விஸ்வமடுவைச் சேர்ந்த ஐயாத்துரை வள்ளியம்மை என்னும் 55 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு நேற்று உயிரிழந்தார். இந்தப் பெண் நோயின் தாக்கம் காரணமாகவே தவறான முடிவெடுத்தார் எனக் கூறப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் ஊடாக சாவு விசாரணகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற.ரி4.9)



## பாடசாலை மீது தாக்குதல்: கண்டித்துப் போராட்டம்



மட்டக்களப்பு.ஜீலை 3

மட்டக்களப்பு திராய்மடு தமிழ் வித்தியாலயத்தின் சொத்துகள் இனந்தெரியாதவர்களினால் சேதமாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திராய்மடு தமிழ் வித்தியாலயத்துக்குள் நேற்று முன்தினம் அத்துமீறிச்சென்ற இனந்தெரியாத நபர்கள் மாணவர்களின் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்களின் இருக்கைகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை எரியூட்டியுள்ளனர். இதனைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூன்றாவது தடவையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்புத் தலைமைய பொலிஸ் பொறுப்பதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடவியல் பிரிவுபொறுப்பதிகாரி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு அந்தப் பாடசாலைக்கு இரவு நேர காவலாளி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தெரிவித்தார். (ற.ரி4)

## சிறப்புற நேற்று முடிந்தது மடு ஆடி மாதத் திருவிழா

மன்னார், ஜீலை 3

மன்னார், மடுத் திருத்தல ஆடி மாதத் திருவிழா நேற்று நடைபெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு துணை ஆயர் மேக்ஸ்வெல்ட் சில்வா ஆண்டகை இணைந்து திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச் சொரூப பவனியும், மடு அன்னையின் ஆசீர்வாதமும் நடைபெற்றன. ஆடி மாதத் திருவிழா கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ச்சியாக நவநாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. திருவிழா திருப்பலி நேற்றுக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் நீதிவான் ரீ.ஜே.பிரபாகரன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடு ஆலய பரிபாலகர் அருட்தந்தை எஸ். எமிலியானுஸ் பிள்ளை மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் திருவிழாவில் கலந்து கொண்டனர். (ற-56,60)



## பரிஸ் நகரில் ஹெலிகொப்டரில் தப்பிய கைதி

பரிஸ், ஜூலை 3


திருட்டு வழக்கில் கைதாகி பிரான்ஸின் தலைநகர் பரிஸ் நகரின் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதியொருவர் உலங்கு வானூர்தி மூலம் தப்பிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற கொள்ளையில் தொடர்புடையவர் ரெடோயின் பெய்ட் (வயது 46). அந்த நாட்டின் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்று பின்னர் கைதான இவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து. பரிஸ் நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள ரியூ பகுதியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெயிட். 3 கைதிகளின் துணையுடன் சிறையில் இருந்து தப்பிச் சென்றார். ஆயுதக் குழுவொன்று அவரை உலங்குவதனூர்தியில் மீட்டுச் சென்றது. உலங்கு வானூர்தி தரையிறங்கிய இடம் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர் எங்கு தப்பிச்சென்றார் என்பது தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடத்தி வருகின்றனர். (ம)

## பன்னிருவரை மீட்பதற்காக ஆயிரம் பேர்

தாய்லாந்தில் குகையொன்றில் சிக்கியுள்ள 12 இளம் கால்பந்தாட்ட வீரர்களை மீட்கும் பணி ஒன்பதாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

தாய்லாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள தாம் லாவுங் நாங் மலைப்பகுதியில் கடந்த மாதம் 23ஆம் திகதி கால்பந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் ஒரு பயிற்சியாளர் மலையேற்றப் பயிற்சி மேற்கொண்டனர். அப்போது. மலைப்பகுதியில் கனமழை பெய்ததன் காரணமாக 13 பேரும் அங்குள்ள குகையில் ஒதுங்கியுள்ளனர். இதையடுத்தே அவர்கள் அனைவரும் குகையில் மாட்டுப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குகையில் மழை வெள்ளம் வந்த காரணத்தால் அவர்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. (ம)



# இம்மியளவும் விடமுடியாது!

## தென்சீனக் கடற்பரப்பு தொடர்பில் சீன அதிபர் ஜி ஜின்பிங் அதிரடி!

பீஜிங், ஜூலை 3

"தென்சீனக் கடற்பரப்பில் இம்மியளவும் விட்டுக்கொடுக்க முடியாது" என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் திட்டவிட்டமாகத் தெரிவித்தார்.

சீனாவின் அரச ஊடகமொன்றில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சீனா அதன் பிராந்தியத்தில் அமைதியையே விரும்புகிறது. தென்சீனக் கடற்பரப்பு சீனாவின் பகுதி. அதில் இம்மியளவையேனும் ஏனைய நாடுகளுக்கு விட்டுக்கொடுக்க மாட்டோம். தென் சீனக் கடற்பரப்புத் தொடர்பில் எழும் பன்னாட்டு அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியப்போவதில்லை" என்று ஜின் பிங் மேலும் தெரிவித்தார்.



தென்சீனக் கடற்பகுதி கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலையமாக அமைந்துள்ளது. உலகின் மூன்றில் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்தும், ஆண்டுதோறும் சுமார் ஐந்து லட்சம் கோடி டொலர்கள் மதிப்பிலான சரக்குகள் பரிமாற்றமும் இந்தப் பகுதி வழியே நடைபெறுவதாலும், இந்த கடலின் அடிப்பகுதியில் எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் இருப்பதாகச் சொல்லப்படுவதாலும் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. தென்சீனக் கடல்பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதற்கெதிராக பிலிப்பைன்ஸ் பன்னாட்டுத் தீர்ப்பா யத்தில் வழக்குத் தொடர்ந்தது. சீனாவுக்கு அதில் உரிமை இல்லை என்று முடிவாகியது. பிலிப்பைன்ஸைத் தவிர வியட்நாம், மலசியா, தாய்வன், புரூனே ஆகிய நாடுகளும் தென்சீனக் கடல்பகுதியைச் சொந்தம் கொண்டாடுகின்றன.

பன்னாட்டுத்தீர்ப்பாயம் சீனாவுக்கு உரிமையில்லை என்று தெரிவித்துவிட்ட போதிலும் தென்சீனக் கடற்பரப்பில் தனது நடவடிக்கைகளை சீனா தொடர்ந்துகொண்டே உள்ளது. செயற்கைத் தீவு, மிதக்கும் போர்த் தளபாடங்கள், செய்மதிக் கண்காணிப்பு என்று சீனாவின் இறுக்கமான பார்வைக்குள் அந்தக் கடற்பகுதி உள்ளது. அங்கு அவ்வப்போது சீனா போர்ப் பயிற்சிகளையும் நடத்துவதுண்டு. எனினும் ஐக்கிய நாடுகள் சபையினதும், பன்னாட்டுச் சமூகத்தினதும் அழுத்தம் காரணமாக கடந்த சில மாதங்களாக தென்சீனக் கடற்பரப்பு மீதான தனது வெளிப்படை ஆக்கிரமிப்பை சீனா கைவிட்டிருந்த போதிலும் சமீபகாலமாக மீண்டும் அந்தப் பகுதியில் இராணுவ நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காலத்து

பெரும்பாலான நாடுகளில் இறந்த மனிதர்களுக்கு ஓரிரு நாள்களில் இறுதிச் சடங்கு செய்துவிடுவது வழக்கம். ஆனால் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த கானா நாட்டில் வாரக் கணக்கிலிருந்து வருடக் கணக்கு வரை இறந்த உடல்களுக்கு இறுதிச் சடங்கு செய்வதற்கு எடுத்துக்கொள்கிறார்கள். யாராவது விரைவில் அடக்கம் செய்துவிட்டால், அது மிகப் பெரிய அவமரியாதையாகக் கருதுகிறார்கள். இது பழங்காலத்திலிருந்தே ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் கடைபிடிக்கப்பட்டு வரும் பழக்கம்தான்.

பல ஆப்பிரிக்க நாடுகள் இன்று இந்தப் பழக்கத்தை மாற்றிக்கொண்டன. ஆனால் கானாவில் இப்போதும் இது நடைமுறையில் இருக்கிறது. வாழும்போது குழந்தைகள், மனைவி அல்லது கணவன், பெற்றோர் மட்டுமே ஒரு குடும்பமாகக் கருதப்படுகிறது. ஆனால் இறந்துவிட்டால் குடும்பம் என்பது உற்றார் உறவினர்களையும் சேர்த்தே கருதப்படுகிறது. இறந்தவரின் தூரத்து உறவினர், பல ஆண்டுகள்

# காசாவில் து
# இரு பலஸ்

ஜெருசலேம், ஜூலை 3

இஸ்ரேல் - பலஸ்தீன எல்லைப் பகுதியான காசாவில் இஸ்ரேலியப் பொலிஸால் நேற்றுமுன் தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் பலஸ்தீனர்கள் இருவர் உயிரிழந்ததை அடுத்து காசாவில் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா அறிவித்து அங்கு தனது தூதரகத் தைத் திறந்தை அடுத்து இஸ்ரேல் பலஸ்தீன எல்லைகளான காசா, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளில் பலஸ்தீனர்கள் ஒன்றுதிரண்டு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவ்வாறு நடத்தப்படும் போரராட்டங்களில் இஸ்ரேல் படைகள் துப்பாக்கிச்சூடு நடத்தி அப்பாவிப் பொதுமக்களை கொன்றுகுவிப்பது வழங்கமாகவே ஆகிவிட்டது. இந்தப் பின்னணியிலேயே நேற்றுமுன் தினமும் நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூடு பார்க்கப்படுகிறது.



காசாவில் இஸ்ரேலால் மேற்கொள்ளப்படும் தாக்கு
கண்டித்து அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில்

# 5ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான கறுப்புப் பணத்தை சுவிஸ் வங்கியிடம் இருந்து மீட்கிறது நைஜீரியா அரசு

அபுஜா, ஜூலை 3

சுவிஸ் வங்கியில் பதுக்கப்பட்டிருந்த சுமார் 5ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான கறுப்புப் பணத்தை சுவிஸ் வங்கியிடம் இருந்து மீட்க நடவடிக்கை எடுத்துள்ளது நைஜீரிய அரசு.

1993ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை நைஜீரிய அதிபராகப் பதவி வகித்தவர் அசபா. இவர் தனது ஆட்சிக்காலத்தில் அரச நிதியை மோசடி செய்தார் என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியிருந்தன. தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் இலங்கை மதிப்பில் சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாவை அவர் சட்டத்துக்கு விரோதமான வகையில் சுவிஸ் வங்கியில் பதுக்கியிருந்தமை தெரியவந்தது.

இந்தப் பணத்தை மீட்டு நைஜீரியாவுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்து வந்தார் தற்போதைய அதிபர் புகாரி. தனது நடவடிக்கைகளில் அவர் வெற்றியும் கண்டுள்ளார். உலக வங்கியின் மேற்பார்வையில் சுவிஸ் வங்கியிடம் இருந்து 5 ஆயிரம் கோடி ரூபாவை நைஜீரியா விரைவில் பெறவுள்ளது. இந்தப் பணம் பொதுமக்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும் என்று நைஜீரிய அரசு அறிவித்துள்ளது. (ம)



# ஆப்கானில் தற்
# 19 அப்பாவிப்

காபூல், ஜூலை 3

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜலாலாபாத் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 19 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள நன்கர்ஹர் மாகாணத்தின் தலைநகரான ஜலாலாபாத் என்னும் இடத்தில் ஆப்கானிஸ்தான் அதிபர் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சி முடிந்து அவர் புறப்பட்டு சென்றவுடன் முக்காபெரட் சதுக்கம் பகுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 19 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த சிலர் கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)



# துக்கு ஏற்ப மாறவேண்டும் கானா

தொடர்பிலேயே இல்லாவிட்டாலும்கூட, அவர் வரும்வரை உடலைப் பாதுகாத்து வருகிறார்கள். அவர் விடயத்தைக் கேள்விப்பட்டு, வசதிப்படி வந்து சேர்ந்தால்தான் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டு உடல் அடக்கம் செய்யப்படுகிறது. கானாவைச் சேர்ந்த பத்திரிகையாளரும் அரசியல்வாதியுமான எலிசபெத் ஓஹென், "இங்கே இறந்த உடல்களை உடனடியாக அடக்கம் செய்யும் வழக்கம் இல்லை என்பது உண்மைதான். நாங்களும் இப்படி மாதக்கணக்கில் உடல்களை வைத்திருப்பது நல்லதல்ல என்று எவ்வளவோ விழிப்புணர்வுப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறோம். ஆனால் எங்களால் வெற்றிபெற முடியவில்லை. கடந்த வாரம் தேசிய ஊடகங்களில் ஒரு செய்தி வெளியானது. ஒரு கிராமத் தலைவர் இறந்து 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. அடுத்த தலைவர் யார் என்று இன்னும் முடிவாகவில்லை. அதனால் அவரது உடலை அடக்கம் செய்யாமல் வைத்திருக்கிறார்கள். வெளியுலகத்துக்கு இது அதிர்ச்சியான விடயமாக இருக்கலாம்.



ஆனால் கானாவில் இதை ஒரு விடயமாகக் கருத மாட்டார்கள்.

கோழி, விமானம், சப்பாத்து, பழம், மீன், சிங்கம் போன்ற உருவங்களில்,சவப்பெட்டிகளைச் செய்கிறார்கள். உறவினர்கள் அனைவரும் வந்துவிட்டால் இறந்த உடலை, அழகாகச் செதுக்கப்பட்டுள்ள சவப்பெட்டிக்குள் வைத்துப் புதைத்துவிடுவார்கள். இந்தச் சடங்குகளுக்கு ஆகும் செலவுகளை உறவினர்கள் பகிர்ந்து கொள்வார்கள். ஒருவேளை குடும்பம் இறந்தவரை உடனே புதைத்துவிட்டால் அத்தனை செலவுகளையும் அந்தக் குடும்பம் மட்டுமே ஏற்க வேண்டியிருக்கும். அதனால் எவ்வளவு காலமானாலும் உறவினர்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.


ஒருவருக்குத் திருமணம் ஆகி 50 ஆண்டுகள் ஆனால் கூட இறந்த பிறகு அவருடைய இறுதிச் சடங்குகளையும் அதற்கான செலவுகளையும் அவரது பிறந்த வீட்டைச் சேர்ந்த உறவினர்கள்தான் செய்ய வேண்டும் என்று இங்கே நடைமுறையில் இருக்கிறது. என்னுடைய பாட்டி 90 வயதில் இறந்தார். நாங்கள் மூன்றே வாரங்களில் அடக்கம் செய்துவிட்டோம். ஆனால் அவரது கிராமத்தில் உள்ளவர்கள் உரிய மரியாதை அளிக்கவில்லை, அவமரியாதை செய்துவிட்டோம் என்றும் கருதுகிறார்கள்" என்கிறார். (ம)

# ல் துப்பாக்கிச் சூடு; ஸ்தீனர் உயிரிழப்பு



டும் தாக்குதல்களைக் ... சபையில் தீர்மானம்

கொண்டுவரப்பட்டது. இதன்போது இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



இந்தோனேசியாவில் உள்ள அகுங் எரிமலை கடந்த சில தினங்களாக கடும் சீற்றமைந்து வருகிறது. எரிமலையில் இருந்து பரவும் சாம்பர் வீதிகள், வீடுகள் என்று எங்கும் வியாபித்துப் படர்ந்திருக்கும் இந்த ஒளிப்படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டது. (ம)

# தற்கொலைத் தாக்குதலில் ப் பொதுமக்கள் உயிரிழப்பு



# கச்சா உற்பத்தியை அதிகப்படுத்துமாறு சவூதியைப்பணித்தடொனால்ட்ட்ரம்ப்

ரியாத், ஜூலை 3

கச்சா உற்பத்தியை அதிகப்படுத்துமாறு சவூதி அரேபியாவைப் பணித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

ஈரானுடன் தான்கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அண்மையில் வெளியேறியது அமெரிக்கா. அமெரிக்கா வெளியேறியதை அடுத்து ஈரான் வெளிப்படையாகவே அணுவாயுதத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதையடுத்து ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதிக்கவும், அந்த நாட்டைத் தனிமைப்படுத்தவும் முயன்றுவருகிறார் ட்ரம்ப்.



அண்மையில், ஈரானிடம் இருந்து எந்த நாடும் கச்சா எண்ணெயை வாங்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டார். ஈரானுடன் இந்தியா மற்றும் துருக்கி நாடுகள் மிகப் பெரிய கச்சா ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளதால் இந்தியா, துருக்கி இரண்டும் ஈரானின் கச்சாவைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் கேட்டிருந்தார். இதற்கு துருக்கி மறுப்புத் தெரிவித்தது. இதையடுத்து தன்னை அவ்வளவு இலகுவில் கச்சா சந்தையில் இருந்து அப்புறப்படுத்திவிட முடியாது என்று ஈரான் தெரிவித்தது. இதையடுத்தே ஈரானைத் தனிமைப்படுத்துவதற்காக சவூதியை அதிகப்படியான கச்சாவை உற்பத்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டார் ட்ரம்ப். நாளொன்றுக்கு 20 லட்சம் பீப்பாய்கள் என்ற வகையில் கச்சாவை சவூதி இனிவரும் காலங்களில் உற்பத்தி செய்யும் என்று ட்ரம்ப் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டார். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிகழ்காலத்தைக் கவனியுங்கள்


**2020** ஆம் ஆண்டு அரச தலைவருக்கான தேர்தல் தொடர்பிலான கருத்துப் பகிர்வுகள்தான் இலங்கைஅரசியலரங்கில்தற்போது முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. கோத்தபாய தேர்தல் களத்தில் இறக்கப்படுவாரா என்பது தொடர்பில் ஏகப்பட்ட வாதங்களும் பிரதி வாதங்களும் இடம்பெற்று வருகின்றன. 2020ஆம் ஆண்டு நடைபெறும் அரச தலைவருக்கான தேர்தலுக்கு தற்போதே பரப்புரைகள் ஆரம்பித்துள்ளனஎன்று சொல்வதலிலும் தவறுள்ளதாகப் புலப்படவில்லை. 'கோத்தா காய்ச்சல்' கூட்டு அரசை புரட்டியெடுக்கிறது என்று சொன்னாலும் அது மிகையாக இருக்கப்போவதில்லை.

''கோத்தபாய எனது முன்னிலையிலேயே ஒருவரைச் சுட்டுக்கொல்லும் உத்தரவைப் பிறப்பித்தார்'' என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்தும், ''முன்னாள் அரசதலைவர் மகிந்தவுக்குப் பயப்படாத நாம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவுக்குப் பயப்படுவோமா?'' என்று அமைச்சர் பி.ஹரிசன் எழுப்பியுள்ள கேள்வியும், 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலுக்கான அச்சாரங்கள். அத்துடன் 'கோத்தா காய்ச்சல்' கூட்டு அரசைப் பலமாகத் தாக்குகிறது என்பதற்குமான மிக அண்மைக்கால இரண்டு உதாரணங்களும்கூட.

எட்டுமாதங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்கல் முயற்சிகள் மீண்டும் தேக்கமடைய ஆரம்பித்துள்ளன. கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகியமாவட்டங்களில்உள்ளகுளங்களைச்சீரமைக்கவென உலக வங்கி இலங்கைக்கு 7.9 மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தநிலையில், இந்தத்திட்டத்தின்மீதானநடைமுறைகள், பணிகள் குறித்து அது அதிருப்தி தெரிவித்துள்ளது. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை விரைந்து தீர்க்க வேண்டும் என்று பன்னாட்டுச் சமூகம் அழுத்தம் கொடுக்கிறது. கனடா மிகவும் சமீபத்திலேயே 'வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்' என்று கூட்டு அரசைக் கோரியுள்ளது. இவ்வாறாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பணிகள் தலைக்குமேல் உள்ள நிலையில் 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் தொடர்பில் கண்கணம் கட்டிக்கொண்டு நிற்பதென்பது பெரும் அபத்தமே. நாட்டில் பொருளாதார முடக்கத்தை ஏற்படுத்தக்கூடியதும், நிகழ்கால அரசின் உறுதித்தன்மையை, இருப்பை சீர்குலைக்கும் செயல்களே இவை. இந்தநாட்டின் அரசியல் பெரும் இழிநிலையை எட்டியுள்ளது என்பதையும், அரசியல்வாதிகளின் உச்சக்கட்டச் சுயநலத்தையும் புடம்போட்டுக் காட்டுகின்றன இவ்வாறான சமீபகாலப் பதிவுகள்.

இலங்கையின் நிலைதான் இவ்வாறு உள்ளது என்று பார்த்தால் வடபகுதியின் நிலை அதைவிட மோசமாக உள்ளது. றெஜீனா என்கிற பள்ளிச் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளாள், வட்டுக்கோட்டைப் பகுதியில் 60 வயதுப்பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார், வாள்வெட்டுத் தாக்குதல்கள், தொடர்கொள்ளைகள், அடிதடி, வன்முறைகள் என்று கடந்தகாலங்களில் கண்டிராத, முழுவதும் மாறுபட்ட யாழ்ப்பாணக் குடாநாடு கண்முன்னே படிப்படியாக உருவாகி வருகிறது. மக்கள் தமது அன்றாடத்தை மிகப்பெரும் இன்னல்களுக்குள் செலவிட்டுக் கொண்டிருக்க அடுத்த முதல்வர் வேட்பாளர் யார்? என்பது தொடர்பிலேயே இங்குள்ள அரசியல் பிரதிநிதிகள் தமது காலத்தை கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அசம்பாவிதத்தைக் கட்டுப்படுத்த அவர்களிடத்தில் திட்டங்கள் இல்லை, செயலூக்கம் இல்லை, பிடிப்பு இல்லை, துணிவு இல்லை, அர்ப்பணிப்பு இல்லை, குறைந்தபட்சம் தகுதிகூட இல்லை. ஒன்றுமட்டும் உள்ளது. அது ஆசை. மக்கள் பிரதிநிதி என்ற அந்தஸ்துக்கான ஆசை. மக்களைப் பிரதிபலிப்பவனே மக்கள் பிரதிநிதி. மக்களைப் பிரதிபடுத்துதல் என்பதில் மக்களின் துன்பங்கள், பிரச்சினைகள், இன்னல்கள், தேவைகள், விருப்பங்கள் என்று பெரிய பட்டியலே உள்ளது. பொறுப்புணர்ந்து செயற்படுங்கள். எதிர்காலத் தேர்தல் போட்டிகளில் மக்களின் நிகழ்கால நிம்மதியைத் தொலைக்க முனையாதீர்கள். இது கூட்டு அரசுக்கும், வடக்கு அரசுக்கும் மிகப் பொருத்தம்.



# —சீனா— வல்லரசானது எவ்வாறு?

**40** ஆண்டுகளில் உலகின் மிகச் சக்திவாய்ந்த நாடாக சீனா உருவானது எப்படி? சீனாவில் மா சேதுங் காலத்துக்கு பிறகு, பொருளாதாரப் புரட்சி ஏற்படுத்திய புகழ் டெங் சியாபிங் என்பவரையே சாரும்.

1978ஆம் ஆண்டு டெங் சியாபிங் தொடங்கிய பொருளாதாரப் புரட்சி 2018ஆம் ஆண்டு வரை, 40 ஆண்டுகள் பயணித்து இன்று சீனா உலக அளவில் பெற்றிருக்கும் மகத்தான இடத்தை அடைந்திருக்கிறது. இதை, சீனாவின் இரண்டாவது புரட்சி என்று சொல்கிறார் டெங் சியாபிங். இந்தப் பொருளாதாரச் சீர்திருத்த த்துக்குப் பிறகே உலக அளவில் பெரிய பொருளாதாரச் சக்தியாக வலுவுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது சீனா. இன்றைய நிலையில் சீனாவிடம் அந்நிய செலாவணி இருப்பாக 3.12 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்ளன.

1978ஆம் ஆண்டில் டெங் சியாபிங் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு 1.8 வீதமாக இருந்தது. 2017ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு 18.2 வீதமாக உயர்ந்துவிட்டது. சீனப் பொருளாதாரம் வளர்ந்துவரும் பொருளாதாரம் மட்டுமல்ல, தனது வலிமையான கடந்த காலத்தை நோக்கி மீண்டும் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். 15 மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு கிட்டத்தட்ட 30 சதவீதமாக இருந்தது.

### சீனாவின் சக்திமிகுந்த தலைவராக ஜின் பிங்

சீனாவை வலுவாக மாற்றியவர்களைப் பற்றி பேசும்போது, மா சேதுங், டெங் சியாபிங் மற்றும் தற்போதைய தலைவர் ஜி ஜின்பிங் ஆகிய மூவரின் பெயர் முதலிடங்களைப் பிடிக்கும். டெங் சியாபிங்கின் பொருளாதாரப் புரட்சி தொடங்கிய 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜி ஜின்பிங் போன்ற ஒரு வலுவான தலைவரின் தலைமையில் சீனா மீண்டும் முன்னோக்கி நகர்கிறது.

உற்பத்தி அடிப்படையில் சீனாவின் பொருளாதாரத்தை வலுவாக்க விரும்புகிறார் ஜி ஜின்பிங். அதற்காக அவர், டெங் சியாபிங்கின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கிறார். அதன்படி, பொருளாதாரத்தை திறந்துவிடுவது, பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது உட்பட பல முயற்சிகளை மேற்கொள்கிறார். சீனாவின் பொருளாதார வெற்றி மற்றும் கம்யூனிச அரசியலுக்கு இடையே மோதல் நிலவும் சூழ்நிலையும் ஏற்பட்டது. சீனாவின் பொருளாதார முன்னேற்றமானது, அந்த நாட்டின் கம்யூனிச அரசியலின் சித்தாந்தத்தில் இருந்து மாறுபட்டது. சீனாவின் முழு அரசியல் அதிகாரமும் ஜின்பிங்கின் கைகளுக்குள் அடங்கியுள்ளது. இந்த நிலையில் சீனாவின் தலைவர்கள் பொருளாதாரத்தை எந்த அளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகிறார்கள்? என்ற கேள்வி எழுகிறது.

### சீனப் பொருளாதாரத்தின் மாற்றம்

சீனாவின் எழுச்சியின் கதை, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சிக் கதை அல்ல. ஆனால் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருந்த பொருளாதாரத்திலிருந்து விடுபட்டு, சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிய பொருளாதாரப் புரட்சியின் கதை. உலகின் பல நாடுகள் சீனாவைப் போலவே மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், பல்வேறு கோணங்களில் இந்த விடயத்தில் வெற்றிபெற்று முதலிடம் பிடித்தது சீனா.



உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சீரான முன்னேற்றத்தை மேற்கொண்ட சீனா, சந்தையின் மீதான நம்பிக்கையையும் விட்டுவிடவில்லை. சீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, வெளிநாட்டு முதலீடுகளை எங்கு செய்யலாம், எங்கு செய்யக்கூடாது என்பதில் கவனமாக முன்னுரிமை கொடுத்து முடிவெடுத்தது சீனா.

> சீனாவின் முதல் தலைவரான மாவோவின் கீழ், உள்நாட்டு போரால் பிளவுபட்டு இருந்த நாடு ஒன்றுபட்டது. இரண்டாவது தலைவரான டெங் சியாபிங்கின் கீழ், நாடு வளமடைந்தது. ஜின் பிங்கின் இந்த புதிய சகாப்தத்தில், நாடு மேலும் அதிக ஒற்றுமை மற்றும் வளங்களை பெறுவதோடு, உள்நாட்டில் ஒழுக்கத்தையும், வெளிநாட்டில் உறுதியும் பெறவேண்டும். இதுவே சீன அரசினதும் ஜி ஜின் பிங்கினதும் தற்போதைய இலக்கு.

இதற்காக, சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்று உருவாக்கப்பட்டது. தெற்கு கரையோர மாகாணங்கள் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்க்காக தேர்வு செய்யப்பட்டன. கம்யூனிச சோசலிச அரசியல் சூழலில் வலுவான மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்தார் டெங் சியாபிங். அதன் முதல் கட்டமாக சோவியத் பொருளாதார மாதிரியின் அமைப்பை முற்றிலுமாக மாற்றியமைத்த அவர், பின்னர் சீனாவின் தேவைகளுக்கு ஏற்ப படிப்படியாக, சோசலிச அடிப்படையில் பொருளாதாரத்தில் நவீனமயமாக்கல் செயல்முறையை தொடங்கினார்.

டெங் சியாபிங் தொடங்கிய சமுதாய பொருளாதார சீர்திருத்தம் உலக சரித்திரத்தில் இதற்கு முன் மேற்கொள்ளப்படவில்லை. 1978 -2016 ஆண்டுகளுக்கு இடையில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3,230 வீதமாக அதிகரித்தது. இதே காலகட்டத்தில் 70 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டனர். 38.5 கோடி மக்கள் நடுத்தர வர்க்கத்தினராக உயர்த்தப்பட்டனர்.

சீனாவின் வெளிநாட்டு வர்த்தகம் 17 ஆயிரத்து 500 சதவிகிதம் அதிகரித்தது. 2015ஆவது ஆண்டுவாக்கில் சீனா வெளிநாட்டு வர்த்தகத்தில் உலக அளவில் முன்னிலை பெற்றது. 1978ஆம் ஆண்டில், ஆண்டு முழுவதிலும் செய்த வர்த்தகத்தை தற்போது இரண்டே நாள்களில் செய்கிறது சீனா.

சீன கம்யூனிஸ்ட் கட்சி (சி.சி.பி) கூட்டு தலைமையின் கீழ், சீனாவில் சமூக பொருளாதார மாற்றத்துக்கான துரிதமான செயல்முறையைத் தொடங்கினார் டெங் சியாபிங். 1960 மற்றும் 70களில் வாங்கிய பல அடிகளுக்குப் பிறகு மாவோவின் பாணியைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையையும் அவர் கடைபிடித்தார். பன்னாட்டு உறவுகள் தொடர்பாக சில கொள்கைகளை வைத்திருந்த டெங், தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளமாட்டார். சீனப் பொருளாதாரத்தை துரித கதியில் உயர்த்துவதிலேயே அவரது கவனம் முழுமையாக இருந்தது.

**ஜின்பிங் மற்றும் புதிய சகாப்தம்**

டெங் சியாபிங் அடிக்கடி இரண்டு பூனை சித்தாந்தத்தை மேற்கோள் காட்டுவார். ஓடும் எலியை பூனை பிடிக்கும் வரை, பூனையின் நிறம் கறுப்பா வெள்ளையா என்பது முக்கிய மில்லை என்று அவர் தெரிவிப்பார்.

இதே வழியில், சீன மனோபாவத்தில் புதிய தொழில் துறை வளர்ச்சியை முன்மொழிந்தார் ஜின்பிங். 2014ஆம் ஆண்டில் 12ஆவது தேசிய காங்கிரசில் உரையாற்றும் போது, 'இரண்டு பறவை தத்துவம்' என்ற ஒன்றை முன்வைத்தார் அவர். ''கூட்டைத் திறந்து விட வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தக்கூண்டில் வயதான, இறுதி காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் பறவைகளை அடைக்க வேண்டும்" என்று கூறினார் ஜின் பிங்.



"சோசலிசம் மற்றும் புதிய சகாப்தத்தில் சீனாவின் பண்புகள்" என்ற தலைப்பில் தனது தத்துவத்தை கடந்த ஆண்டு அறிமுகம் செய்து வைத்தார் ஜின் பிங். அதை தொடர்ந்து, உயர் அதிகாரிகளும், அந்த நாட்டின் ஊடகங்களும் தொடர்ந்து அதை, ஜின்பிங்கின் கோட்பாடுகள் என்றே குறிப்பிட்டன. இதை செயல்படுத்தினால், சீனா வெற்றியடையும் என்று அவர் கூறினார். வளர்ச்சியுடன், அடிப்படை தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

சீனாவின் அடுத்த தலைவர் யார்? என்பதே இப்போது சீனாவில் எழுப்பப்படும் முக்கியமான கேள்வி. கடந்த ஆண்டு மார்ச் மாதம், சீன நாடாளுமன்றம் (தேசிய மக்கள் காங்கிரஸ்), அதிபர் பதவிக்கான கால வரம்பை நீக்கியது. ஜின்பிங் கோட்பாடு, சீனாவில் சோசலிசம் பற்றிய புதிய பார்வையை அறிமுகப்படுத்தியது. இது சீனாவின் ஒரு புதிய அத்தியாயத்தை அல்லது சகாப்தத்தைக் குறிக்கிறது.

விளக்கமாகக் கூறினால், சீனாவின் முதல் தலைவரான மாவோவின் கீழ், உள்நாட்டு போரால் பிளவுபட்டு இருந்த நாடு ஒன்றுபட்டது. இரண்டாவது தலைவரான டெங் சியாபிங்கின் கீழ், நாடு வளமடைந்தது. ஜின் பிங்கின் இந்த புதிய சகாப்தத்தில், நாடு மேலும் அதிக ஒற்றுமை மற்றும் வளங்களை பெறுவதோடு, உள்நாட்டில் ஒழுக்கத்தையும், வெளிநாட்டில் உறுதியும் பெறவேண்டும். இதுவே சீன அரசினதும் ஜி ஜின்பிங்கினதும் தற்போதைய இலக்கு.

அரசுக்கு ஜின்பிங் கடிவாளம் போட்டார். உதாரணமாக, அரச நிறுவனங்களை கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கி, நிர்வாகத்தின் பொறுப்பில் முழுமையாக ஒப்படைத்தார். அதேபோல், தொண்டு நிறுவனங்கள் மீதும் கிடுக்கிப்பிடி போட்டார்; பல மனித உரிமை ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர்.

**தாராளமயமாக்கலின் எல்லை**

தாராளமயமாக்கலுக்கு முழு அளவிலான திட்டத்தை சீனா தயார் செய்துவிட்டது. சீனத் தலைவர்கள் மத்திய தலைமையை வலியுறுத்தினாலும், உள்ளூர் அரசுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இடையே ஆழமான இணக்கம் ஏற்பட்டுவிட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சீனா அதிகாரம் வழங்கியிருக்கிறது. முந்தைய தலைவர்களுடன் ஒப்பிடுகையில், ஜின்பிங் பொதுத்துறைதனியார் கூட்டாண்மையை வலியுறுத்துபவராக இருக்கிறார்.


2014க்கு பிறகு, சீனாவில் தனியார் முதலீடு துரித வளர்ச்சி கண்டுள்ளது. உலகம் முழுவதும் சீனாவின் வர்த்தகத்தை விரிவாக்கினார் ஜின்பிங். பட்டு சாலை மற்றும் பொருளாதார வழித்தட திட்டத்தின் கீழ், ஆசியா, ஐரோப்பா, மற்றும் ஆபிரிக்கக் கண்டங்களை கட்டமைப்பு மற்றும் வணிக வலைப் பின்னல் மூலம் இணைக்கும் திட்டத்தை அவர் முன்னெடுத்திருக்கிறார்.

சமீபத்திய நாள்களில், சீனாவின் நோக்கங்கள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்படுகின்றன. உதாரணமாக, சீனாவிடம் இருந்து வாங்கிய கடனை இலங்கை செலுத்த தவறிவிட்டதால், தனது அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு ஒப்படைத்தது இலங்கை.

இதே போன்ற பிடியில்தான் ஜிபௌட்டி, பாகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளும் சீனாவிடம் சிக்கியுள்ளன. உலக வர்த்தக அமைப்பில் 2001ஆம் ஆண்டுமுதல் சீனா இடம்பெற்றுள்ளது. அப்போதிலிருந்து வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக சீனா ஏழாயிரம் விதிமுறை களை கைவிட்டுவிட்டது. 2011ஆம் ஆண்டில் இருந்து சீனா சராசரியாக 10 சதவிகித அளவுக்கு வரியைக் குறைத்து விட்டது.

## ஆசிரியருக்கான கடிதம்

# தட்டாதெருவின் சிரமம் நீங்கியது



யாழ்ப்பாணத்தில் உள்ள சனநெரிசல் மிகுந்த சந்திகளில் தட்டாதெருச் சந்தியும் ஒன்று. இந்தச் சந்தியில் இருந்து மானிப்பாய் நோக்கித் திரும்பும் வீதியின் ஆரம்பத்தில் சுமார் 100 மீற்றர் அளவுக்கு மிகப்பெரிய குழிகளும், பள்ளங்களும் இருந்தன. இதனால் வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டன. சிலவேளைகளில் வீதிகளில் இருந்து பிரிவடைந்து இருந்த கற்கள் கால்களையும், வாகனங்களின் ரயர்களையும் பதம்பார்த்தமை பதிவுகள். கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உள்ளிட்ட பல்வேறு பாடசாலைகளின் மாணவர்களும், பல்லாயிரக்கணக்கான பயணிகளும் இந்த அசௌகரிய நிலையால் பாதிக்கப்படும் அவலத்தை இரண்டு தடவைகள் உதயன் ஆசிரியருக்கு கடிதத்தின் மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளேன். முதல் கடிதம் வெளியானதும் வீதியைப் புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இடைநடுவில் கைவிடப்பட்டன. இரண்டாவது கடிதம் வெளியாகி சில நாள்களில் எஞ்சியிருந்த பணிகளும் முழு மைப்படுத்தப்பட்டு தற்போது வீதி அழகுற செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்த வீதியால் செல்லும் பயணிகள் முன்பைப்போல் அல்லாமல் மிகவும் நேர்த்தியான முறையில் தமது பயணத்தை மேற்கொள்ள முடிகிறது. உரிய நடவடிக்கை எடுத்த அதிகாரிகள், இது விடயத்தில் உழைத்த பணியாளர்கள் அனைவருக்கும் மனதார நன்றிகள்.

பிரகாஸ்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும்.

**இடபம்:** எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** டந்த கால உழைப்பின் பயனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிதான அணுகுமுறை பின்பற்றுவது நல்லது. சுமாரான அளவில் பணவரவு இருக்கும்.

**கடகம்:** உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் விழிப்புடன் இருக்கவும். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சியால் வெற்றி காண்பீர்கள்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். செயலில் நேர்த்தியும் வசீகரமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நல்ல குணங்களை பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், பணவரவ அதிகரிக்கும் .எதிபார்த்த நன்மை கிடைக்கும்.

**துலாம்:** பொது விஷயங்களில் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**விருச்சிகம்:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற சிரம சூழ்நிலையை சரி செய்வீர்கள்.

**தனுசு:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை மலரும். தொழில், வியாபாரத்தில்அபரிமிதமானவளர்ச்சிஉண்டு. வருமானத்தில் எதிர்கால தேவை கருதி கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**மகரம்:** பணிச்சுமை உருவாகி அல்லல் தரலாம். அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்புத் தேவை.

**கும்பம்:** உறவினரிடம் இருந்த உங்கள் மீது கொண்ட மனஸ்தாபம் சரியாகும். தொழில், வியாபாரம் வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** சிலர் உங்களுக்குதந்த வாக்குறுதியை மீறி நடக்கலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பர்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | 1 | | | |
| 6 | | | | 5 | | | | 8 |
| | | 8 | | 2 | | 5 | | |
| | 2 | | 4 | | 5 | | 7 | |
| | | 5 | | | | 3 | | |
| 2 | | | | | | | | 9 |
| | | 7 | 9 | | 8 | 1 | | |
| 1 | 5 | | 7 | 4 | 2 | | 6 | 3 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 9 | 8 | 2 | 5 | 6 | 1 | 4 |
| 4 | 2 | 8 | 9 | 6 | 1 | 3 | 5 | 7 |
| 1 | 6 | 5 | 7 | 4 | 3 | 8 | 2 | 9 |
| 2 | 4 | 6 | 5 | 8 | 7 | 9 | 3 | 1 |
| 8 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 | 6 | 5 |
| 5 | 1 | 7 | 6 | 3 | 9 | 2 | 4 | 8 |
| 3 | 5 | 2 | 1 | 9 | 8 | 4 | 7 | 6 |
| 9 | 7 | 4 | 2 | 5 | 6 | 1 | 8 | 3 |
| 6 | 8 | 1 | 3 | 7 | 4 | 5 | 9 | 2 |

நேற்றைய விடை



# அடுத்தமாதம் வெளியாகிறது விஸ்வரூபம் -2

கமலஹாசனின் 'விஸ்வரூபம்2' படத்தின் முன்னோட்டக்காணொலிக்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்திருக்கும் நிலையில், படத்தில் இருந்து'நானாகியநதிமூலமே'என்றபாடல்ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது.

ஜிப்ரான் இசையில், வைரமுத்து வரிகளில், கமல் பாடிய அந்த பாடல் சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. அத்துடன் படத்தின் வெளியீடு குறித்த அறிவிப்பையும் படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அதன்படி, விஸ்வரூபம்2 எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் கமலஹாசனுடன் ஆன்ட்ரியா, ராகுல் போஸ், பூஜாகுமார், சேகர்கபூர், வகீலா ரகுமான் ஆகியோரும் நடித்துள்ளனர்.




செல்லக்குழந்தை @selva_
நிபந்தனைகளிடாத வரை மட்டுமே
உறவுநிலைத்திருக்கும்
நிரந்தரமாய்...

சிலந்தி™@nandhu_twitts
அதிகம் 'சிரித்தால்'வயிறு
வலிக்கும்..
அதிகம் 'அழுதால்' மனது
வலிக்கும்..
ஆனால் இரண்டுமே 'ஆறுதல்'
தரக்கூடியது..!

போஸ் பாண்டி@Bosepandi_itz
செய்த தவறுக்கு
மன்னிப்புக் கேட்பதில்
தன்மானம்
இழப்பதில்லை
என அறிக.







காதல் வளத்தேன்... காதல் வளத்தேன்
உசுருக்குள்ள கூடு கட்டி காதல் வளத்தேன்...



அதுக்கு பதிலா கொஞ்சம் தண்ணி ஊத்தி
ஒரு மரத்த வளடா மூதேவி....

கேட் ஓனர் பாத்திரக்கடை
முதலாளியா இருப்பாரோ...?



வேலை செய்யும்போது ஒருத்தனும்
நம்மள கவனிக்கமாட்டாங்க....




ஒரு அஞ்சு நிமிசம் செல்போன் எடுத்து
பாத்தா போதும் "எப்ப பாரு செல்ல
நோண்டிட்டே இரு" எண்டு குரல்
வரும்ச்சே....


ES
Printers
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
மணியம் கபே
Maniyam Cafe
AR.Rodny
18
BATTLE NORTH
ES Printers
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள்,
கையேடு (Handbills),
நோட்டீஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1479 சீட்டிழுப்பு திகதி 02.07.2018

வெற்றி இலக்கங்கள்
09 27 43 50 E

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 23, 339, 836/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk 2018.07.05
SMS: DLB LOT JY
1919
0114 824 824, 0112 333 778



## வேலையாள்கள் தேவை

- Bill போடுதல்
- கணக்காளர்
- பொதி சுற்றுதல்
- Store Keeper

ஆண், பெண் இருபாலார்களும் தேவை. நேர்முக தேர்வுகள் நாளை (04.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். நேரில் சமுகம் தரவும். (CS/17943)(11,17)

N0.12, மகாத்மா காந்தி றோட், யாழ்ப்பாணம்.
076 659 3080


## 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இரத்தினம் இரத்தினராசா**
(BSc, Dip.in. Ed, மும்மொழி ஆசான்)



அன்புக்கும் பாசத்துக்கும் வரைவிலக்கணமாய்
குணத்தில் கோபுரமாய் அறிவில் சிகரமாய்
சேவையில் தொண்டனாய் உயர்ந்து நின்ற எங்கள்
அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பாரதி பவனம், அல்வாய். (ANE/517)(11,17)

தோற்றம் 07.12.1938 மறைவு 03.07.1988



## இணுவில் மஞ்சத்தடி
### அருணகிரிநாதர் சிவசுப்பிரமனியர் சுவாமி கோயில்

**மஞ்சத்தடி முருகன் அருட்பாமாலை இறுவட்டு வெளியீடு-2018**

**தலைமை**
திரு.தியாகராசா சந்திரகாசன்
(செயலாளர் ஆலய பரிபாலன சபை)

**முதன்மை விருந்தினர்கள்**
திருமதி.சுகுணறதி தெய்வேந்திரம்
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.)

செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, சிவபூமி அறக்கட்டளை - இலங்கை)

**சிறப்பு விருந்தினர்**
பேராசிரியர் கந்தையா தேவராசா
(முன்னாள் பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் யாழ். பல்கலைக்கழகம்)

**ஆசியுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(இரண்டாவது குருமஹா சந்நிதானம் நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனம்)
சுவாமி சிதாகானந்தா
(சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.)
சிவஸ்ரீ குமார சரவணபவ குருக்கள்
(பிரதம குரு)
பிரம்மஸ்ரீ ம.கிருஷ்ண மூர்த்தி சர்மா
(ஸ்தானீக குருமணி)

**வெளியீட்டுரை**
பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**இடம் :- ஆலய மண்டபம் காலம் :- இன்று 03.07.2018**
**நேரம் :- பிற்பகல் 04.00 மணி**

**நிகழ்ச்சி நிரல்**
1. இறை வணக்கம் 2. ஆசியுரை
3. வரவேற்புரை-திரு க.தர்மநாயகம்(பொருளாளர்)
4. தலைமையுரை 5. வெளியீட்டுரை
6. இறுவட்டு வெளியிடுதல்
7. முதற்பிரதி பெறுதல்
8. இசையமைப்பாளர் கௌரவிப்பு-கணேசசுந்தரம் சிறிதுகன்
9. கௌரவிப்பு 10. பிரதிகள் வழங்கல்
11. நன்றியுரை -க.செந்தில்குமரன் (உப செயலாளர்)

பாடலாக்கம் :- மகா வித்துவான் வீரமணிஐயர்
பாடியவர் :- எஸ்.ஜீ.சாந்தன்
இசை :- கணேசசுந்தரன் சிறிதுகன் சப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம், விநாயகர் வீதி, நல்லூர்

செயலாளர்,
ஆலய பரிபாலன சபை,
மஞ்சத்தடி, இணுவில்.

தலைவர்:
க.லோகேஸ்வரன்
ஆலய பரிபாலன சபை,
மஞ்சத்தடி, இணுவில்.

அனைவரையும் இந்நிகழ்விற்கு அன்புடன் அழைக்கின்றோம்.
இறுவட்டின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## மரண அறிவித்தல்

# சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம்



மலர்வு 28.04.1938 உதிர்வு 30.06.2018

இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் மோட்டோர்ஸ் உரிமையாளர் சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம் கடந்த (30.06.2018) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையார் விலாஸ் உரிமையாளர் சி.ம.கணபதிப்பிள்ளை அன்னலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற டெனியா தாமோதரம்பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி இராசலெட்சுமியின் அன்புக் கணவரும் சிவாநந்தன், சிவகுமாரன், சிவஅன்புசிவசோதி, சிவபாலன் (கனடா), சிவசக்தி (கனடா) மற்றும் சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியத்தின் பெறாமகனும் பிள்ளையார் இன் உரிமையாளர் ரெட்ணேஸ்வரனின் சித்தப்பாவும் சாரதாதேவி, மலர்விழி, சர்மிலா, ராகினி (கனடா), விஜேந்திரன் (கனடா), லகுசியாமா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவானுஜன், சிவருஜன், சிவனிஜன், நிருஜிகா, சிவநீவன், பவானிகா (கனடா), கர்நிகன் (கனடா), சிவாஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராசதுரை, பிள்ளையார் மெற்றல் உரிமையாளர் குணரெட்ணம் (கனடா), அபிமன்யு (லண்டன்), காலஞ்சென்ற சகாதேவன், தையல்நாயகி, கமலநாயகி காலஞ்சென்ற சற்குணதேவி, காலஞ்சென்றவர்களான தர்மு, பரிமளம், நளாயினி, பீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன், கர்ணன் ஆகியோ ரின் சகோதரரும் ரூபவதி (சுவிஸ்), சரஸ்வதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் பாலசுப்பிரமணியம், பாக்கியலெட்சுமி (கனடா), இராசேந்திரன் (NTR ரான்ஸ்போர்ட்), புவனேஸ்வரி (கனடா), இராஜலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் (கனடா), சாரதாமணி (இந்தியா), காலஞ்சென்ற தேவலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவஜோகம், வரலெட்சுமி (கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற லயன் பிரான்ட் ஏஜன்சி இரத்தினசிங்கம், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற கட்டடப் பரிசோதகர்), காலஞ்சென்ற தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(சிவலிங்கம் மோட்டோர்ஸ்)

021 222 3212



# அணுவாயுதம் இல்லாத உலகம் சாத்தியமாகுமா?

இந்துமதி

அணு ஆயுதங்கள் இல்லாத உலகொன்றைக் காண்பதற்காக உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டிய தருணம் இது என்றுதான் கூற வேண்டும். அமெரிக்க அரச தலைவரும், வடகொரியாவின் அரச தலைவரும் சிங்கப்பூரில் கடந்த மாதம் சந்தித்துப் பேச்சு நடத்தியதும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகப் பார்க்கப்பட்ட போதிலும் தற்போது இரண்டு நாடுகளும் தத்தமது உடன்படிக்கையில் இருந்தும் வாக்குறுதிகளில் இருந்தும் விலகிச்செல்ல எத்தனிக்கின்றனவா என்ற ஐயப்பாடு மனதில் வலுவாக நிழலாடுகிறது.

**உலகின் பல நாடுகளில் அணுவாயுதம் உள்ளது**

அணுவாயுதங்கள் பல நாடுகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளமை இந்த உலகின் இருப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. சில நிமிடங்களில் முழு உலகையும் சாம்பல் மேடாக மாற்றக் கூடிய வல்லமை அந்த ஆயுதங்களுக்கு உள்ளது. ஆரம்பத்தில் மிகப்பெரிய நாடுகள் மட்டுமே அணுவாயுத பலத்தைக் கொண்டிருந்தன. ஜப்பான் நாட்டின் தொல்லைகளைத் தாங்க முடியாத அமெரிக்கா முதன் முதலாக அந்த நாட்டின் மீது வீசிய அணுகுண்டுகள் ஏற்படுத்திய பேரழிவுகள் உலகை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டன. அணுசக்தியின் கொடிய முகம் அப்போது வெளிப்பட்டது. இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானியர்கள் புரிந்த அட்டூழியங்க்ள் மிகக் கொடுமையானவை. அமெரிக்கா ஜப்பான் மீது அணுகுண்டை வீசிய பின்னர்தான் அவர்கள் அடங்கிப் போயினர். ஜப்பான் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகமும் போரொன்று வேண்டாம் என்று முடி



வெடுக்க ஜப்பானின் மீது வீசப்பட்ட அணுகுண்டுகள் முக்கிய காரணமாக அமைந்தன. எனினும் அணுகுண்டுச் சோதனைகள் தொடர்ந்தும் இடம்பெறத்தான் செய்தன. ஆரம்பத்தில் வல்லரசுகள் இதில் ஈடுபட்டன. தமது படைபலத்தை வெளிக்காட்டும் வகையில் அணுவாயுதங்களையும் இணைத்துக் கொண்டன. பின்னர் வேறு நாடுகளிலும் அணுப் பரிசோதனைகள் இடம்பெற்றன. இந்தியா அணுப்பரிசோதனை நடத்தியதைக் கண்ட பாகிஸ்தான் நாடும் ஏட்டிக்குப் போட்டியாக தானும் அவ்விதமாக அணுப் பரிசோதனையை மேற்கொண்டது. பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண்ணாகப் பாகிஸ்தான் விளங்குவதற்கு அங்கு இடம்பெற்ற அணுப் பரிசோதனைகள் முக்கிய காரணம். பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் அணுவாயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளுக்குக் கிடைத்து விட்டால் என்ன ஆகும் என்ற அச்சமும் தற்போதுள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் ஒன்று மூளுமானால் இறுதியில் அதுவொரு அணுவாயுதப் போராகவே முடிந்து விடுமென்ற கவலையும் கூடவே எழுந்தது. இந்த நிலையில் அணுசக்தி இரகசியங்கள் பாகிஸ்தானில் இருந்து ஈரான் மற்றும் வடகொரியாவுக்குக் கடத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னரே அந்த இரண்டு நாடுகளும் அணுசக்திப் பரிசோதனையில் ஈடுபட்டதாகவும் தெரிய வருகின்றது. இதனால்தான் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு எதிராகத் தீராப் பகை கொண்டுள்ளது.

**ட்ரம்ப் – கிம் பேச்சு**

அமெரிக்க அரச தலைவரும் வடகொரிய அரச தலைவரும் இணைந்து நடத்திய பேச்சின் பிர்காரம் வடகொரியா சகல அணு சோதனைகளையும் நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்தது. இது அமெரிக்க அரச தலைவரான டொனால்ட் ட்ரம்புக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. இதைப்போன்று பரம எதிரிகளாகக் காணப்படுகின்ற இந்தியாகவும், பாகிஸ்தானும் உடனடியாகப் பேச்சு நடத்தி சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். இந்த இரண்டு நாடுகளும் அணுவாயுதங்களைக் கொண்டிருப்பதால் போர் இடம்பெறாத வகையில் இந்த இரண்டு நிலைகளும் தரப்புக்களும் சமாதான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கான முயற்சிகளில் இரு நாட்டுத் தலைவர்களும் உடனடியாக ஈடுபட வேண்டும்.

மறுபுறம் ட்ரம்ப் - கிம் இடையிலான பேச்சுத் தோல்வியில் முடிவடையப்போகிறதா என்ற சந்தேகமும், அச்சமும்கூட மனதில் இருக்கத்தான் செய்கிறது. ஏனெனில் அமெரிக்காவுக்கு தான் கொடுத்த வாக்குறுதிக்கு முரணான வகையில் வடகொரியா அணுவாயுதச் சோதனையில் மறைமுகமாக ஈடுபட்டு வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், வடகொரியா மறைமுகமாக அணுவாயுத நகர்வுகளில் ஈடுபட்டுவரும் ஒளிப்படங்கள் தம்மிடம் உள்ளன என்றும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. வடகொரியா அவ்வாறு முதுகில் குத்தினால் கொரியத் தீபகற்பத்தில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா போர்ப் பயிற்சியை மேற்கொள்ளும். இது இரண்டு நாடுகளும் மீண்டும் முரண்டுபிடிக்க வித்திட்டுவிடும்.

> அமெரிக்க அரச தலைவரும் வட கொரிய அரச தலைவரும் இணைந்து நடத்திய பேச்சின் பிரகாரம் வடகொரியா சகல அணு சோதனைகளையும் நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்தது. இது அமெரிக்க அரச தலைவரான டொனால்ட் ட்ரம்புக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது.

**வல்லரசு நாடுகளிடத்தில் ஆபத்தான அணு வாயுதம்**

இதைவிட வல்லரசு நாடுகளிடம் குவித்து வைக்கப்பட்டுள்ள அணுவாயுதங்களும் ஒழிக்கப்படும் வரையில், உலக அமைதிக்கு எவ்வித உத்தரவாதமும் கிடைக்காது. அதிலும் குறிப்பாக ரஷ்ய உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட விவகாரம், சிரிய உள்நாட்டுப் போர் விவகாரம், மத்திய கிழக்கு விவகாரம், இணையத் தாக்குதல்கள் விவகாரம் என்று ஏகப்பட்ட விடயங்களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் கருத்து மோதல்கள் நிலவுகின்றன. இரண்டு நாடுகளிடத்தில் தற்போது அணுவாயுதங்களும் உள்ளன. எனவே அமெரிக்கா - ரஷ்யா இடையே மீண்டும் மோதல் ஏற்படுமானால் அது பேரழிவாகத்தான் இருக்க முடியும். ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் பின்லாந்தில் விரைவில் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு முழுமையான வெற்றிபெற்று உலக அமைதிக்கு வழிவமைக்க வேண்டும் என்பதுதான் உலக மக்களினதும் தொண்டு நிறுவனங்களினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் எதிர்பார்ப்பு.

ஆகவே அணுவாயுதங்களுக்கு இந்த



உலகிலிருந்து நிரந்தரமாகவே விடை கொடுத்து அனுப்பி வைக்கும் வரையில் உலகில் நிரந்தரமான அமைதியை எதிர்பார்க்க முடியாது. அதிலும் பாதுகாப்பில்லாத சிறிய நாடுகளிடம் அணுவாயுதங்கள் இருப்பதை எந்த வரையிலும் அனுமதிக்க முடியாது. உலகத் தலைவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து அணுவாயுதங்களை முற்றாகவே ஒழித்து விடுவதற்கான செயற்திட்டங்களை உருவாக்கும் வரையில் உலகம் அமைதியாக இருந்து விட முடியாது.

நாளை
**04.07.2018**
புதன்கிழமை
ஆனி 20

திதி: ஷஷ்டி மு.இ. 08.33 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ. 02.28 வரை
சுபநேரம்: 04.27 – 05.57 வரை
ராகுகாலம்: 11.57 – 01.27 வரை



## வெறும் கற்பனைகள்



பேய்கள் பிசாசுகள் என்பதெல்லாம் வெறும் கற்பனைகளே. அவை திரிபுக் காட்சிகள் அல்லது பொய்த் தோற்றங்கள் எனப்படுகின்றன. இல்லாத ஒரு பொருள் கண்ணுக்கும் புலனுக்கும் இருப்பதுபோல காட்சி தருவது திரிபுக் காட்சியாகும். உதாரணம்- கானல் நீரில் உண்மையில் பொருள் எதுவும் இருப்பதில்லை. மனநிலை பாதிக்கப்படும்போதும், போதைப்பொருள்களை உண்டபோதும் இத்தகைய பொய்த்தோற்றங்கள் தோன்றும். "மருண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற ஒரு பழமொழிகூட உண்டு. பேய்கள் இல்லை ஆனால் பண்டைக் காலம் முதல் நவீனகாலமான இன்றுவரை பேய்க்கதைகள் நிறைய கூறப்பட்டு வருகின்றன. இன்றைய சினிமாக்களிலும் பேய்கள் தாராளமாக உலாவருகின்றன. அதிலும் அவற்றில் ஆண் பிசாசுகளை விட பெண் பேய்களுக்கும் சிறுமிப் பேய்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இல்லாத பேய்களுக்கு இன்று அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

## தேசிய விழாக்கள் நிறைந்த நாடு

தென்கிழக்காசியாவின் ஒரு நாடு தாய்லாந்து. தேசிய கலாசாரப் பற்றுமிக்க நாடு. ஒருமாதத்தில் பல விழாக்களையும் வைபவங்களையும் நடத்தி மகிழும் நாடு. சித்திரைமாதத்தில் புதுவருடம் பிறக்கும். இதனை அவர்கள் சந்திர வருசம் எனக் கொண்டாடுவர். அன்றைய தினம் மக்கள் எல்லோரும் ஆளுக்கு ஆள் தண்ணீர் தெளித்து மகிழ்வார்கள். வட இந்தியாவில் "ஹோலி" பண்டிகைபோல் தாய்லாந்தின் தண்ணீர் தெளிப்பு இருக்கும். வைகாசி மாதத்தில் அங்குள்ள சனாம் வாயுல் என்ற திருத்தலத்தில் ஏர்பூட்டுவிழா நிகழும். இந்த விழாவுக்கு நாட்டின் அரசர் வருகைதந்து ஏர்பிடித்து நிலம் உழுவார். நாட்டின் பட்டிதொட்டி எல்லாம் விழாக்கோலம் பூண்டு விளங்கும். இதேமாத இறுதியில் மழையை வேண்டி ஒருவிழா நடைபெறும். அப்போது வானில் காகிதப் பட்டங்களும் றொக்கட்டுக்களும் செறிந்து பறக்கும். கார்த்திகை மாதத்தில் நீர்நிலைகள் யாவும் தீபங்களால் ஒளிரும். நீர்நிலைகளில் வாழையிலைகள் மிதக்கும். அவற்றில் மெழுகுவர்த்தி, நாணயம், சாம்பிராணி, ஊதுபத்திகள், மலர்கள் என்பன வைத்து தீப அலங்காரம் செய்யப்படும். எருமை ஓட்டப்பந்தயங்கள் நீர் வள்ள ஓட்டப்பந்தயங்கள் இப்படி பல பந்தயங்களால் நீர் நிலைகள் விழாக்கோலம் காணும்.



# மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காதே



அவர் ஒரு துறவி. அவரிடம் மாற்றுத் துணி கூட இல்லை. அவர் அணிந்திருந்த உடை கிழிசலாக இருந்தாலும் அது நேர்த்தியாக சரி செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் அவரைப் பார்க்கவும் அவரிடம் பேசவும் ஆசி பெறவும் பொது மக்கள் அலை அலையாகத் திரண்டு வந்தனர். வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அந்தத் துறவியின் கால்களைத் தங்கள் கைகளினால் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

அந்தத் துறவியின் புகழ் எங்கும் பரவியது. இந்தத் துறவி பற்றி அந்த நாட்டு தளபதி கேள்விப்பட்டான். அவனுக்கு அந்தத் துறவியை நினைக்கப் பொறாமையும் எரிச்சலுமாக இருந்தது.

நானே அந்த நாட்டில் முக்கியமானவன். நாட்டை எதிரிகளிடம் இருந்து காத்து வருகிறேன். எனக்கல்லவா எல்லா மக்களும் தலை வணங்க வேண்டும். என்னை அல்லவா விழுந்து கும்பிட வேண்டும். அதைவிட்டு விட்டு கேவலம் ஒரு துறவியைப் போய்.... என்று தன் மனதுக்குள் பொறாமை கொண்டான். அன்றைய தினமே தளபதி துறவியைக் காணச் சென்றான். தளபதி வருகிறார் என்றதும் துறவியின் குடிசை முன்பு கூடி நின்ற மக்கள் அனைவரும் ஒதுங்கி தளபதிக்கு வழிவிட்டனர். இப்போது குடிசையில் துறவியும் தளபதியும் மட்டுமே இருந்தனர்.

அப்போது தளபதி துறவியை ஏளனமாக ஏற இங்கப் பார்த்தான். குடிசை இருந்த நிலைமையையும் கண்களால் அளவெடுத்தான்.

பின்னர் துறவியிடம் பேசத் தொடங்கினான். நான் இந்த நாட்டின் தளபதி. விதம் விதமான ஆயுதப் பயிற்சிகள் பெற்ற போர் வீரர்கள் என்னிடம் உள்ளனர். நான் அரண் மனைக்குள் நுழைந்தால் தெருவில் நடந்தால் எல்லோரும் என்னைத் தெய்வம் போலக் கருதி கை எடுத்து வணங்குவார்கள். இப்படியிருந்த நான் இங்கே வந்து பார்த்தபொழுது பிச்சைக்காரன் போல் தோற்றத்தையுடைய அடுத்த வேளை சாப்பாட்டுக்குக் கூட மற்றவர்கள் தந்தால்தான்.... என்ற நிலையிலுள்ள உன்னை ஒரு பொருட்டாக மதித்து மரியாதை கொடுக்கிறார்கள். கால்களில் விழுந்து வணங்கிச் செல்கிறார்கள். அது தான் எனக்கு விந்தையாக இருக்கிறது. ஒன்றும் புரியவில்லை. இதற்கு நீயே பதில் சொல்" என்றான்.

தளபதியின் பேச்சை ரசித்துக் கேட்ட அந்தத் துறவி அவனை தன் குடிசையின் பின்புறமுள்ள பூந்தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். அன்று பௌர்ணமி தினமாதலால் முழு நிலவு பாலொளியைப் பரப்பி நின்றது. வண்ண வண்ண மலர்கள் மணம் வீசிக்கொண்டிருந்தன.

இப்போது தளபதியை நோக்கிய துறவி நிலவைச் சுட்டிக் காட்டி அது என்ன? என்று கேட்டார். "அதுவா அது நிலவு"என்றான் தளபதி. பின்னர் துறவி தன்னருகே பூத்திருந்த ஒரு ரோஜா மலரைக் காட்டி "இது என்ன"என்றார். இப்போது தளபதி எரிச்சலடைந்தான். ஆனால் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் "இது ரோஜாப்பூ"என்றான்.


உடனே துறவி "இந்த ரோஜாப்பூ என்றாவது ஒருநாள் நிலவைப் பார்த்து "ஆஹா இந்த நிலவு எத்தனை அழகு அந்த நிலலைப் போல நான் அவ்வளவு அழகு இல்லையே! என்று ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா? இல்லை அல்லவா? அது போல் அந்த நிலவும் கீழே உள்ள இந்த ரோஜா மலரைப் பார்த்து "நான் இந்த மலரைப் போன்று நிறத்தில் இல்லையே! மிருதுவாக இல்லையே"என்று வருத்தப்பட்டதுண்டா? இல்லையே ரோஜாப்பூவின் அழகு ஒரு விதமானது. நிலவின் அழகு வேறு விதமானது" ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. துறவி சொன்னவற்றக் கேட்டவுடன் தளபதியின் கண்கள் கலங்கின. "தங்களை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கு வருந்துகிறேன் துறவியே!என்னை மன்னிக்க வேண்டும் என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்" அங்கிருந்து புறப்பட்டான்.

## மெண்டல் (1822-1884) பிறப்புரிமையில்


மெண்டல் செக்கோஸ்லோ வேக்கியா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரை பிறப்புரிமையின் தந்தை என அழைப்பர். வெவ்வேறுபட்ட குணங்களையுடைய தூய அவரைச் செடிகளை இனவிருத்தி செய்து பாதுகாப்பது பற்றிய பரிசோதனைகளை மெண்டல் மேற்கொண்டார்.

இவரின் பரிசோதனை –முடிவு விவரங்கள் பின்வருமாறு:

1. உயரமான இனச் செடிகளும் கட்டையான இனச்செடிகளும் இணையப் பெற்ற நிலையில் இனப் பெருக்கம் செய்யப்பட்டது. இவற்றிலிருந்து தோன்றிய முதலாவது சந்ததி உயரமான இனமாகக் காணப்பட்டது.
2. மேற்படி பெறப்பட்ட செடிகளின் 2ஆவது சந்ததி 3:1என்ற விகிதாசாரத்தில் முறையே உயரமான இனமாகவும் கட்டையான இனமாகவும் காணப்பட்டது.
3. கட்டை இனத்திலிருந்து பெறப்பட்ட 3ஆவது சந்ததி முழுவதும் கட்டை இனமாகவே காணப்பட்டது. அதேவேளை உயர் இனத்திலிருந்து பெறப்பட்ட 3ஆவது சந்ததியின் மூன்றிலொரு பகுதி உயர் இனமாகக் காணப்பட்டது. ஆனால் மீதியோ மீளவும் உயர்ந்த இனம். கட்டை இனம் 3:1 என்ற விகிதாசாரத்தில் காணப்பட்டது.
4. இவரது பரிசோதனையின் படி இயல்புகள் சில காரணிகள் மூலம் பரம்பரையாகக் கொண்டு செல்லப்பட்டு பேணப்படுகின்றது என்பது புலனாகின்றது. ஒவ்வொரு இயல்பும் ஒருசோடிக் காரணியைக் கொண்டுள்ளது. ஒரு காரணி தாய் வழியாகவும மற்றக்காரணி தந்தை வழியாகவும் பெறப்படுகின்றது.
5. காரணி என்ற பதம் பரம்பரை அலகு எனவும் அழைக்கப்படுகிறது. இந்தப் பரம்பரை அலகுகளின் தனித்தொகுதியே டி.என்.ஏ. ஆகும்.
6. அமெரிக்க விஞ்ஞானியான வொட்சன் என்பவரும் பிரித்தானிய இரசாயனவியலாளரான சிறிக் என்பவரும் நிறமூர்த்தங்களில் பிணைக்கப்பட்டுள்ள பரம்பரையாகச் செலுத்தப்படும் சிறப்பியல்புகளைக்கொண்டு டி.என்.ஏ. அமைப்பினை மேலும் விளங்கியுள்ளார்கள்.
7. பரிணாமக் காரணிகள் பரம்பரைத்துவ விதிகள் பரம்பரை அலகு சிறப்பியல்பு பற்றிய இந்த ஆய்வே பிறப்புரிமையியல் ஆகும். இந்த ஆய்வின்படி தாவரங்களினதும் விலங்குகளினதும் இனவிருத்தி விஞ்ஞான ரீதியாகத் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு மெண்டலின் பிறப்புரிமையியல் விஞ்ஞான வளர்ச்சியில் சிறப்பான இடத்தை வகிக்கின்றது.



## புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்



## வடக்கு...

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் பிரச்சினைகள் இரு வாரங்களுக்குள் கள உத்தியோகத்தர்கள் மூலம் கண்டறியப்படும் என்று தெரிவித்தார் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.ரி.கொடிகார.

'அரச தலைவரின் மக்கள் சேவை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எட்டாவது நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் அரச அதிகாரிகளுக்கு இடையே யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவைகள் உள்ளன. அவற்றை நிறைவு செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இதற்காக அனைத்து அரச அதிகாரிகளின் சேவைகளும் பெறப்படும். இந்தச் செயற்றிட்டம் வெற்றிபெற மாகாண, பிரதேச, கிராம அடிப்படையில் அனைத்து அதிகாரிகளது ஒத்துழைப்பும் தேவை.

கள நிலை உத்தியோகத்தர்கள் மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சினைகளை இருவாரங்களுக்குள் அடையாளம் காணும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன்மூலம் தீர்க்கப்படாத பிரச்சினைகளை கொழும்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தீர்க்க முடியும். இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் அரச தலைவர் மற்றும் அமைச்சுகளுக்கு இடையே 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. என்றார். (ற-7)

## வேலை அற்ற...

யிலேயே அவர் உயிரை மாய்த்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் தென்மராட்சி, கச்சாய் துறைமுகச்சாலையில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சத்தியசீலன் ( வயது -29 ) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இறப்புத் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நேற்று மாலை நீதிவானுக்கு அறிக்கையிட்டனர். நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் மூலம் சாவுவிசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப் பணித்தார்.

உயிரிழந்த இளைஞன் கைப்பட எழுதினார் என்று தெரிவிக்கப்பட்ட கடிதம் ஒன்று மீட்கப்பட்டது. அதில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்தும் எனக்கு வேலை கிடைக்கவில்லை. எனது குடும்பத்துக்கு நான் ஒன்றுமே செய்யவில்லை. படித்தும் வேலை கிடைக்க வில்லை என்று உள்ளது என்று அதில் உள்ளது என விசரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

(ற-21,9,159)

## ஓட்டோவில்...

யாழ்ப்பாணம், ஜூலை 3

முச்சக்கர வண்டியில் இருந்த சாரதி திடீரெனச் சரிந்து வீழ்ந்து உயிரிழந்தார். மாரடைப்பே உயிரிழப்புக் காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று மந்திகையில் நடந்துள்ளது. குடத்தனை அம்பனைச் சேர்ந்த முத்து செல்லத்துரை (வயது-71 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மந்திகைப் பகுதியில் உள்ள அரசினர் ஆதார மருத்துவமனை வீதியில் நாச்சந்திப் பகுதியில் முச்சக்கர வண்டி தரித்து நின்றபோது அவர் திடீரென அதிலிருந்து சரிந்து வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். மாரடைப்பு ஏற்பட்டே அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-21,173)

## பயங்கரவாதத்...

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப்பெற்று, பன்னாட்டுச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்படும் என்று அரசு வாக்குறுதியளித்திருந்தது.

இதற்கு அமைவாகப் பயங்கரவாதத் தடைச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மிக மோசமானது என்று பல தரப்புக்களும் குற்றம் சுமத்தின. அதையடுத்து சட்டவரைவில் மாற்றம் செய்வதற்கு ஓராண்டுக்கு முன்னர் அரசு இணங்கியது.

திருத்தியமைக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டவரைவு அமைச்சரவையின் அனுமதிக்காக இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ற-5)

## பிணையில்...

பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சுகாதாரத் துறையில் பணிபுரியும் ஒருவரே மல்லாகம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பதவியுயர்வுக்கான பரீட்சைக்காக கொழும்புக்குச் செல்லவிருந்ததால் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் எடுக்கப்பட்டது. அவர் மன்றில் முன்னிலையானார். அவர் பிணை நிபந்தனைகளை மீறவில்லை என்றபோதும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

(ற-4)

Galaxy Star
வெற்றி வாரம் 258 / திகதி 01.07.2018
வெற்றி இலக்கங்கள்
03 18 22 41 56
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,173,496/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3051 திகதி: 2018.07.02 திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து · போனஸ் இலக்கம் · அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
36 43 55 59 E · 57 · 30,818,065/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 299
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,092,530/-
வெற்றி இலக்கங்கள்
19 35 37 67 T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா குமாரசாமி



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா குமாரசாமி நேற்று (02.07.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்) யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவயோகநாதன் (ஜேர்மனி), தயாளவதி (ஜேர்மனி). சௌந்தரநாயகி (கனடா), சாந்தநாயகி (ஓய்வுநிலை Senior Staff Assistant - Finance Branch, University of Jaffna), பத்மாசனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றோஸ்மலர் (ஜேர்மனி), மயில்வாகனம், கணேசமூர்த்தி (கனடா), குலசிங்கம் (ஓய்வுநிலை செயலாளர் - மன்னார் நகரசபை), தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் மாணிக்கம், பாக்கியம், மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமார், பிரியதர்சன், றஞ்சன், தர்சனா, தர்சிகா, துஷித்தா, சர்மிலா, அஞ்சலா, லக்சனா, றாஜீவன் (Assistant Engineer- DMS), றஜித்தா (விரிவுரையாளர் - தொழில்நுட்ப பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜெயசுந்தர் (Doctor - Jaffna Teaching Hospital), நிரோஜன், கபிர்ணா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நீலன், பிரியா, இமிழ், இசான், ஓவியன், கிருஷ்னிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.** — **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெகதீஸ்வரி முருகையா



பிறப்பு 08.03.1967 — இறப்பு 01.07.2018

யாழ். கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கிளானை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி முருகையா கடந்த (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தர்மபூபதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் முருகையா (தங்கவேலு) வின் பாசமிகு மனைவியும் லோகனா, சர்மிளா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சதீஸ்குமாரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்), விஜயகுமார் (சின்னண்ணை), விஜயலட்சுமி (வண்ணம்), காலஞ்சென்ற மகாராஜா (அப்பன்), சந்திரகலா, பிரபாகரன் (குஞ்சன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் தேவிகா, சங்கீதா, தவபாலசிங்கம், குணபால சிங்கம், நிஷா ஆகியோரின் அன்புமைத்துனியும் தசாங்கன், கிருத்திகா, பிரவீனா, பிரசன்னா, பிருந்தா, பிரியன், பிரித்தீஸ், பிரீத்தி ஆகியோரின் மாமியும் பிரவீன், பிரதீபன், ஜீவிதன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.** — **தகவல்: குடும்பத்தினர். 077 454 2223**

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1940 |  | 2018 |
| 09 | | 07 |
| 08 | | 02 |

### ஐயாத்துரை குமாரசாமி

சுதுமலை மேற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குமாரசாமி நேற்று (02.07.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவபாக்கியம் (முன்னாள் ஆசிரியை - யா/ பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்) தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - தமிழ் வலிகாமம் கல்வி வலயம்) அன்புக்கணவரும் மதுஷாயினி (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)யின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரரும் அருளானந்தம், சத்தியேஸ்வரி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புமைத்துனரும் பரஞ்சோதிராசா, கலைவாணி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2018) புதன்கிழமை மு.ப.9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**T.C, லேன் சுதுமலை மேற்கு, மானிப்பாய். 021 225 5361** — **தகவல் : குடும்பத்தினர்.**

# எக்ஸ் ஸ்பொன்சா

## அழகியல் கொண்ட உயிர்மம்



புதுமைப் பித்தன்

வீட்டில் வளர்க்கப்படுகின்ற வாத்துகளின் முன்னோடியாக 'மலாட்' இன வாத்துகள் குறிப்பிடப்படுகின்றன. இவை அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான வீடுகளிலும், பழக்கடைகளிலும் மே மாதத்தில் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுகள் பொரிப்பதாகச் சொல்லப்படுகிறது. 'மலாட்' இன வாத்துகள் அளவில் பெரியவை. ஆண் வாத்துகள் கழுத்தைச் சுற்றி வெள்ளை நிற வளையம் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும். தலைப் பகுதி தனித்துவமான மரகதப் பச்சை நிறத்தில் காணப்படும்.

### காட்டு வாத்து

'எக்ஸ் ஸ்பொன்சா' எனப்படும் காட்டு வாத்துகள் அமெரிக்காவில் உள்ள பறவைகளுள் மிகவும் அழகானவையாகக் கருதப்படுகின்றன. 'ஸ்பொன்சா' என்றால் 'பிறைட்' என்று பொருள்படுகிறது. காட்டு வாத்துகள் தலையிலிருந்து வால், சிறகுகள் வரையும் அண்ணளவாக 18 அங்குல நீளமுடையவை. இவைகள் தரையிலிருந்து 20 தொடக்கம் 30 அடி மேலாக மரக்கிளைகளில் கூடு கட்டி வாழ்கின்றன. இவை மரப் பொந்துகளில் முட்டையிட்டு, அடைகாத்து குஞ்சுகள் பொரிப்பது வியப்பான விடயமாகச் சொல்லப்படுகிறது.

### உறைவிடம்

காட்டு வாத்துகள் ஏனைய வகை வாத்துகளைப் போலவே வாழ்நாளின் பெரும்பகுதியை நீருள்ள ஆறுகளிலும், குளங்களிலும் கழிக்கின்றன. தங்குவதற்கும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்கும் உயரமான மரங்களையே தேர்ந்தெடுக்கின்றன. காட்டு வாத்துகள் அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளிலும், கனடாவின் தெற்குப் பகுதியிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரையான மூன்று மாத காலங்கள் இவற்றின் இனப்பெருக்க காலமெனக் கூறப்படுகிறது. இவை வழக்கமாக வருடம் ஒருமுறையே இனப்பெருக்கம் செய்கின்றன. அபூர்வமாக வருடத்துக்கு இரண்டுமுறை முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதுமுண்டு.

### இயல்பு

பெண் வாத்துகள் எங்கு பிறந்து வளர்ந்தனவோ அதே இடத்திலேயே கூடுகட்டி வாழ விரும்புகின்றன. தங்களுக்குப் பிரியமான அழகிய பலவண்ண ஆண் துணையை தாங்கள் வசிக்கும் இடத்துக்கே கூட்டி வருகின்றன.

பெண் வாத்துகள் உயரமான மரக்கிளைகள், மரப்பொந்துகள் மற்றும் மனிதர்களால் செய்து மரக்கிளைகளில் வைக்கப்பட்ட



காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கும் அமைப்புடன் கூடிய பெட்டிகளிலும் கூடுகளை அமைத்துக்கொண்டு 10 தொடக்கம் 12 முட்டைகளை இடுகின்றன. அதன் பின்பு 28 தொடக்கம் 30 நாள்கள் அடைகாத்துக் குஞ்சுகள் பொரிக்கின்றன. பெண் வாத்துகள் அடைகாக்கும் பொழுதும், உணவுக்காக தினமும் இரண்டு முறை இறங்கி வரும்போதும் ஆண் துணை வாத்துகள் இவற்றுடன் சென்று கவனமாகப் பார்த்துக் கொள்கின்றன. பாதுகாப்பினை வழங்குகின்றன.

### கூட்டின் அமைவு

இணை வாத்துகள் பொரித்த குஞ்சுகளை 56 தொடக்கம் 70 நாள்கள் வரை கூட்டிலேயே பாதுகாத்து வரும். காட்டு வாத்துகள் மரக் கிளைகளில் கூடுகட்டி, குஞ்சு பொரித்து அவைகளைப் பராமரிப்பதைப் பார்ப்பதென்பது அற்புதமான அனுபவமாக அமைந்திருக்கும். அதைவிடவும் அண்ணளவாக 60 நாள்களுக்கும் மேலாக மரக் கூட்டிலேயே வளர்க்கப்பட்ட குஞ்சுகள் இரண்டும், மூன்றுமாக சிறகசைத்து அதன் உயரமான கூட்டிலிருந்து கீச்சிட்டு சப்தமெழுப்பி தரையிலோ அல்லது கீழேயுள்ள நீர்ப்பரப்பிலோ படபடவென்று தாவிப் பறந்து குதிப்பதைக் காண்பது என்பது கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

### உணவும் பாதுகாப்பும்

இளம் குஞ்சுகள் தாய்ப் பறவையுடன் சேர்ந்து தரையிலும், நீரிலும் உள்ள சிறு பூச்சிகளையும், புழுக்களையும் உணவாக்கிக் கொள்ளும். ஆமைகள், முதலைகள், பாம்புகள், பெரும் தவ்ளைகள் மற்றும் கழுகு போன்ற பறவைகளிடம் 50 வீதமான குஞ்சுகள் இரையாகிப் போகும் வாய்ப்புகள் உண்டு. குஞ்சுகள் தானாகப் பறந்து இரைகளிடமிருந்து தம்மைத் தற்கத்துக் கொண்டு தப்பிக்கும் வரையான 8 தொடக்கம் 10 வரையான வாரங்களுக்கு தாய்ப் பறவைகள் பாதுகாவலர்களாகப் பணி செய்கின்றன. குஞ்சுகள் வளர்ந்து தாயிடமிருந்து பிரிந்து சென்றதும் அவைகள் அடுத்த பருவ காலத்துக்காகக் காத்திருக்கின்றன. தங்கள் வம்ச விருத்தி யைத் தொடர்கின்றன.


# இதயமும் நரம்புகளும்


## இயங்கு நிலை தரும் உறவுநாடிகள்

நாம் அச்சுறுத்தப்படும் போது வெண்மைச் சாயலுடையவராய் மாறுவதற்கான காரணங்கள் நோக்குதற்குரியவை. அச்சம் கொள்ளும் போது கன்னங்களிலுள்ள குருதி மிக வேகமாகப் பணி செய்வதற்குப் பணிக்கப்படுகிறது. அதே சமயத்தில் இதயம் வேகமாகத் துடிப்பதுடன் சுவாசமும் விரைவாக இடம்பெறுகிறது.

எங்களுடைய இதயம் ஒரு நிமிடத்துக்கு எழுபது அல்லது எண்பது தடவைகள் துடிப்பதுடன் உடலின் பாகங்களுக்குக் குருதியைப் பாய்ச்சுகிறது. உடல் இயக்கமுறுவதற்கு இன்றியமையாத தேவையான உணவிலுள்ள ஊட்டச் சத்தினையும், சுவாசிக்கும் காற்றிலுள்ள 'உயிர்க் காற்றையும்' குருதி சுமந்து செல்கிறது.

நடக்கும்போது அல்லது அமர்ந்திருக்கும்போது எங்களுடைய தசைகள் வேலை செய்வதை விடவும் நாம் தீவிரமான உடற்பயிற்சியினை மேற்கொள்ளும் போது அவை




மிக இறுக்கமாகவும், விரைவாகவும் வேலை செய்ய வேண்டிய தேவைகள் ஏற்படுகின்றன. இதற்கு அதிகரித்த ஊட்டச் சத்தும் உயிர்க்காற்றும் தேவைப்படுகின்றது. இதயத்திலிருந்து குருதியை வெளித்தள்ளும் செயல் மூச்சியக்கம், உணவுச் சமிபாடு போன்ற உடலினுள் இடம் பெறும் நிகழ் வினைகளை நெறிப்படுத்துகிறது. இயங்கு நரம்பு மண்டல மையப் பகுதிக்குத் தசை நாண்கள் செய்திகளைத் தாங்கிச் செல்கின்றன. இந்த நரம்பு மண்டல மையப் பகுதி 'கைப்போதலமஸ்' என அழைக்கப்படுகிறது.

இயங்கு நரம்பு மண்டல் மையத்திலிருந்து தூண்டு விசைகள் முதுகுத் தண்டுவடம் வரை பயணம் செய்கின்றன. இதன்போது ஏனைய நரம்பு உயிர்மங்களையும், உடனதிர்வுத் தசை நாண்களையும் அத்தூண்டு விசைகள் ஊக்குவிக்கின்றன. அந்த உடனதிர்வுத் தசை நாண்கள் நரம்பு மண்டல மையத்தில் அல்லது சிறுநீரகங்களுக்குச் சற்று மேற்பகுதியிலுள்ள குண்டிக்காய்ச் சுரப்பிகளின் தண்டெலும்பு உட்சோற்றில் முடிவடைகின்றன.

இந்தக் குண்டிக்காய்ச் சுரப்பிகள் ஓமோன் இயக்குநீரை குருதி ஓட்டத்தில் சேர்ப்பிக்கின்றன. அவ்வாறு இயக்குநீரைத் தருவிப்பதால் இதயம் வேகமாகவும், திறனுடனும் துடிக்கிறது. நுரையீரலிலுள்ள காற்றுக் குழாய் விரிவடைகிறது. தசைகளுக்கு குருதி வழங்கும் குருதிக்குழாய்கள் அகலப்படுகின்றன. குருதியில் உள்ள சக்தி தரும் குளுக்கோசின் செறிவு மிகைப்படுத்தப்படுகின்றது.

## காணிகளின்...

"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

உள்நாட்டு அலுவல்கள் அசைம்சின் நிகழ்வில் நான் கலந்துகொண்டமை ஏன் என்ற ஐயம் ஏற்பட்டிருக்காலம்.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அரசால் விடுவிக்கப்பட்ட காணிகளின் உண்மைத் தகவல்களை அறிய முடியவில்லை. அவற்றை நேரடியாகச் சென்று பார்க்க விரும்பினேன். உள்நாட்டு விவகார அமைச்சர் யாழ்ப்பாணம் செல்லவுள்ளேன் என்று கூறினார். அதிகாரிகளும் வருவார்கள் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்வார்கள் என்றார். அதனால் நான் இங்கு வந்தேன்.

நாம் மக்களுக்குப் பாகுபாடு இன்றிப் பணியாற்ற வேண்டும். அனைவருக்கும் அபிவிருத்தி சென்றடைய வேண்டும். என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக உள்நாட்டு விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன கலந்து கொண்டார். (ற-8)

## சில...

நிமிடங்கள் மட்டுமே கலந்துரையாடினர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றி அமைச்சர் திலக் மாரப்பன யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் உண்மைத் தகவல்கள் கிடைக்கவில்லை. அவற்றை அறிந்துகொள்ளவே வந்துள்ளேன் என்று கூறியிருந்தார். கிளிநொச்சிக்கு நேற்று பிற்பகல் சென்ற அவர் சில நிமிடங்கள் காணி தொடர்பில் கலந்துரையாடித் தகவல்களை அறிந்து கொண்டார்.

அமைச்சர்கள் வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் காணிகள் தொடர்பாகச் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. பிற்பகல் 2 மணியளவில் அமைச்சர்களும், அவர்களின் குழுவினரும் மாவட்ட செயலகத்துக்கு வந்தனர். அங்கு சுமார் 20 நிமிடங்களைச் செலவு செய்தனர். அதில் சில நிமிடங்களே காணிகள் தொடர்பில் பேசப்பட்டது.

பாதுகாப்பு படைகளிடம் எவ்வளவு காணிகள் காணப்படுகின்றன, இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு இதுவரை மக்களிடம் கையளிக்கப்படாத காணிகள் எவ்வளவு இருக்கின்றது போன்ற தகவல்களை அமைச்சர்கள் பெற்றுக்கொண்டனர். கிளிநொச்சியில் அவசரமாக விடப்படவேண்டிய காணிகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு, மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்களுடன் கலந்துரையாடல் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று கூறிப் புறப்பட்டனர்.

மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், திணைக்களத் மேலதிக மாவட்டச் செயலர் சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-21,6)

## போலி...

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

"அரச தலைவரின் மக்கள் சேவை" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது நிகழ்வு யாழ்ப்பாணமாவட்டத்தில்நேற்றுநடைபெற்றது. அதைத் தொடர்ந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் அரச அதிகாரிகளுக்கும் இடையே யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. 53 அமைச்சுக்கள் இணைந்து இது தொடர்பில் பேசவுள்ளோம். என்ன செய்யப்படுகின்றது, என்ன தேவை என்பவற்றைக் குறிப்பிடுவதற்கான படிவங்கள் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சிறிய பிரச்சினைகள் பிரதேச செயலக மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். எம்மால் வழங்கப்படும் சுற்றறிக்கைகள் மூன்று மொழிகளிலும் வழங்கப்படுகின்றது. அதிகாரிகள் அவற்றை முழுமையாக வாசித்து அறிய வேண்டும்.

எமது அமைச்சின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேசக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவற்றில் மக்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பிரதேச மட்டத்தில் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை மாவட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைப் பிரதேச மட்டத்திலும் கொண்டு செல்ல வேண்டாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிமுறையின் கீழ் நடைபெற வேண்டும்.

### காணிப் பிரச்சினை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30 ஆயிரம் காணிப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் அநேகமான முறைப்பாடுகள் போலி உறுதி மூலம் நடக்கும் மோசடிகள். வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளைப் போலி உறுதி மூலம் விற்பனை செய்கின்றனர். இவ்வாறு செய்பவர்கள் இனங்காணப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள். இது தொடர்பில் காணி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது என்று என்னிடம் பலர் தெரிவித்தனர். அதைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன் - என்றார். (ற-7)

## வடக்கு...

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் அண்மைக் காலமாக/சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுகள், கொள்ளைகள், வன்கொடுமைகள் எனச் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன.

சட்டம் ஒழுங்கு வழக்கில் நிலைநாட்டப்படவில்லை என்பதையே இது காட்டுகின்றது. சட்டம், ஒழுங்கு அமைச்சர், தலைமை அமைச்சர், மூத்த பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரே இவற்றுக்குப் பொறுப்பு.

வடக்கில் சட்டம் ஒழுங்கை முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் -என்றார்.(ற-8)

## இளைஞர்கள்...

பாணத்தில் தொடரும் வன்முறையை இல்லாதொழிப்பதற்கு சமூகத்தினர் முன்வரவேண்டும். குறிப்பாக இளைஞர்கள் முன்வரவேண்டும். அவசரமாக சமூக விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்படவேண்டும். இந்தப் பணியை கட்சிபேதமின்றி ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களும் முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினரும்,அந்தக்கட்சியின்பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

இங்கு இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களுக்கு பொலிஸார் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. அதில் நியாயம் இருக்கின்றது. ஆனால் இந்த வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களே.

இங்கு நடைபெறும் சமூகப் பிறழ்வு தொடர்பில் கரிசனை செலுத்தவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. சமூக விழிப்புக் குழுக்கள் அவசரமாக அமைக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அண்மையில் தான் நடைபெற்றது. வட்டார ரீதியில் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கட்டும். ஒவ்வொரு வட்டார உறுப்பினரும், தனது வட்டாரத்துக்கு உட்பட்ட கிராமங்களில் விழிப்புக் குழுக்களை அமைக்கவேண்டும். அதைப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஏதாவது அனுசரணை தேவை என்றால் அதை வழங்குவதற்கு நாங்கள் தயாரக இருக்கின்றோம்.

ஒரு வார காலத்தினுள் இந்தக் குழுக்களை ஒவ்வொரு வட்டார உறுப்பினரும் ஏற்படுத்த வேண்டும். அவர்களது கிராமத்தில் உள்ள இளையோர் ஒத்துழைக்கவேண்டும்.

வன்முறைக் கலாசாரத்தைப் புகழ்வதை தவிர்க்கவேண்டும். அரசியல்வாதிகளே அதனைப் புகழ்கின்றனர். வன்முறைக் கலாசாரத்தை புகழ்ந்து விட்டு இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றார்கள் என்று நாங்கள் குற்றம் சுமத்த முடியாது. வன்முறைக் கலாசாரத்தால் வன்செயல்களால் எதையும் சாதித்துவிட முடியாது - என்றார். (ற-5)

## இறுதிப்...

தங்க நகைகள் வழங்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் எதுவும் தெரியாது என்று கூட்டமைப்பு கூறியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அதில் தமிழீழ வைப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்ட தமிழ் மக்களின் நகைகள் முன்னைய அரசின் காலத்தில் கையளிக்கப்பட்டது. தற்போதைய ஆட்சியில் அந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. அந்த நகைகள் மீளக் கையளிக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாக மகிந்த ராஜபக்ச தங்க நகைகளில் சிலவற்றைக் கிளிநொச்சி வைத்து மக்களிடம் கையளித்திருந்தார். அது வரையில் அது இருக்கின்றதா? இல்லையா? என்பது கூடத் தெரியாமல் இருந்தது.

நகை கையளிக்கப்பட்ட காலத்தில் நான் அது தொடர்பில்பலகேள்விகளைஎழுப்பியிருந்தேன். அரைவாசிதான் மக்களுக்கு கொடுக்கப்பட்டது. மிகுதி நகை எங்கே? இந்த நகைகளை மகிந்த ராஜபக்ச இதுவரை காலமும் எங்கே மறைத்து வைத்திருந்தார்?. எவருக்கும் தெரியாமல் இந்த நகைகள் எங்கேயிருந்தன?. இந்த நகை அதுவரை காலமும் எதற்கு உபயோகிக்கப்பட்டது. வட்டிக்கு கொடுக்கப்பட்டதா? அவரது மனைவி அணிந்திருந்தாரா? என்று நான் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படவில்லை.

மிகுதி நகைகள் சம்பந்தமாக எந்தத் தகவலும் சொல்லப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெட்டகங்களில் எவ்வளவு நகை இருந்தது என்பதைப்பற்றி இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கணக்கு ஒன்றைத் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளிடம் மீட்க்கப்பட்ட நகை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட போது, அரசு ஒரு எண்ணிக்கையைக் குறிப்பிட்டது. அந்தக் காலத்தில் சிறையிலிருந்த பொன்சேகா, நீதிமன்றுக்கு வந்தபோது, நாடாளுமன்றத்தில் அரசு தெரிவித்த தகவல் பொய்யானது. அவர்கள் கூறியதைப் போன்று இரண்டுமடங்கு நகை மீட்கப்பட்டது என்று பொன்சேகா என்னிடம் கூறியிருந்தார். நாடாளுமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்.

நகைகள் தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாகக் கேட்டோம். தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று சொல்லப்பட்ட நகைகளில் பாதி அளவு அந்தவேளையிலேயே பலரால் சூறையாடப்பட்டு விட்டன என்று நான் அறிக்கின்றேன் - என்றார்.

### நகர அபிவிருத்தித் திட்டம்

யாழ்ப்பாண நகர மூலோபாய அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 7.9 மில்லியன் அமெரிக்க டொலர் கண்டி மாவட்டத்துக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், அந்த நிதி யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் கிடைக்கும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் 2 ஆண்டுகளாக தாமதமாகியுள்ளது. இந்த இடைவெளிக்கான காரணம் தெரியவில்லை என்றார்.

### மைத்திரியுடன் பேச்சு

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருந்தது. இதன் முன்னேற்றம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான அறிக்கை தயாரித்துள்ளோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளோம். மகாவலி அதிகார சபைக்குரிய அமைச்சு அரச தலைவர் வசம் இருப்பதால் அவருடன் முதலில் பேச்சு நடத்தப்படும் - என்றார். (ற-5)

## புலிகள்...

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

"உத்தியோகபூர்வப் பணி" அரச தலைவர் மக்கள் சேவைத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

யாழ்ப்பணத்து மக்கள் தள்ளாடிக் கொண்டிருக்கின்றனர். இப்படியான நிலைமையில் இங்கு வந்துள்ள இரு அமைச்சர்களுக்கும் மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பெண்கள் எவ்வளவு பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர் என்பதை ஆண்களால் அறிந்துகொள்ள முடியாது. கடந்த தேர்தலில் நாம் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்து மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவராக்கினோம். ஆனால் அவர் மக்கள் பணியை விட்டுவிட்டு கட்சியை வளர்க்கும் பணியைச் செய்து வருகின்றார்.

போருக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் எமது மண் நல்லொழுக்கத்துடன் திகழ்ந்தது. அதை நாம் உணர்வுபூர்வமாக அறிந்திருந்தோம். இப்போதைய சூழ்நிலை நாம் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

போருக்குப் பின்னர் வடக்கில் போதைப் பொருளைப் பரப்பியுள்ளனர். எமது மண்ணில் போதைப் பாவனை அதிகரித்துள்ளது.

வடக்கில் உள்ள பல இளைஞர்கள் பட்டப்படிப்பை முடித்துவிட்டு மேசன் தொழிலுக்கும், சந்தை வியாபாரத்துக்கும் செல்கின்றனர். தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் தமது பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கு வடக்கில் நியமனம் கொடுக்கின்றனர். இதனால் எமது இளையோர் பாதிப்படைகின்றனர்.

மறுவாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு என ஒதுக்கப்பட்ட உதவித் திட்டத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தடுத்துள்ளார். அவர் தென்னிலங்கை மக்களின் வாக்கு வங்கியை நிரப்பவே இவ்வாறு செயற்படுகின்றார். எமது மக்களுக்கு சேவையை பெற்றுக் கொடுக்க நானும் எனது கட்சியும் ஆர்வமாக உள்ளோம். மாகாண சபைத் தேர்தல் பழைய முறையில் நடக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஆட்சி எவ்வாறு நடந்தது என்பதை மக்கள் அறிவார்கள். அடுத்த அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசை நிலை நாட்ட வேண்டும். நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பலத்தைக் கொடுக்க வேண்டும் - என்றார். (ற-8)

## றெஜினாவுக்கு...

நடத்திபோராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம், காட்டுப்புலத்தைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி பாலியல் கொடுமைகளுக்குப் பின்னர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டாள். சிறுமிக்கு நீதி கிடைப்பதற்காகவும், குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்கக் கோரியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

நாடு முழுதும் இடம் பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளைக் கண்டித்தும், சிறுமிக்கு நீதி கடைக்க வேண்டியும் இன்று மன்னாரில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. காலை 9 மணிக்கு முருங்கன் பேருந்து தரிப்பிடத்தில் அமைதிப் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ள னர். மன்னார் மாவட்ட ரீதியில் முழுக் கடையடைப்பை மேற்கொள்ளவும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ற-21,56)

# தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் இந்து பதக்கவேட்டை



யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி இரண்டு தங்கப்பதக்கங்கள், இரண்டு வெள்ளிப்பதங்கள், மூன்று வெண்கலப் பதக்கங்கள் என ஏழு பதக்கங்களைக் கைப்பற்றியது.

திருகோணமலை அக்கிரபோதி தேசிய கல்லூரியில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 20 வயதுக்கு உட்பட்ட 62 கிலோ எடைப் பிரிவில் எஸ்.சிந்துஜன் சினெச் முறையில் 90 கிலோ கிளின் அன்ட் ஜக் முறையில் 115 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 205 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 105 கிலோவிற்கு மேற்பட்ட பிரிவில் ரி.கிரிசான் சினெச் முறையில் 90 கிலோ கிளின் அன் ஜக் முறையில் 95 கிலோவுமாக ஒட்டுமொத்த 185 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் 105 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 78 கிலோ கிளின் அன்ட் ஜக் முறையில் 91 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 169 கிலோ பளுவை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

17 வயதுக்கு உட்பட்ட 77 கிலோ எடைப் பிரிவில் எம்.திசாந் சினெச் முறையில் 70 கிலோ கிளின் அன்ட் ஜக் முறையில் 80 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 150 கிலோ பளுவை தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் 94 கிலோ எடைப் பிரிவில் கிசாளன் சினெச் முறையில் 60 கிலோ கிளின் அன் ஜக் முறையில் 75 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 135 பளுவை தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

62 கிலோ எடைப் பிரிவில் எஸ்.சஜிசன் சினச் முறையில் 70 கிலோ கிளின் அன் ஜக் முறையில் 80 கிலோவுமாக ஒட்டுமொத்தமாக 150 கிலோ பளுவை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் 94 கிலோவிற்கு மேற்பட்ட நிறைப் பிரிவில் எஸ்.அபிசன் சினெச் முறையில் 70 கிலோ கிளின் அன்ட் ஜக் முறையில் 80 கிலோவுமா்க ஒட்டுமொத்தமாக 150 கிலோ பளுவை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## யாழ்ப்பாணம் மத்திக்கு பளுதூக்கலில் வெள்ளி



யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சிவப்பிரியன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

திருகோணமலை கந்தளாய் அக்கிரபோதி தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 69 கிலோ எடைப்பிரிவில் சினெச் முறையில் 89 கிலோ பளுவையும், கிளின் அன்ட் ஜக் முறையில் 111 கிலோ பளுவையும் என மொத்தமாக 200 பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

## வவுனியா தமிழ் மத்திக்கு பளுதூக்கலில் வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.வசிகரன்; வெண்கலப்பதகம் வென்றார்.

திருகோணமலை கந்தளாய் அக்கிரபோதி தேசிய பாடசாலையில் நேற்றுமுன்திம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 77 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 73 கிலோ பளுவையும், கிளின் அன்ட்; ஜக் முறையில் 70 கிலோ பளுவையும் என மொத்தமாக 143 பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




## செம்மலை வித்திக்கு தைக்கொண்டோவில் வெண்கலப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பெண்களுக்கான தைக்கொண்டோவில் செம்மலை மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த த.தர்சிகா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

திருகோணமலை மக்கேசர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 57-62 கிலோ எடைப் பிரிவில் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த த.தர்சிகா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். இந்தப் பதக்கம் வடமாகாணத்துக்கு தைக்கொண்டோவில் கிடைத்த ஒரேயொரு பதக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)

## கலையொளி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 3

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட "வடக்கின் இளவரசன் யார்" துடுப்பாட்டத் தொடரில் சம்பியனானது இணுவில் கலையொளி அணி.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 39 ஓட்டங்களுக்குச் சகல. இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மோகன்ராஜ் 19 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் தீபன் மூன்று இலக்கைக் கைப்பற்றினார்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 4.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டும் பெற்றது. 17 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கலையொளி.

பந்துவீச்சில் ஜீவிந்தன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். அவரே ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ம-23)



# குரோசியா காலிறுதியில்

## போராடித் தோல்வியடைந்தது டென்மார்க்



உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் டென்மார்க்கை வீழ்த்தியது குரோசிய அணி.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் இதுவரை எந்த ஆட்டமும் கண்டிராத ஆரம்பத்தை குரோசியா - டென்மார்க் அணிகள் இணைந்து வழங்கின. ஆட்டத்தின் 52ஆவது செக்கனில் டென்மார்கின் கோலைப் பதிவுசெய்தார் மத்தியாஸ். ஆனால் மூன்றாவது நிமிடத்தில் குரோசியாவின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் மரியோ. அதன் பின்னர் கோல்கள் என்பது இரண்டு அணியினருக்கும் எட்டாக்கனிதான்.

27ஆவது நிமிடத்தில் டென்மார்க்குக்கு முன்னிலை பெற அருமையான வாய்ப்புக் கிடைத்தது. அப்போது டென்மார்க் வீரர் ப்ராத்வெய்ட் முயற்சியை குரேசியாவின் கோல் காப்பாளர் சுபாசிச் தடுத்தார். இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டே நிமிடங்களில் முன்னிலை பெறக்கூடிய வாய்ப்பு குரோசியாவுக்குத் தேடிவந்தது. மோவிக் அடித்த பந்தை டென்மார்க் அணியின் கோல் காப்பாளர் தடுத்தார். முதல் பாதியின் முதவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின்போது குரோசிய அணியின் தலைவர் மோவிக் டென்மார்கின் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டார். முதல் பாதியின் சுதந்திரமாக விளையாட அனுமதிக்கப்பட்ட அவர் இரண்டாம் பாதியில் டென்மார்க்கால் கவனிக்கப்பட்டமை ஆச்சரியத்திலும் பெரும் ஆச்சரியம். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலையே பெற்றிருந்தன. கூடுதலாக வழங்கப்பட்ட 30 நிமிடங்களில் கோல்கள் எதுவும் பதிவாகவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதில் டென்மார்க் அடித்த முதல் வாய்ப்பை குரோசிய கோல் காப்பாளர் தடுத்தார். அடுத்து குரோசியா அடித்த கோலையும் டென்மார்க் கோல் காப்பாளர் தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து. இரண்டாவது வாய்ப்பை டென்மார்க் கோலாக மாற்றியது. இதனால் 1:0 என முன்னிலை வகித்தது. குரோசியா இரண்டாவது வாய்ப்பை கோலாக மாற்றியதால் 1:1 என சமநிலை அடைந்தது.

டென்மார்க் மூன்றாவது வாய்ப்பை கோலாக மாற்றியதால் 2:1 என முன்னிலை பெற்றது. குரோசியாவும் அடுத்த வாய்ப்பை கோலாக மாற்றியது. இதனால் இரு அணிகளும் 2:2 என சமநிலை பெற்றன.

டென்மார்க் அணியின் 4ஆவது வாய்ப்பை குரோசிய அணியின் கோல் காப்பாளர் அபாரமாகத் தடுத்தார். குரோசியா அணியின் 4ஆவது வாய்ப்பையும் டென்மார்க் கோல் காப்பாளர் தடுத்ததால் சமநிலை நீடித்தது. இந்தக் கட்டத்தின்போது ரசிகர்களில் கூக்குரலால் மைதானம் அதிர்ந்தது.

டென்மார்க் அணியின் கடைசி வாய்ப்பை குரோசிய கோல் காப்பாளர் தடுத்து விட்டார். இதனால், குரோசியா அணி தனது கடைசி வாய்ப்பை கோலாக மாற்றி 3:2 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வீழ்த்தி காலிறுதியில் நுழைந்தது.

(ம)







# இந்தியா - இங்கிலாந்து தொடர் இன்று ஆரம்பம்



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூவகை ஆட்டங்களையும் கொண்ட நீண்ட துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடர், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் என்பன இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளன. முதலாவதாக ரி20 தொடர் நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி இரவு 10 மணிக்கு முதலாவது ரி-20 ஆட்டம் இன்று நடைபெறுகிறது. மன்செஸ்டரின் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. இரண்டாவது ரி-20 ஆட்டம் கார்டிபில் எதிர்வரும் 6ஆம் திகதியும், மூன்றாவது ரி-20 ஆட்டம் பிறிஸ்டலில் எதிர்வரும் 8ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதியும், டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடரில் கலந்துகொள்வதற்காக இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி அங்கு நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி அசுர பலத்தில் உள்ளதால் இந்தியாவுக்கு மிகவும் சிரமம் நிறைந்ததாகவே இந்தத் தொடர் அமையும் என்று கருதப்படுகிறது.

(ம)

# காலிறுதியில் பிரேசில்





கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற மெக்சிக்கோவுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்று காலிறுதிக் குத் தகுதிபெற்றது பிரேசில்.

கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் என்றாலே பிரேசில் என்றுதானே அர்த்தம். எனினும் எதிரணியான மெக்சிக்கோவும் பலம் வாய்ந் தது என்பதால் ஆட்டத்தின் மீது பெரும் எதிர் பார்ப்பு இருந்தது. இரண்டு அணிகளதும் கோல் கம்பங்கள் மாறிமாறி ஆக்கிரமிக்கப் பட்டன. எனினும் கோல்கள் எதுவும் பதிவாக வில்லை. நெய்மரை மெக்சிக்கோ தனது 'காட்டுமிராண்டித்தனமான' கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியிலும் அவ்வாறானதொரு நிலைதான் இருந்தது. எனினும் ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் பிரேசிலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் நெய்மர். மின்னல் வேகத்தில் சறுக்கிச் சென்று அந்தக் கோலை அவர் பதிவுசெய்திருந்தார். சிறிது தாம தித்திருந்தாலும் பிரேசிலுக்கு பொன் னான வாய்ப்பொன்று வீணாகப் போயிருக்கும். அந்தளவுக்கு அருமை யான கோல் நெய்மர் பதிவுசெய்த கோல்.

அதன்பின்னர் நெய்மர் - காஸ்மிரோ இணை மெக்சிக்கோவின் வியூகங் களை முறியடித்துக் கொண்டிருந்தது. 'அரண்' போல் நின்று அணியைக் காப்பாற்றினார் நெய்மர். இதனால் அவ்வப் போது பல அடிகளையும் வாங்கிக் கொண் டார். 88ஆவது நிமிடத்தில் ரொபேட்ரோ பதி வுசெய்த கோல் பிரேசிலின் வெற்றியை உறுதிப்படுத்தியது. இந்தக் கோலுக்கான 90சதவீத முயற்சிகளையும் நெய்மரே மேற் கொண்டிருந்தார். அவர் வழங்கிய பரிமாற் றத்தையே ரொபேட்ரோ கோலாக்கினார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பிரேசில். (ம)

## உலகக்கிண்ணம் வெல்ல பிரேசிலுக்கு அதிக வாய்ப்பு

உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற பிரேசில் அணிக்கு அதிக வாய்ப்புள்ளது என்று கருதப் படுகிறது.

இந்த உலகக்கிண்ணத் தொடர் முன்னைய தொடர்களில் இருந்து முழுவதுமாக மாறுபட் டுள்ளது. காலிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகும் முன்னரேயே ஜாம்பவான் அணிகள் ஒன்றன் பின்னர் ஒன்றாக வெளியேறியுள்ளன. கிண் ணம் வெல்லத் தகுதியானவை என்று எதிர்வு கூறப்பட்ட போர்த்துக்கல், ஆர்ஜென்ரீனா, ஸ்பெய்ன், ஜேர்மனி, இத்தாலி என்பன இல் லாமல்தான் காலிறுதி ஆட்டங்கள் நடைபெற வுள்ளன. இதனால் பிரேசிலுக்கு சவால் வழங் கக்கூடிய அணிகள் தொடரில் இருந்து வெளி யேறிவிட்டன. எஞ்சியுள்ள அணிகளில் பிரான்ஸ், இங்கிலாந்து அணிகளே பிரேசி லுக்கு சவால் வழங்கக்கூடியவை. இதனால் பிரேசிலுக்கான வாய்ப்பு இம்முறை அதிகம் உள்ளதாகக் கருதப்படுகிறது. (ம)

பிரத்தியேக வகுப்பு
CHEMISTRY
K.Subeesan
Group & Personal Classes...
2018 / 2019 / 2020
077 430 7829 (CS/17944) (11,17)

நிரந்தர வேலை வாய்ப்பு
இளைஞர் யுவதிகளே ! கிளிநொச்சியில் இயங்கிவரும் எமது Everest Company யானது உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பை அளித்துள்ளது.
Distributor · Assistant Manager · Supervisor · Manager
ஆகிய பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான தகைமைகளாக O/L, A/L படித்தவர்களுடன் Diploma செய்தவர்களும் விரும்பத்தக்கது. தங்குமிட வசதிகள் உண்டு. வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
தொடர்பு - 077 1717 278, 076 4540 595, 076 9393 965

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## 12 தடவைகள் வீழ்த்தப்பட்ட நெய்மர் நெய்மருக்கு அரணாக காஸ்மிரோ

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தின் போது மெக்சிக்கோ அணி நெய்ம ரையே தனது முக்கிய இலக்காகக் கொண்டு விளையாடியது. நெய் மரை முறையற்ற விதங்களால் கட்டுப்படுத்துவதுதான் மெக்சிக் கொவின் வியூகமா என்று எண் ணும் அளவுக்கு மிகவும் மோச மாக கட்டுப்படுத்தப்பட்டார் நெய்மர். ஆட்டத்தின் ஆரம்பம் முதலே மெக் சிக்கோவின் கழுகுப் பார்வை நெய்மரின் மீது இருந்தது. இத னால் நெய்மர் பந்தை தனது கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவர எத்த னித்த போதெல்லாம் அவர் முறை யற்ற விதத்தில் அணுகப்பட்டார். இரண்டாம் பாதியின் 51ஆவது நிமிடத்தில் நெய்மர் பிரேசிலின் கோலைப் பதிவுசெய்த பின்னர் மெக்சிக்கோ இன்னும் முரட்டுத்த னமாக அவரைக் கட்டுப்படுத்தி யது. இதனால் சக வீரரான காஸ் மிரோ நெய்மரிடத்தில் இருந்து மெக்சிக்கொவின் கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் அரணா கச் செயற்பட்டார். 71ஆவது நிமிடத் தில் நெய்மர் விழவைக்கப்பட்டதை அடுத்து 5 நிமிடங்கள் ஆட்டம் தடைப்பட்டது. அந்தளவுக்கு மோச மான வகையில் இருந்தது மெக் சிக்கோவின் ஆட்டம். (ம)

## விடைபெற்றார் இனிஸ்டா

பன்னாட்டு கால்பந்து அரங்கில் இருந்து தோல்வியுடன் விடை பெற்றார் ஸ்பெய்ன் அணியின் நட்சத்திர வீரர் இனிஸ்டா.

உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் காலிறுதிக்குத் தகுதிபெ றும் ஆட்டமொன்று நேற்றுமுன் தினம் நடைபெற்றது. பலம் வாய்ந்த ஸ்பெய்ன் ரஷ்யாவிடம் 3:4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது. இந்த ஆட்டத்தில் மட்டுமல்லாமல் இந் தத் தொடரிலேயே இனிஸ்டா பெரிதான தாக்கம் எதையும் செலுத்தவில்லை. இதையடுத்தே அவர் பன்னாட்டு அரங்கில் இருந்து தனது ஓய்வை அறிவித் தார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.